# வீறுகவியரசர் முடியரசன் கவிதைகள்

## பொருண்மை வகைத் தொகுப்பு (காதல்)

தொகுப்பாசிரியர்
பாரி முடியரசன்

### உள்ளுறை

பக்கம்


**பதிப்புரை**
**முன்னுரை**

**காதல்**

1. காதற்சிலை
2. காதல் நெஞ்சம்
3. இன்பமில்லை
4. ஏன் வரவில்லை
5. உன்னுருவே தோன்றுதடி
6. பணியாள் வேண்டாம்
7. சிற்றூர்ச் செலவு
8. குளிர் நிலா
9. குழந்தை இன்பம்
10. தோற்றுவிட்டேன்
11. எம்மவர் தந்தார்
12. முகில்விடு தூது
13. இழந்த காதல்
14. ஏன் மறந்தாள்?
15. இனிப் பொறுக்க முடியாது
16. நாணம் ஏனோ?
17. முத்தம் தந்தான்
18. இன்னும் வரக்காணேன்!
19. எந்தவிதம் மறந்தார்?
20. ஏனிந்த வம்பு?
21. வருவாரோ? வாராரோ?
22. ஆவி கலந்த அழகி
23. நடந்தது என்ன?
24. ஆடினாள்
25. ஆட வாராய்!
26. விளையும் பயிர்
27. கூடித் திரிவோம்
28. வீணை மீட்டுவோம்
29. ஆற்றங்கரைக் காதலி
30. பேசும் தெய்வம்
31. செற்றம் தவிர்ந்தேன்
32. பிள்ளைக் குறும்பு
33. குறிஞ்சி

34. போது விரிந்தது
35. கவிதைக் காதலி
36. காதற் காவியம்
37. கவிதை உலகு
38. இதுதான் அவர் வேலை
39. ஓடக்காரன்
40. என் காதலி
41. அவளொரு காவியம்
42. தானே வருவாள்
43. யாழெடுத்து வா
44. கவிதை எழுதிய காகிதம்
45. காதல் இலக்கணம்
46. அழகிய மணவாளன்
47. பிரிவில் கண்ணகி
48. காலம் வரும் நேரம் வரும்
49. அவள்தான் பாடவைத்தாள்
50. புதிய உலகம்
51. பனி பொழியும் நிலவில்
52. அவர் வரவில்லை
53. இசை மாறிய வீணை
54. காதலர் சொல்லாடல்
55. பருவப் பேச்சு
56. காவிய மேடையில்
57. உவமையறியாக் கவிதை
58. அதுவா? இதுவா?
59. இரண்டு குழந்தை
60. பள்ளிக்கு அழைத்தவள்
61. மையல் தீர
62. பேதமேது?
63. சிரிப்பதேனடி?
64. பொங்கல் விழா
65.'வீரகாவியம்' காப்பியத்திலிருந்து சில பாடல்கள்

**வீறுகவியரசர் முடியரசனார் புகழ் மாலை**
**வீறுகவியரசர் முடியரசனார் வாழ்க்கைக் குறிப்பு**
**பாரி முடியரசன் பற்றி**

# காதல்

[வீறுகவியரசர் முடியரசனார் 'காதல்' பற்றிப்
பாடிய கவிதைகள் இப்பொருண்மையில் தொகுக்கப்பட்டுள்ளன]

**(இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைககளின் தலைப்புகளுக்குக் கீழ், அக்கவிதைகள் இடம்பெற்ற நூல்களின் பெயர்கள் அடைப்புக் குறிக்குள் தரப் பெற்றுள்ளன)**

## 1. காதற் சிலை (குறுங்காவியம்)
(நூல்:—முடியரசன் கவிதைகள்)

நிலைமண்டில ஆசிரியப்பா

தண்மலைச் சாரல் சார்தரும் சிற்றூர்
கண்கவர் பொழில்சூழ் கருமலைக் குறிஞ்சி
எனும்பெயர் கொண்டெழில் இலங்கிய தவ்வுழி
இனமயில் அகவ இருந்ததோர் குன்றம்;

**கலைஞன் கோட்டம்**

குன்றின் அடியில் சிற்பக் கோட்டம்
ஒன்றினை நிறுவி உலகோர் வியக்க
வாழ்ந்தனன் சிற்பம் வல்லான் ஒருவன்;
போழ்ந்தகற் பாறையிற் புகுத்திய புதுமை
கண்டார் அவனைக் கடவுளே என்பர்;
கற்பனைத் திறனும் கைச்சிற் றுளியும்
பொற்புடன் படைத்த அற்புதப் பொருளெலாம்
தொடாஅது நின்று தொலைவில் காண்போர்
விடாஅது நோக்கி வியப்புற் றவையெலாம்
உயிர்ப்பொரு ளென்றே உரைப்பர்; அவர்தாம்
அயிர்ப்பொரு சிறிதும் அடையார்; அருகில்
தொட்டுப் பயின்றபின் துணிகுவர் சிலையென;
எட்டுத் திசையும் நிகரிலை எனமனம்
விட்டுப் புகழ்வர்; விளைபுகழ் மொழிகள்
கொட்டும் பொருள்கள் குறியாக் கொள்ளான்
கலைவளர் நோக்கம் ஒன்றே கருத்தில்
நிலையாக் கொண்டான் நினையான் பிறிதை;
கலையே அவனாம் அவனே கலையாம்
கலைஞன் எனும்பெயர்க் கமைந்தோன் அவனே;

**கண்ணொடு கண்ணினை**

கண்ணில் ஒளியும் கையில் உளியும்
எண்ணிற் சிலையும் இளமையிற் பொலிவும்
உடலிற் கட்டும் ஒருங்குடன் பெற்றோன்
இடமுடைக் கோட்டத் திருந்துழி ஆங்கண்
அழகிள நங்கை அவன்முன் நின்றாள்;
பழகிய தோழியும் பக்கலில் நின்றனள்;
நிமிர்ந்தவன் நோக்கினான் நீள்விழி மீட்கிலன்
எதிரெதிர் விழிகள் இமையா திருந்தன;

**வினாவும் விடையும்**

பெண்மையின் இயல்பால் பேதை நாணினள்;
அண்மையில் நின்ற ஆருயிர்த் தோழி,
“எங்கள் தலைவி மங்கையர் திலகம்
உங்களை நாடி உவந்திவண் வந்தனள்
வந்தவள் தன்னை வைத்தகண் எடாஅது
நுந்தம் விழியால் நோக்குதல் முறையோ?”
என்றொரு வினாவை எழுப்பிட, எழுந்தவன்
ஒன்றிய துயில்கலைந் துணர்ந்தெழு பவன்போல்
விழிகளைத் துடைத்து மீண்டுற நோக்கி,
“எழிலுற வடித்த என்சிலை உயிருடன்
எழுந்திவண் வந்ததோ எனநான் மயங்கிக்
கொழுந்து நிகருடற் கொடியிடை யாள்தனை
உற்று நோக்கினேன் உறுபிழை பொறுப்பீர்!
எற்றுக் கிவ்வயின் என்பால் வந்தீர்?
பொற்றொடி இவள்யார்? புகலுதி” என்றனன்.

**காரணம் கூறினள்**

“முழுதுணர் கலைஞ! முன்னிநீ படைத்த

பழுதிலாச் சிற்பக் கோட்டம் நிறைதரு
சிலையெலாம் கண்டுநின் கலையெலாம் கண்டிவண்
உலவலாம் எனமனம் உந்திட வந்தனம்;
வளநா டாளும் வடிவேல் மன்னவன்
உளமகிழ் மகளாய் ஒருதனி வந்தவள்
முரசொலி முழங்கும் முத்துவள நாட்டின்
அரசிளங் குமரி யாமிவள்'' என்றனள்;

**வரவுரை கூறினன்**

''கலைநலம் விழையும் கருத்துடன் வந்தீர்!
தலைதரும் வணக்கம் தந்தனென் நுமக்கே
வருக வருக! வடிவுடைச் சிலைநலம்
பருக வருக! பாவையீர்! வருக''என்
றக்குல மகளிரை அழைத்துடன் சென்று
தக்கநற் சிலையெலாம் தனித்தனி காட்டினன்;

**படிமம் வேண்டினள்**

சிலைத்திறம் காட்டும் சிற்பியின் வினைத்திறம்
கலைத்திறம் அனைத்தும் கண்டு வியந்து
பலபடப் புகழ்ந்து ''பாரில் நிகருமக்(கு)
இலைஎன உணர்ந்தேன் எனைப்போல்ஒருசிலை
கைத்திறன் முழுதும் காட்டிச் சமைத்துத்
தைத்திரு நாளில் தருதல் ஒல்லுமோ?
விழைந்ததென் உள்ளம் வேண்டினென் நுமை''எனக்
குழைந்து கனிந்து கூறினள் அரசி;

**சிற்பியும் ஒப்பினான்**

''எழில்விளை நிலமே! என்தொழில் அதுவாம்,
முழுநலம் பெறுசிலை முடிப்பேன், இதுவரை
கற்பனைத் திறத்தால் கற்சிலை சமைத்தேன்
பொற்புடை நின்போல் பொற்சிலை சமைக்க
இன்றே தொடங்குவென் ஏழாம் நாளில்
நன்றே முடிப்பேன் நல்லாய்! என்முன்
அசைதல் இன்றி அவ்வயின் நில்''லென;
நசையுடன் நின்றனள் நங்கையும் அவன்முன்.

**உறுப்பெழில் நோக்கினான்**

நின்ற நிலையை நிமிர்ந்தொரு முறைமனம்
ஒன்றும் படியவன் உற்று நோக்கினன்;
பின்பவள் மலர்த்தாட் பெருவிரல் நோக்கி
இன்ப வல்லியின் இடையினை நோக்கி
இடையில் ஒன்றும் இடக்கை நோக்கி
வடிவொடு தொங்கும் வலக்கை நோக்கி
எடுத்த மார்பும் தொடுத்த தோளும்
கழுத்தின் வடிவும் கண்டபின் முகத்தின்
வட்டம் நோக்கி வாயிதழ் நோக்கி
ஒட்டும் புருவம் ஒண்குழைச் செவியை
எட்டும் விழியின் இணைஎழில் நோக்கிக்
கதுப்பும் நுதலும் கண்கவர் மூக்கும்
விதுப்புறநோக்கி வெய்துயிர்த் தனனே,

**சிற்றுளி வல்லதோ**

அவ்வயின் நின்ற ஆருயிர்த் தோழி
''இவ்விதம் பெருமூச் செறிவதன் நோக்கம்
யாது''என வினவ ஆடவன் கூறுவான்
''மாதுடல் அமைப்பின் மாண்புகழ் யாவும்
சிற்பச் செந்நூல் செப்பும் இலக்கணச்
சொற்படி கண்டேன் சொக்கினேன், இவளுரு
ற்புதப் படைப்பாய் அமையும் எனினும்
விழியில் வழியும் ஒளியும் அருளும்

பிழிதேன் பொழியும் மொழிபுகல் வாயின்
இதழில் தவழும் இனிய மூரலும்
புதுமைச் சிலையில் புகுத்திக் காட்ட
என்கைச் சிற்றுளி வல்லதோ எனநான்
உன்னிப் பார்த்தேன் உயிர்த்ததென் நெஞ்''செனு;

**இருவர் நெஞ்சம்**

சிலையாய் நின்றவள் சிரித்தனள்; வாயில்
நிலையாய் நிற்கும் நிரல்படு முத்தின்
ஒளிபட அவன்முகம் களியால் மலர்ந்த(து);
அளிநிறை நெஞ்சை அவன்பால் வைத்துத்
தளிரடி பெயர்த்துத் தையல் நடந்தனள்;
பேதையின் பின்செல்லும் பேதுறும் மனத்தைத்
தீதிலன் தடுத்துத் திருப்பினன் அவள்சிலை
படைத்திட வேண்டும் பணியுள ததனால்;
உடைத்தொரு கல்லில் உளியை நாட்டினன்
தளிரடிச் சிலம்பொலி உளியடிக் கெழுமொலி
குளிர்மலைச் சாரலில் குலவி எதிர்ந்தன
சிலம்பொலி தாழ்ந்தது சிற்றுளி ஒலித்த(து)

**முடிந்தது படிமம்**

உண்ணான் உறங்கான் உடல்நலம் பேணான்
கண்வழி புகுந்து கருத்திற் கலந்தவள்
வண்ண உருவம் வடிப்பதே தொழிலாய்
ஒவ்வோ ருறுப்பும் உன்னி நோக்கிச்
செவ்வனே முடித்தனன் செப்பிய எழுநாள்
முடிந்தது சிலையும் முடிந்தததது நெஞ்சி
படிந்த உருவின் படிமம் கண்டனன்;
காதல் மடவார் கடைக்கண் பணித்தால்
ஈதொரு பணியோ? ஏழ்சிலை முடிப்பர்!
காதல் வேகம் கடிதே கடிதே!

**சிலையா அவளா?**

மன்னன் மகளாம் மயிலியும் வந்தனள்
நன்னர்ச் சமைத்த நயத்தகு படிமம்
கண்டனள் வியப்புக் கொண்டனள் மிகவே;
'ஒண்டொடி என்போல் உளதோ இவ்வுரு?
விண்டிடு மெய்'என வினவினள் தோழியை;
மயிலியைச் சிலையின் மருங்கினில் நிறுத்திப்
பயிலியற் சாயல் பார்த்தனள், விம்மி
'எதுசிலை எதுநீ எனக்காண் பரிது!
புருவச் சிலையில் பூத்துள வியர்வால்
உருவச் சிலைஎது உன்னுடல் எதுவென
உணர வல்லேன்; ஒப்பிலை இவற்கே!
இணர்மலர்க் கோதையின் இதழின் சிரிப்பும்
இன்னருள் விழியும் எப்படிப் படைத்தனை?
கற்பனை மிகுத்திடும் சிற்பக் கலைஞ!
நிற்புகழ்ந் தேத்த முற்படும் எனக்கு
நாவும் ஒன்றே நானென் செய்கேன்?'

**சிலையில் ஒருகுறை**

''பலப்படப் புகழும் பாவாய்! என்றன்
கலைமுறைத் திறனைக் காட்டிலேன்; நெஞ்சில்
வாழும் வடிவின் வார்ப்படம் இவ்வுரு
ஊழால் அமைத்திடும் உருவினில் ஒருகுறை
உளதிவள் நெஞ்சை உழியாற் படைத்த
சிலையிற் பொருந்தச் செய்திலேன்''என்றனன்;

**நெஞ்சம் கலந்தன**

'நெஞ்சை நும்பால் நிறுத்திச் சென்றேன்
வஞ்சம் செய்தீர்' என்றனள் வஞ்சி;

தொலைவில் இருக்கும் சிலையைக் காணத்
தோழி அகன்றனள், தூயநற் கலைஞன்
'வாழி நெஞ்சே வாழிய மயிலி
என்றன் நெஞ்சும் உன்றன் நெஞ்சும்
ஒன்றிய படியால் எடுத்ததைச் சிலையில்
வைத்திட மறந்தேன் மைத்தடங் கண்ணி!
தைத்திரு நாளில் தாம்கலந் தனவே;
மன்னன் மகள்நீ மயலுறும் என்பால்
அன்புடன் கடைக்கண் அருளுதி யோ?'என,

**காதல் மன்னன்**

'மாண்புயர் கலையில் மணிமுடி யரசர்!
ஏனுமக் கையம்? என்மன வுலகில்நீர்
ஆளும் மன்னர்! அன்பரீர் நும்மை
நாளும் நினைந்தே நலிவுறு கின்றேன்'
என்றலும் தோழி இடையில் வந்து
நின்றனள் பின்னர் நீங்கினர் இருவரும்;
ஆடினன் பாடினன் அருவி நீரில்
ஆடினன் ஓடினன் ஆண்டுள மலர்களைச்
சாடினன் அச்சிலை சார்ந்துதன் மெய்யால்
மூடினன் காதலில் மூழ்கினன் சிற்பி;

**வேந்தனும் சிலையும்**

வேட்டம் போகிய வெள்வேல் வேந்தன்
கோட்டம் காணிய குறுகினன் ஆங்கண்
'குறிஞ்சி நாட்டின் கோமகன் வந்தான்
அருந்திறல் அரசர்க் கரசன் வந்தான்'
என்றிரு காவலர் இசைத்திட, எழுந்து
சென்று வணங்கிச் சிற்பக் கலைஞன்
'குறிஞ்சி நாட! நின் கொற்றம் வாழி!
செறிந்தநல் லறஞ்சேர் செங்கோல் வாழி!
தெரிந்த வகையால் செய்துளேன் சிற்பம்
அறிந்திட வந்துளீர் அடியனேன் வணக்கம்;
என்று கூறி இயற்றிய சிலைஎலாம்
நன்று காட்டிட, நாடாள் வேந்தன்
அழகோ வியமாய் ஆண்டுள சிலையை
விழியால் பருகினன் வியந்தனன் அவன்திறம்;
நின்றுள சிலையெலாம் நிரல்பட நோக்குவோன்
ஒன்றிய ஒருசிலை உற்று நோக்கினன்
மயிலியின் சிலையில் மயங்கி அதனை
விலையால் பெறுவான் விழைந்தனன்; சிற்பக்
கலைஞன் அதன்நிலை கழிறினன் விரித்து;

**ஆசை அரும்பியது**

வடிவேல் மன்னன் மகளெனக் கேட்டலும்
கொடியிடை யிவள்போல் குவலயம் யாங்கணும்
வடிவுடை யழகி வாழ்ந்திடல் காண்கிலேன்
என்னடி வணங்கித் திறைகொடுத் திருக்கும்
மன்னவன் இவற்கோர் மனங்கவர் மகளுளாள்
என்ப தறிந்திலேன் இன்றே தெரிந்துளேன்
பின்பவட் காண்பேன் பேதையை மணப்பேன்
என்று மனத்துள் எண்ணினன் சென்றான்.

**தூது தோற்றது**

சென்ற குறிஞ்சியான் செய்தி எழுதி
வடிவேல் மன்னனின் மகட்கொடை வேண்டிக்
கடிதிற் செல்லும் காவலற் போக்கினன்;
முடங்கல் கண்ட முழுமதி முகத்தாள்
தடங்கல் சொல்லித் தானொரு சிற்பிக்
குரியள் என்பதை உணர்த்துக என்றனள்;

**சீற்றம் எழுந்தது**

சிறியவள் விடுத்த செய்தியைக் கேட்டுச்

சீறி எழுந்தனன், ‘சிற்றர சன்மகள்
மீறிய உரைசொல மேவிடும் செருக்கைக்
கூரிய மதிகொடு கொட்டம் அடக்குவேன்’
தீப்பொறி சிதறச் சினந்துரை கூறிக்
‘கூப்பிடு அந்தக் கொடுஞ்செயற் சிற்பியை’
என்றலும் ஏவலர் ஏகினர் கொணர்ந்தார்;

**சூழ்ச்சி சுழன்றது**

நின்றிடும் சிற்பியை நெருங்கினன் குறுகிக்
‘கலைவலோய்! நின்றன் காதற் குறிப்பின்
நிலையெலாம் அறிகுவன் நீயொரு குடிமகன்
அரசியை மணத்தல் அடுக்குமோ? அதனால்
கருமலைக் குறிஞ்சிக் காவலன் ஆக்கிடக்
கருதி உனையிவண் கடிதின் அழைத்தேன்;
என்மொழி கேட்க இசைகுவை யாயின்
மன்மகள் நினக்கு மனைமகள் ஆவள்
உன்கலைத் திறனை உலகமும் ஏத்தும்’
என்றனன் வேந்தன்; இசைந்தனன் சிற்பி;
‘குன்றடர் மலையைக் குடைந்தொரு கால்வாய்
சென்றிடப் படைத்துச் சிற்பத் திறமெலாம்
காட்டி அதனிரு கரையிலும் அமைத்திடல்
வேட்டனன் யானே விரைவினில் முடிப்பின்
வேட்டவள் தன்னை வியன்மணம் கொள்வாய்;
காட்டுக நின்திறம் கலைஞ! என் ஆணை
வினைகள் முடியுமுன் விழைவோட் காண
முனைவதும் குற்றம்இம் மொழியுமென் ஆணை’
எனமொழிந் திருந்தனன் இறையவன் அரியணை;

**சுழல்மனம் துணிந்தது**

மனம்நிறை துயரினன் மயங்கினன் செய்வகை
யாதென அறிகிலன்; ‘யானென் செய்குவென்
தீதுறு மோ?எனச் சிந்தனை செய்தனன்;
மயிலியின் திருவுறு மனக்கண் தோன்றலும்
வெயிலவன் போல வெண்முகம் சிவந்தது;
‘குறிஞ்சி நாட; நீ கொடுத்தஇவ் வாணையை
விரைந்து முடித்துநான் வெற்றியுங் கொள்வேன்’
எனுமொழி கூறி ஏகினன் சிற்பி;

**வினைத் திறன் வெற்றி**

காதல் உணர்வு கருத்தினில் உந்தி
மோதி எழுதர முனைந்தனன்; உழைப்பால்
மலையைக் குடைந்தனன் மாபெருங் கால்வாய்
அலையொடு பாய்ந்த(து) அதனிரு கரையில்
உலகம் உவப்ப உயர்பெருஞ் சிலையெலாம்
படைத்தனன்; ஆண்டுகள் பலப்பல கடந்தன
உடலந் தளர்ந்தனன் உள்ளந் தளர்ந்திலன்
தடந்தோள் வீரன் தலைநிமிர்ந் திருந்து
வெற்றிச் செருக்கொடு விழித்து நோக்கினன்
பெற்ற களிப்பால் பெருமூச் செறிந்தனன்;
சிற்றுளி கைவிரல் பற்றி யிருந்தது;
காதற் கனவு பலித்திடக் கண்டேன்
ஏதுக் கினித்துயர்? இவ்வுல காள்வேன்
நானும் அவளும் வானம் பாடி
போலப் பறந்து வானில் திரிவோம்
எனப்பல கற்பனை எண்ணி நின்றனன்;

**சூழ்ச்சி வென்றது**

சினப்படு வேந்தன் செய்ததோர் சூழ்ச்சியால்
ஆங்கோர் கிழவி அழுது வந்தனள்;
‘தீங்குனக் கென்ன? செப்’பெனச் செப்பினள்;

'வடிவேல் மன்னன் மகளென வந்த
கொடியிடை மயிலி மடிந்தனள்' என்றாள்;
அலறினன் கதறினன் 'ஐயகோ' என்றனன்
'பலபகல் இரவுகள் பாடுபட் டுழைத்ததால்
உறுபயன் இதுவோ! உலகம் முடிந்ததோ!
இருளெனைச் சூழ்ந்ததோ! இனிஉயிர் விழைவதோ!'
கலைஞன் புலம்பல் காடெலாம் பரவி
மலையகம் மோதி எதிரொலித் தெழுந்தது;
மாதின் சிலைபால் ஓடினன் மயங்கி
மோதினன் முட்டினன் 'மோனத் திருக்கும்
காதற் சிலையே கண்ணீர்த் துளியால்
குளித்திடு! என்னுயிர் குடித்திடு விரைவில்
யாண்டுச் சென்றனை? யாதுநீ எண்ணினை?
ஆண்டு வருவேன் ஆருயிர்க் காதலி!'
என்றவன் புலம்பிக் குன்றினில் ஏறி
நின்றனன் வானை நிமிர்ந்து நோக்கினன்;

**காற்றில் கலந்தான்**

விரலுறு சிற்றுளி வீசி எறிந்தனன்
'மயிலி மயிலி மனங்கவர் மயிலி
மயிலி நானும் வருவேன்' என்று
பலகால் அலறிப் பாய்ந்தனன் கீழே
சிலையாய் நிற்பவள் சீறடி வீழ்ந்தனன்;
கதறலும் உயிரும் காற்றுடன் கலந்தன
சிதறிய குருதி சிலையெலாம் நனைத்தது
கவலைகள் தீர்ந்தான் காதலும் தீர்ந்தான்;
திவலைகள் அலறின சிலைகளும் அலறின
குன்றுகள் அலறின குகைகளும் அலறின
பறவைகள் அலறின பாரெலாம் அலறின;

**அவலப்பாடல்**

மாய்ந்தனன் சிற்பி என்றொரு மாற்றம்
தோய்ந்தது செவியில் துடித்தனள் மயிலி;
'ஐயகோ ஐயகோ ஆர்செய் சூழ்ச்சி?
வையகம் பொறுக்குமோ! வானகம் இருக்குமோ!
உண்மைக் காதலை உலகம் வெறுத்ததோ?
பெண்மைக் கிங்கே பெருந்துயர் தானோ!'
என்றனள் ஏங்கி ஏகினள் குறிச்சிக்
குன்றினில் ஏறிக் குதித்தனள் கீழே
சிலையின் அருகே அவளும் சேர்ந்தனள்
கலையும் உயிருடன் காதலும் தீர்ந்தனள்;
மலையும் மரமும் மலைத்து நின்றன;
அழும்ஒலி போல அவலம் பாடி
இழுமெனும் ஒலியால் இயங்கிய(து) ஆறே

---

**பாடல் குறிப்பு:–** பழமைச் சிறப்பு வாய்ந்த இலக்கிய வளங்கொண்ட பாரசிகம், என்றென்றும் நிலைத்து வாழும் உயிர்க் கவிஞர் பலரைத் தந்துள்ளது. அக்கவிகளுள் 'நிசாமி' என்பவரும் ஒருவர். அவர் படைத்த காவியங்கள் உணர்ச்சி வேகம் மிக்கவை. 'கோசுரு சிரீன்' என்னும் பெருங்காப்பியம் அவர்தம் படைப்புகளுள் ஒன்றாகும். அக் காவியக் கதையைத் தழுவி எழுதப்பட்டது இந்நெடும் பாட்டு.

## 2. காதல் நெஞ்சம்

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

நேரிசை வெண்பா

**அவன் :**

கொல்லும் விழியுடையாய்!
கொவ்வைக் கனியிதழாய்!

அல்லும் பகலுமுன்
அன்புபெற – அல்லற்
படுமென்னை உள்ளத்தாற்
பாராயோ? ஆவி
சுடுதுயரைத் தீராயோ?
சொல்! 1

உள்ளப் பெருநிலத்தில்
ஓங்கிப் படர்வகையில்
அள்ளித் தெளித்துவிட்டாய்
அன்புவிதை – கிள்ளிப்
பறித்தெறியப் பாடுபட்டேன்
பாழாயிற் றே!என்
குறிக்கோளாய் வாழ்வாயோ
கூறு! 2

நண்பர் பலசொன்னார்
நான்மறக்க ஒல்லுவதோ?
கண்ணுள் மணியாய்க்
கலந்துவிட்டாய்! – பண்ணும்
பனுவலுமென் றாகிவிட்டாய்!
பாவிஎனைச் சேர
மனமிலையோ சொல்லிடுவாய்
மற்று 3

**அவள் :**

படுப்பேன், புரள்வேன்,பின்
பஞ்சணையில் கண்ணீர்
விடுப்பேன், எழுந்திருந்து
வீழ்வேன்; – தொடுக்குமுயிர்
தாங்கவழி யானறியேன்;
தையலெனைச் சார்துயரும்
ஓங்கிவளர் கின்ற
துயர்ந்து 4

அத்தான்! உமதுயிரை
ஆட்கொண்ட நானினிமேற்
செத்தால் நலமென்று
சிந்தித்தேன்; – பித்தாய்த்
திரிவீரே என்றெண்ணிப்
பேசா திருந்தேன்;
அறியீரோ என்உண்மை
அன்பு? 5

பெற்றார் தடையுண்டு;
பின்பிறந்தார் நால்வருண்டு;
உற்றார் பலருண்டே
உண்மையிது – முற்றாமல்
காதல் கருகிவிடும்
காலந்தான் வந்திடுமோ
சாதல் உறுநிலையைத்
தந்து! 6

**இருவரும் :**

காணச் சகியாரோ
காதலரை ஒன்றாக்கிப்
பேணத் தெரியாரோ
பேருலகில் – கோணற்
சிறுமதிகள் தீயாவோ
தீராத காதல்
நறவுண்டு நாம்மகிழ
நன்கு 7

---

**பாடற் குறிப்பு:–** உண்மை நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு உருப்பெற்றவை இப்பாடல்கள்.

## 3. இன்பமில்லை

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

எத்தனைதான் காத்திருந்தும் என்ம னத்தே
    இடங்கொண்டாள் எழில்கொண்டாள் நகைக்கும் பற்கள்
முத்தனையாள் வரவில்லை, பொறுத்தி ருக்க
    முடியவில்லை, அறிஞரவர் வரைந்து தந்த
புத்தகத்தைப் புரட்டிவிட்டுப் பேசா தங்குப்
    பூட்டிவிட்ட வானொலியைத் திருப்பி விட்டேன்;
அத்தனையும் வீணாயிற் றென்னி டத்தே
    அவளில்லை ஆதலினால் இன்ப மில்லை! 1

அமையாத அலைக்கடலின் கரைய மர்ந்தேன்
    அலைநிமிர்ந்து காதலினை நிமிர்த்த தங்கே;
இமையாடும் பொழுதேனும் இருந்தேன் அல்லேன்.
    எழிற்பூங்கா வுள்நுழைந்தேன், தென்றல் வந்து
சுமையாக மோதிற்று; நிழற்ப டத்தால்
    துயர்தீரும் எனநினைந்து சென்றேன் அங்கும்
உமையாளும் சிவனாரும் காதல் கூர
    உருகியணைந் தமர்ந்திருக்கக் கண்டேன் கண்டேன்! 2

மனமுடைந்து வீடடைந்து மாடி யேறி
    மலர்புரவு பஞ்சணையில் புரண்டி ருந்தேன்
எனைமறந்த அவள்தந்த இன்பம் போன்ற
    இன்சுவைப்பால் அருந்தியபின் கசந்த தாலே
சினமடைந்தேன்; முழுநிலவு கார்கி ழித்துச்
    சிறிதாகச் சாளரத்துள் கதிர்வீ சிற்றே
அனநடையாள் என்னருகே இன்மை யாலே
    அதன்பாலும் அழகில்லை இன்பம் இல்லை! 3

## 4. ஏன் வரவில்லை?

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

அறுசீர் விருத்தம்

விண்ணிடத் தெறிந்த வெள்ளைப்
    பூசணிக் கீற்றோ என்ன
எண்ணிடப் பிறங்கும் நல்ல
    இளம்பிறை நிலவே! என்னை
நண்ணிடத் துடிக்கும் பாவை
    நானிவண் வந்த பின்னும்
மண்ணிடைப் பரப்பில் காணேன்
    மங்கைஏன், வரவே இல்லை? 1

கண்கவர் சிறுவர் சேர்ந்து
    கடுமழைப் புனலில் ஓடப்
பண்ணிய கபபல் போலப்
    படர்பிறை நிலவே! என்றன்
உண்ணிறைந் திருக்கும் செல்வி
    ஓடிவந் திருக்கக் காணேன்
எண்ணிய தேதும் உண்டோ?
    ஏனவள் வரவே இல்லை? 2

அகத்தியின் குவிபூத் தோற்றம்
    அன்னதோர் பிறைநி லாவே!
பகற்பொழு தகலும் நேரம்

பார்த்ததும் வருவேன் என்றாள்
இகழ்ச்சியோ செய்கின் றாள்என்
றேங்கிடும் உள்ளம் ஆங்கே
பகர்ந்ததை மறந்தோ போனாள்?
பாவைஏன் வரவே இல்லை? 3

## 5. உன்னுருவே தோன்றுதடி

(நூல்:—முடியரசன் கவிதைகள்)

எண்சீர் விருத்தம்

உள்ளத்தில் படிந்துவிட்டாய் அழகுப் பாவாய்;
உணர்வுடனே கலந்துவிட்டாய் தமிழின் பாட்டாய்;
கள்ளக்கண் பார்வையிலே சொக்கி விட்டேன்;
கரைபுரண்டு வருகின்ற காத லாற்று
வெள்ளத்தில் புணையாவாய் என்றே உன்னை
வேண்டியதை மறுத்தனையே! உயிர்நி லைக்கக்
கள்ளைத்தான் நம்பினும்அம் மதுநி றைந்த
கைக்கிண்ணத் துன்னுருவே தோன்றக் கண்டேன் 1

கச்செதிர்க்கும் உன்மார்பு கலக்க வில்லை;
காட்டுமலர்ச் சிரிப்புந்தான் அசைக்க வில்லை;
பச்சைமயில் சாயலுக்கும் பதைத்தே னல்லேன்:
படியவைத்த துன்னிசையோ அன்றே; உன்றன்
இச்சைமிகும் பார்வையில்தான் கட்டுண் டேன்நான்
என்னாசை மறுத்தனையே! என்றன் வாழ்வுக்
கச்சாணி அனையவளே! சோலை செல்லின்
அங்கெல்லாம் உன்னுருவே தோன்றக் கண்டேன் 2

இனிக்கின்ற சிலம்பெடுத்தேன் கானற் பாட்டாய்
இசைக்கின்றாய்! மாதவியாய் நடிக்கின் றாய்நீ!
கனிச்சாறே! சிலம்பொலியும் கேட்டு நின்றேன்
காதலைநீ புறக்கணித்துச் செல்லல் நன்றோ?
உனக்கென்று கொலைப்பார்வை அமைந்த தோ?என்
உயிர்வாழ மனமின்றி நஞ்செ டுத்துத்
தினச்சென்றேன் அதனிடத்தும் என்னை வாட்டும்
செவ்விதழாய்! உன்னுருவே தோன்றக் கண்டேன் 3

## 6. பணியாள் வேண்டாம்

(நூல்:—முடியரசன் கவிதைகள்)

எண்சீர் விருத்தம்

குடும்பவிளக் கெனும்நூலைக் கொணர்க என்று
குயில்மொழியை என்துணையைப் பாடு கென்றேன்;
“விடும்அத்தான் அவ்வெண்ணம்; பக்கத் துள்ளோர்
விரும்பவில்லை நாம்சிரித்துப் பேசும் பேச்சை;
சுடும்படியாச் சொல்கின்றார் எதிர்த்த வீட்டார்,
துணைவரொடு சமமாகப் பழகல் கூடக்
கொடுங்குணமென் றறைகின்றார் தெருவி லுள்ளார்;
குடும்பமென்ன இருட்சிறையா” என்று சொன்னாள் 1

அடிபேதாய் ஊரார்கள் அப்ப டித்தான்
ஆர்ப்பரிப்பர், அருகினில்வா! அவர்கட் காக
மடிவதுவோ நமதின்பம்? அன்பும் சேர்ந்து
மாள்வதுவோ? இலக்கணமே மொழியைக் காக்கும்
அடிவேராம் அதுபோல்நம் குடும்பத் திற்கும்
அன்பொன்றே அடிப்படையாம், பண்பும் ஆகும்;
கடிவாளம் அறுந்தவர்தம் பேச்சைக் கேட்டுக்

கடிந்துரையேல் அன்பென்னும் இலக்க ணத்தை. 2

என்றுரைத்தேன்; ''நன்றத்தான் இந்த ஊரார்
இயல்பெனக்குப் பிடிக்கவிலை, கோவி லுக்குச்
சென்றிருந்தேன் குழாயடியில் நின்றி ருந்தேன்
செழும்புனலில் நீராடச் சென்றேன் அங்கு
நின்றிருந்த பேரெல்லாம் பிறர்கு டும்ப
நினைவொன்றே கொண்டுகுறை கூறிக் காலம்
கொன்றிடுவர், அப்பப்பா! நரைத்து மூத்துக்
கோலூன்றும் கிழங்களுமா பேச வேண்டும்?'' 3

தேன்சுளையே; அங்கெல்லாம் இனிமேற் செல்லேல்
தேர்ந்தெடுத்துப் பணியாளொன் றமைப்பேன் என்றன்
மான்விழியே! அடுக்களையும் விடுத்து வந்து
மகிழ்ந்திருப்போம் எனப்புகன்றேன்; ''நானி ருக்க
ஏன்பணியாள்? நன்றத்தான் உங்கள் எண்ணம்!
எழுந்தோடிக் காய்நறுக்கி உங்கட் கென்று
நான்சமைத்துப் பரிமாற, நீங்கள் உண்டு,
நன்றுநன்று சமையலெனக் கூறும் போது 4

நான்காணும் இன்பத்துக் குவமை யுண்டோ?
நம்மன்பிற் கிடையூறாம் பணியாள் வேண்டாம்;
ஊன்பெருத்தே உதியமரம் ஆக மாட்டேன்,
உலைவாயை மூடவொரு மூடி யுண்டு
கூன்காணும் உள்ளத்தார் ஊரார் வாய்க்குக்
குவலயத்தில் மூடியிலை ஆத லாலே
தேன்காணும் இசைபாடி என்றும் போலத்
திகழ்ந்திடுவோம் வாருங்கள் அத்தான்'' என்றாள் 5

## 7. சிற்றூர்ச் செலவு
**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

பட்டணத்தில் என்மனைவி பிறந்து வாழ்ந்தாள்;
பகலுணவு முடித்துப்பின் படுத்தி ருந்தேன்
தட்டெடுத்து வெற்றிலையை மடித்தெ டுத்துத்
தந்தின்பம் சேர்த்திருந்தாள், பாளை நீக்கி
விட்டெழுந்த நகைஉதட்டைப் பற்றி ''நாளை
விடியலுக்குள் என்னூர்க்குச் செல்வோம்'' என்றேன்;
''கட்டழகி எனச்சொல்லிக் கட்டி முத்தம்
கணக்கின்றித் தந்தாலும் வாரேன்'' என்றாள் 1

'ஏன்' என்றேன் 'பட்டிக்கா' டென்று ரைத்தாள்;
''என்னைஉனக் களித்துள்ள அன்னை வாழும்
தேனெனவே இனிக்கின்ற என்றன் ஊரைத்
தீதுரைத்தாய் அதனலத்தை உணரா திங்கே
கானுண்டோ? உணவுவிளை களந்தான் உண்டோ?
காக்கின்ற தாயகத்தைக் காண எண்ணி
நானுன்னை அழைக்கின்றேன் வருக!'' என்றேன்
''நடப்பதற்கு முடியாதே'' என்றாள்; பின்னர் 2

எப்படியோ ஒருப்பட்டாள் விரைந்து செல்லும்
புகைவண்டி ஏறிப்போய் ஊரை நோக்கித்
தப்பெதுவும் நேராமல் நடந்து சென்றோம்;
தழைத்துள்ள வயல்வரப்பில் நடக்குங் காலை
''அப்பப்பா நல்லவழி'' என்று சொல்லி
அகம்நொந்து முகஞ்சுழித்து நடந்து வந்தாள்;
''இப்படிவா'' என்றவள்கை பற்ற ''ஐயோ!''
என்றழுதாள் என்னென்று பதறிக் கேட்டேன். 3

மென்காலில் முள்தைத்த தென்ன, நெஞ்சில்
வேல்குத்திக் கிழித்ததுவே றொன்றும் பேசா
தென்காதல் மிகுதியினால் குனிந்து முள்ளை
எடுத்தவளை வருந்தாதே மன்னிப் பாய்நீ
என்மீது சினந்தனையோ? இனிமேல் இங்கே
வருமெண்ணம் இல்லைஇல்லை என்றேன்; பாவை
"என்னென்ன சொல்லுகிறீர் அத்தான் நீங்கள்
இருக்கின்ற இடமேதான் இன்பப் பூங்கா;!" 4

என்றெழுந்து நின்றுகொண்டாள் ஒடிந்த உள்ளம்
இனிதுமகிழ்ந் தெழுந்துவழி நடந்தேன் பின்னர்
குன்றனைய தோள்பற்றிக் கெந்திக் கெந்திக்
குளிர்மொழியாள் நகையாடி நடந்தாள்; கண்ணே!
இன்றெனது மனம்நொந்து பதறி விட்டேன்
என்றவுடன் "ஆடவரே அப்ப டித்தான்
ஒன்றுமிலா தஞ்சிடுவார்" என்று சொன்னாள்
உள்ளங்கள் பரிமாறிச் சென்றோம் மேலும். 5

## 8. குளிர் நிலா
**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

நேரிசை ஆசிரியப்பா

திருமணம் என்ற தேன்மொழி என்றன்
செவியில் வார்த்தான் சிறிய தம்பி;
அவர்தான் எத்துணை அழகோ! என்னை
அணைத்தணைத் தின்பம் அருத்துவர், பின்னர்
எழிலுறு மழலை இன்பக் குழவி
என்கைத் தருவார், இன்பம்! இன்பம்!
எனமனக் குதிரை ஏறிச் சென்றேன்;

* * *

கண்ணே என்றார் கடிதினில் திரும்ப
அவரே நின்றார்; அத்தான் என்றேன்,
இன்பச் சூட்டால் இறுக அணைத்தார்
இதழைக் கொய்தார், எடுத்துச் சொல்ல
இயலா நிலையில் இருந்த என்னைத்
தெரியா உலகம் தெரியச் செய்தார்,
அடடா இன்ப ஆற்றினில் மிதந்தோம்,
கரையே இல்லை காதல்! காதல்!!

* * *

அணைப்பால் மட்டும் ஆறுதல் இல்லை,
துணைவர் தந்த தோள்தோய் இன்பச்
சின்னம் இல்லை; செருநரும் விழையும்
செயிர்தீர் செல்வன் சிந்தும் சிரிப்பை
அள்ளிப் பருக அவாவிற் றுள்ளம்;
இளம்உடல் தீண்ட இன்சொற் கேட்கத்
துடிதுடித் திருந்தேன்; துணைவரும் நானும்
புண்ணியத் தலங்கள் புக்குநீர் மூழ்கியும்
புண்ணியம் இல்லை; புதல்வற் பேறினி
உண்டோ என்றோம் உள்ளூர்க் கணியர்
ஏடுகள் புரட்டி இல்லை என்றார்;
இடிந்ததென் உள்ளம் இருண்டதென் வாழ்வு
மகப்பே றில்லா மலடோ அந்தோ!
எனச்சின் னாள்கள் ஏங்கி யிருந்தேன்,

* * *

திரைகடல் கடந்து செல்வந் திரட்டப்
பிரிந்தனர்; நானோ பெண்மையின் இயல்பால்
வருந்தி மெலிந்தேன்; வந்தனர் ஒருநாள்;
எழில்மணி மாட இருப்பில் இருந்தோம்,
குளிர்எனை அவர்பாற் கொண்டு சேர்த்தது,
நடுங்கிய என்றன் நாணம் காத்திடக்
கணியர் கூற்றைப் பொய்யெனக் காட்டிட

உள்ளம் நைக்கும் உறுதுயர் தீர்ந்திட

* * *

இன்பக் குளிர்நிலா இருள்முகில் நுழைந்த(து);
என்முகம் அவர்தம் மார்பிற் புதைந்தது;
மீண்டும் திங்கள் மேலெழுந் தொளிக்கதிர்
வீசிச் சிரித்தது; விடியலைக் கண்டோம்;

* * *

உணவு வெறுத்தேன் உமட்டலைக் கண்டேன்
புளிப்பில் விருப்பம் பூத்தது, வாழ்வில்
இனிப்பு மலர்ந்திட இன்பங் காய்த்தது
காதற் கனியைக் கண்டேன்
எண்ணம் பலித்த(து) இனியிலை துயரே,

## 9. குழந்தை இன்பம்

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

"பாய்ந்தோடும் அருவிமலைப் பக்க மெல்லாம்
பல்வண்ணப் பூக்களிலே மென்மைத் தென்றல்
தோய்ந்தோடி வந்துடலில் வருடும் போது
சொல்லரிய இன்பமன்றோ அருமை அத்தான்!
ஆய்ந்தெடுத்த யாழெடுத்துப் பாடு கின்றேன்
அருகினிலே வாருமதோ பாரும் வானில்
வாய்ந்தொளிரும் வெண்ணிலவு கூட்டும் இன்பம்!
வரம்புண்டோ?" என்றுரைத்தாள் துணைவி நல்லாள் 1

வெண்முகில்சூழ் மலைமுகடும் முகட்டி னின்று
வீழ்ந்ததிரும் அருவிகளும், வண்ணப் பூவால்
கண்கவரும் செடிகொடியும், கொடிகள் தாவிக்
காட்டுகின்ற மரத்தொகையும், தென்றற் காவில்
பண்சொல்லும் வண்டுகளும், மாலை வானில்
படர்கின்ற செந்நிறமும், காதல் நங்காய்!
விண்மதியும் தருமின்பம் என்றன் பிள்ளை
விளையாடும் காட்சிதரும் இன்பம் ஆமோ? 2

ஆய்ந்தெடுத்த இசைவல்லார் செய்த வீணை
ஆர்த்தெழுப்பும் இன்னொலியும் கானில் நன்கு
காய்ந்திருக்கும் வேய்ங்குழலில் தோன்றும் பண்ணும்,
கடும்பாம்பும் மெய்மறந்து நிற்க இன்பம்
தோய்ந்திருக்கும் படியூதும் குழலும், இன்னும்
துன்பமெலாம் துடைக்குமிசைக் கருவி யாவும்
பாய்ந்தளிக்கும் இன்பமெலாம் என்றன் பிள்ளை
பரிந்துளரும் மழலைதரும் இன்பம் ஆமோ? 3

"அப்படித்தான் சொல்லிடுவீர்! மாடி மீதில்
அன்றொருநாள் குறுந்தொகைப்பாட் டொன்று சொல்லி
ஒப்புண்டோ இதற்கென்றீர்! அதனோ டென்னை
உவமித்துக் கேலிசெய்தீர்! உண்ண வாரும்
எப்பொழுதும் இதுதானா? என்றால் நூலில்
எழும்சுவையால் சுவையுணவை மறந்தேன் என்பீர்!
எப்பொழுதே னும்விளக்கை அணைக்க வந்தால்
இருஇருநூல் இன்பம்உயர் வென்பீர் அத்தான்!" 4

நானூற்றுப் புறப்பாடல் சொல்லு கின்ற
நம்முன்னோர் செய்தபெரும் வீரப் போரும்
தேனூற்றோ எனக்கருதும் அகநா னூறு
செய்யகுறுந் தொகைகூறும் காதல் வாழ்வும்
கால்நூற்றோ டைந்தாண்டின் அகவை யில்யான்
கண்டசில காவியமும் தந்த இன்பம்
மானோட்டும் விழியுடைய கண்ணே! என்றன்
மகவுதரும் இன்பத்திற் கீட தாமோ? 5

“போகட்டும்; இசைபாடி அணையின் மீது
  புகழ்ந்தீரே நானின்பம் தந்த போது!
வேகட்டும் உணவென்றால் சேலை பற்றி
  விளையாடிப் பெற்றீரே அந்த இன்பம்,
வேகத்தோ டென்னிதழைச் சுவைக்கும் போது
  விளைந்தசுகம் எப்படியோ? சொல்வீர்!” என்றாள்;
ஆகட்டும் எனச்சொல்லி அவள்கை பற்றி
  அருகிருத்தி உயிர்க்கொழுந்தே! மஞ்சம் ஏறி 6

நரம்பேறும் யாழ்மீட்டிக் காதல் கூட்டி
  நல்லிசையால் மகிழ்வூட்டி இருக்கும் போதும்
மரஞ்சேர்ந்த மாதுளைபோல் தோன்றும் உன்றன்
  மார்பகத்தால் பேரின்பம் தந்த போதும்
சுரந்தூறும் உன்இதழைச் சுவைக்கும்போதும்
  சொல்லரிய இன்பத்தைக் காணு கின்றேன்
இருந்தாலும் என்குழந்தை மெய்யில் தாவி
  இளங்கையால் தொடுகின்ற இன்பம் ஆமோ? 7

என்றுரைத்தேன்; “போங்களத்தான்!” என்று சொல்லி
  எழுந்தோடி ஓர்புறத்தே ஊடி நின்றாள்;
சென்றழைத்தேன் திரும்பாமல் “ஊஹீம்” என்றாள்!
  “செவ்விதழாய்! ஏனிந்தக் கோபம்?” என்றேன்;
“நன்றுநன்று தாழ்வென்றீர் என்னின் பத்தை!
  நானெதற்காம்?” எனப்புலந்தாள்; முகத்தைத் தொட்டேன்
கன்றியகண் ணீர்சிந்தப் பதறி விட்டேன்
  கதறியழும் மகவொலியால் விழித்துக் கொண்டேன் 8

## 10. தோற்றுவிட்டேன்!

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

தாழிசைகள்

போர்க்களத்தில் எதிர்நிற்க எவருங் காணேன்
  பூரித்தேன் வீரத்தாற் செருக்குங் கொண்டேன்
தார்க்கழுத்தில் வன்புயத்தில் முகத்தில் எங்கும்
  தளிரடியால் எனைமிதித்தாய் தோற்று விட்டேன் 1

இசைத்தமிழில் எனைப்போலப் பாடு தற்கே
  எவருமிலர் எனக்கருவம் பூண்டி ருந்தேன்
வசைக்கிலக்கே ஆகினேன்ஒப் பில்லா நின்றன்
  வாய்மழலைத் தேனிசைக்குத் தோற்று விட்டேன் 2

ஈரமொரு சிறிதுமிலேன் வலிய நெஞ்சேன்
  எவர்பாலும் கருணைமொழி புகலேன் அன்பின்
ஓரமதுங் கண்டறியேன் மறம னத்தேன்
  உன்விழியால் மனமுருக்கி வென்று கொண்டாய் 3

பணிவறியேன் அடக்கமிலேன் சான்றோர் என்பாற்
  பகருமொழி மதித்தறியேன் வலிய னேனும்
பணிகின்றேன் உன்முன்பு நின்மொ ழிக்குப்
  படிகின்றேன் என்மதலாய்! தோற்று விட்டேன் 4

உன்தாயின் விழிக்கடைக்கோர் ஒப்பே யில்லை
  உலகிலென நினைந்திருந்தேன் களிப்புங் கொண்டேன்
என்வாயை அடைத்துவிட்டாய் கவலை தோயா
  எழில்மலருன் கருவிழியால் தோற்று விட்டேன் 5

இலக்கணநூல் இலக்கியநூல் நிகண்டு யாவும்
  எளிதாகக் கற்றுணர்ந்தேன் பெருமை கொண்டேன்
சொலக்கருதி நாஉந்த இதழின் ஓரம்
  சுழல்மழலைப் பொருள்தேறேன் தோற்று விட்டேன் 6

எழுதரிய ஓவியமே! என்றன் நெஞ்சில்
எழுந்துநடம் செயுந்தேவே! எங்கள் காதற்
பழந்தந்த சுவையே! எப் படியோ என்னைப்
பணிவித்து நல்லாட்சி செலுத்து கின்றாய்! 7

## 11. எம்மவர் தந்தார்
(நூல்:—முடியரசன் கவிதைகள்)

நிலைமண்டில ஆசிரியப்பா

மாலைப் பொழுதில் மங்கிய ஒளியில்
வேலை முடித்து விரிகதிர்ச் செல்வன்
மறைந்தனன்; என்னை மணந்தவர் வந்தார்
கரைந்திடு புள்ளினம் கண்ணயர்ந் திருந்தன;
மேலுயர் மாடம் மீதினில் ஓரறை;
பாலொளி சிந்தப் பார்த்தது நிலவு;
பஞ்சணை அமர்ந்தேன் பக்கத் தமர்ந்தார்
அஞ்சன விழியை அவர்பாற் செலுத்தினென்;
பசியோ டிருந்தவர் பாய்ந்து வந்தெனை
அசைய விடாமல் அள்ளி விழுங்கினார்;
இன்பக் கடலுள் இருமீன் ஆயினம்!
அன்பில் திளைக்கும் அந்நல் வேளை
மின்விடு விளக்கொளி மெல்லென அசையச்
சன்னல் வழியே சார்ந்தனை தென்றால்!
உள்ளமும் உடலும் சிலிர்த்தன; காதற்
கள்ளுண் டின்பக் கற்பனை உலகில்
இருந்திடும் எம்மை மறந்திடச் செய்தனை!
பறந்தனம் விண்ணிற் பறவைக ளாகி;
இந்த விதம்பல இரவுகள் கழிந்தன;
அந்தநன் னாளெலாம் இன்பமீந் தனையால்
நல்லை நல்லைஎன நவின்றேன் பலகால்;
இன்றோ துணைவர் ஈங்கிலர், அதனாற்
கொன்றா லன்ன கொடுந்துயர் தந்தனை!
நல்லை அல்லைஎன நன்குணர்ந் தேனே;
கூர்ந்து நோக்கின் குற்றம்நீ புரிந்திலை;
சேர்ந்தவர் பிரிந்தார் செய்தனர் துன்பம்
அதற்கென் செய்குவை? ஆய்ந்து பார்க்கின்
நல்லையும் அல்லை அல்லையும் அல்லை
“தீதும் நன்றும் பிறர்தர வாரா”
எனவாங்கு
ஓதிய பொருண்மை உணர்ந்தேன் இன்றே
இரண்டும் ஒருங்கே **எம்மவர்** தந்தார்;
ஒருகுண மில்லாய் ஏகுதி நீயே!

## 12. முகில்விடு தூது
(நூல்:—முடியரசன் கவிதைகள்)

கலிவெண்பா

வான வெளியரசே! வள்ளல் பெருமனம்போல்
தானம் பொழிகின்ற தண்முகிலே காற்றைப்

புரவியெனக் கொண்ட புரவலனே! எங்கே
விரைகின்றாய்? ஒன்று விளம்புகின்றேன் சற்றேநில்!

ஈர மனமுடையாய் இவ்வுலகில் எப்பொருளும்
சோர விடமாட்டாய் என்றுன்னைச் சொல்கின்றார்

சோரவிடாய் என்னுந் துணிவால் மொழிகின்றேன்
ஆர அமர அரிவையுரை கேட்டிடுவாய்!

அன்றொருநாள் என்துணைவர் ஆற்றிப் பிரிந்து சென்றார்
இன்றுவரை அஞ்சல் எழுதவில்லை; நாடோறும்

அஞ்சலார் இவ்வழிதான் ஏகிடுவார் ஆனாலும்
வஞ்சி எனதகத்து வாயிற் படிமிதியார்

கற்றைகற்றை யாக்கடிதம் கையில் குவிந்திருக்கும்
பற்றாக் குறைக்கந்தப் பையிலொரு கூடையுண்டு

ஐயா பெரியவரே அஞ்சலுண்டோ? என்பேன்நான்
கையால் விரித்துரைப்பார் கண்கலங்கி நின்றிருப்பேன்;

எத்தனைநாள் இப்படியே இன்னலுற்றுச் செத்திடுவேன்?
மெத்தவுனை வேண்டுகிறேன் மேவியிதைக் கூறிடுவாய்

வாடகை கேட்டுமிக வாட்டுகிறார் வீட்டார்கள்,
தேடறிய கல்வி தெரிவிக்கும் பள்ளிக்குச்

சம்பளம் வேண்டுமென்று சாற்றுகின்றான் என்பிள்ளை;
கம்பளம் விற்றுக் கடன்கழித்தேன்; கையிருப்போ

ஒன்றுமிலை; இத்தகைய ஊறு மிகவருத்தக்
கன்றியுடல் உன்போல் கருத்தேன்; விழிசிந்தும்

நீர்த்துளியோ நின்னைப் புறங்கண்டு விட்டதுபோல்
ஆர்த்து மிகுகின்ற தையாவோ! என்னவரைக்

காணின் அருள்கூர்ந்து காசனுப்பச் செப்பிடுவாய்;
ஆணி இருந்தால்தான் அச்சுவண்டி மேலோடும்;

மெய்யில் உயிர்நிற்க வேண்டுமெனில், பள்ளிசெலும்
பையன் பயில்கின்ற பாடம் வளரவெனில்

காசுபணம் வேண்டுமெனக் காதலர்பால் நெஞ்சுணர்ந்து
பேசு; பிழையாகப் பேசி வருத்தாதே,

காதல் முகந்தன்னைக் கண்டு பலநாள்கள்
ஆதல் அவரறிவார்; ஆசைக் கணவரைத்தான்

கண்டு மகிழ்வுபெறக் கண்துடிக்கும் செய்தியையும்
விண்டு திரும்பு விரைந்து.

## 13. இழந்த காதல்

(நூல்:—முடியரசன் கவிதைகள்)

எண்சீர் விருத்தம்

**புகழணங்கு**

சிந்தனையாம் சோலைதனில் தனித்தி ருந்தேன்
சிவந்தமுகப் பெண்ணொருத்தி அழுது நின்றாள்;
நொந்திருப்ப தெதனாலோ? நின்பேர் யாதோ?
நுவலுதியோ? எனப்பரிந்து வினவி னேன்யான்;
“இந்தவுல கெனக்கிழைக்கும் தீங்கி னைத்தான்
என்னென்பேன்! மெய்க்காதல் தீய்ப்ப தற்குப்
புந்தியிலாச் செயல்செய்து மகிழ்ந்த தந்தோ!
புழுங்குகிறேன் என்காதல் இழந்த தாலே 1

என்பெயரைப் புகழென்று புவியோர் சொல்வர்,
எந்நாளும் பொதுத்தொண்டு புரிந்து வந்த

அன்பனைநான் காதலித்தேன்! பழிஎன் பாளை
அவனுக்கே உலகத்தார் மணமு டித்தார்;
தன்னலமே விழையுமொரு செல்வன் என்னைத்
தனக்குரிமைப் பொருளாக்கப் பணத்தை வீசி
என்னலத்தை நுகர்வதற்கே சுற்று கின்றான்
இவ்வுலகும் சரிஎன்றால் யாது செய்வேன்'' 2

**கவிதைப்பெண்**

பார்செல்லும் நெறிநினைந்து செல்வேன் முன்னர்ப்
பதறிவரும் மற்றொருத்தி நிலையைக் கண்டு
யார்நங்காய் நீஎன்றேன்; ''என்றன் வாழ்வை
யாதென்பேன் ஐயாவோ! கவிதை என்று
பேர்சொல்லி எனை அழைப்பர்; கற்றோன் தன்னைப்
பெருந்துணையாக் கொளநினைந்தேன்; ஆனால் கல்வி
சீர்தளைகள் ஏதொன்றும் அறியாத் தீய
சிறுமகன்வந் தென்னருகே சுற்று கின்றான் 3

நான்விரும்பாக் குறிப்புணர்ந்து விலகா னாகி
நரிச்செயலால் வன்முறையால் நாடு கின்றான்
கூன்விழுந்த செய்திஇதழ்ப் பொறுப்பை ஏற்ற
கொடுமனத்தர் அவனுக்கே உடந்தை யானார்;
நான்விழைந்த கலைஞனையோ புறக்க ணிப்பாம்
நங்கைக்குத் துணையாக்கி மகிழ்தல் கண்டேன்
ஏன்பிறந்தோம் இவ்வுலகில் எனநி னைந்தே
இரங்குகிறேன் காதலிழந் தேங்கு கின்றேன் 4

**செல்வமகள்**

கவியணங்கின் துயருரையைச் செவிம டுத்துக்
கலங்குகிற பொழுதிலொரு நங்கை வந்து
''செவிமடுப்பாய் என்னுரையும்'' என்று கண்கள்
சிந்துகிற நீர்துடைத்தாள்; சொல்க என்றேன்;
''புவியரங்கில் செல்வமெனப் புகல்வர் என்னை,
புரட்சிசெயும் எழுத்தாளன் தனைம ணந்து
தவிமனத்துக் காறுதலைத் தரநி னைந்தேன்
தப்பியதால் என்காதல் துயரங் கொண்டேன் 5

அவனுக்கோர் பெண்பார்த்தார் வறுமை என்னும்
அரிவைதனை மணமுடித்தார் துயர்கொ டுத்தார்;
தவறுக்கே தலைமகனாய்ப் பொய்கள் சொல்லித்
திருடுவதே தன்தொழிலாய்த் திரியும் தீயன்
இவறுகின்ற ஒருமகன்வந் தெனைக்க வர்ந்தே
இல்லறத்தில் வாழ்வதற்கு மிகவி ழைந்தான்
சுவருக்குள் வைத்திருந்து காக்கின் றான்நான்
சுவைக்கின்ற காதலிழந் தேங்கு கின்றேன் 6

**வீரச்செல்வி**

காதலுக்குத் தரணிதரும் பரிசை நெஞ்சில்
கருதிமனம் வெதும்புகிற வேளை தன்னில்
சாதலுக்குத் துணிந்தொருத்தி முயல்வாள் தன்னைச்
சந்தித்தேன்; உனக்கென்ன நேர்ந்த தம்மா!
ஓதுதற்கு மனமுண்டோ? உரைப்பாய் என்றேன்;
''உரைப்பேன்''என் றவள்துயரை விரித்து நின்றாள்;
''ஏதமிலா வீரமெனப் பெயரும் கொண்டேன்
எடுப்பார்கைப் பிள்ளைஎன வளர்ந்தேன் நானும் 7

மோதுகின்ற எப்பகைக்கும் அஞ்சா நெஞ்சன்
முரணாத கொள்கைப்பற் றுள்ளான் தன்னைக்
காதலித்தேன்; கொள்கையிலாப் பச்சை யோந்திக்
கருத்துடைய ஒருவற்கு மணமு டித்தார்;
பேதலித்தேன், காதலற்கோ இடும்பை என்னும்
பெண்ணொருத்தி துணையானாள்; பாழும் பாரில்
சாதலைத்தான் மேற்கொண்டேன்'' என்று ரைத்தாள்
சலித்துப்போய்ச் சிந்தனையைக் கலைத்து விட்டேன் 8

## 14. ஏன் மறந்தாள்?
**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

அறுசீர் விருத்தம்

மன்னரே உம்மை யன்றி
 மணந்திடேன் பிறரை என்றாள்;
கன்னலே நீர்தான் என்றன்
 கட்படும் உலகம் என்றாள்;
முன்னரே நமது நெஞ்சம்
 முழுமையிற் கலந்த தென்றாள்;
சொன்னதைக் காற்றில் விட்டே
 தோகைஏன் மறந்தே போனாள்? 1

காதலை வடித்துக் கொட்டிக்
 கடிதங்கள் எழுதி விட்டு
வேதனை தந்தா ளன்றி
 விழிக்கடை தந்தாள் அல்லள்;
மாதவள் மயங்க விட்டாள்
 மடல்களோ நூறு விட்டாள்;
சோதனை செய்து தேர்ந்தார்
 துறப்பரோ நெஞ்சிற் காதல்? 2

## 15. இனிப் பொறுக்க முடியாது
**(நூல்:–காவியப் பாவை)**

எடுப்பு

இன்னும் பொறுத்திருக்க இயலாது – சும்மா
இருக்கின்றீர் மணங்கொள்ள முயலாது
 –இன்னும்

தொடுப்பு

கன்னமெல்லாம் சிவந்த காரணம் யாதென்று
கடிந்துரைத்தாள் அன்னை கலங்க வைத்தாள் என்னை
 –இன்னும்

முடிப்பு

சோறுண்ண மறுத்தால் சூதென்ன சொல்லென்பாள்
தூங்குதூங் கென்று வாங்கிடுவாள் உயிரை
வேறென்ன செய்தாலும் விளையாட மறுத்தாலும்
வியப்பாள் தந்தையொடு கலப்பாள் முறைப்பாள்
 –இன்னும்

உடல்வேறு பாடுகளை உன்னித்து நோக்குகிறாள்
உறவுமுறை யிலொரு மாப்பிள்ளை தேடுகிறாள்
மடல்சேரும் தாழைமரச் சோலைக்கு வாருங்கள்
மணம்வைக்கும் நாள்தன்னை மாதென்பால் கூறுங்கள்
 –இன்னும்

## 16. நாணம் ஏனோ?
**(நூல்:–காவியப் பாவை)**

எடுப்பு

கதவில் உடல்மறைத்துக் காட்டுகிறாள் முகத்தை – எனைக்
கண்டவுடன் நாணம் கொண்டமையினாலோ?

—கதவில்

தொடுப்பு

விதவிதமாம் மலர்சூடி மேலாடை சூடாமல்
விளையாடித் திரிந்தாளே அதை எல்லாம் மறந்தாளோ?

—கதவில்

முடிப்பு

விளையாடும் ஒருநாளில் வீண்வம்பு நான்செய்தேன்
வெம்பிஅழு தெனைவைதாள் நான்வளையை நொறுக்கியபின்
தலைநோகக் கொட்டியதை நினையாமல் மறுநாளும்
தானாக விளையாட வந்ததையும் மறந்தாளோ?

—கதவில்

குடங்கொண்டு நீரோடு வருங்காலை இப்போது
குனிந்ததலை நிமிராமல் நடந்துபிறர் அறியாமல்
தடங்கண்ணி ஏகிடுவாள் தனியான நிலைகாணின்
தானோக்கி நகைசெய்வாள் மானோக்கி மனம்யாதோ?

—கதவில்

## 17. முத்தம் தந்தான்
(நூல்:—காவியப் பாவை)

எடுப்பு

வந்தோடி முத்தம் தந்தானடி — தோழி
அந்தமிகுந்த என்றன் சிந்தை மகிழ்ந்தவீரன்

—வந்தோடி

தொடுப்பு

பந்தாடி மீள்கையிலே பகலோனும் வீழ்கையிலே
செந்தாமரை முகத்தில் செவ்வாய் இதழ்புதைய

—வந்தோடி

முடிப்பு

சோலையிலே பலநாள் மாலையிலே வருவான்
சொன்னதில்லை ஒருசொல் சுந்தரக் குரிசில்
மேலையிலே மணந்தான் போலவே நினைந்தான்
மெல்லவே சிரித்தான் உள்ளமே பிணித்தான்

—வந்தோடி

## 18. இன்னும் வரக்காணேன்!
(நூல்:—காவியப் பாவை)

எடுப்பு

இந்நேரமாகியும் காணேனே — காலையில்
எழுந்திருந்து சென்றவர்

—இந்நேரம்

தொடுப்பு

தென்னைமர நிழல்வந்து தெருவாயிற் படிஓரம்
சேர்ந்ததே! ஒன்பது மணிச்சங்கும் ஓய்ந்ததே

—இந்நேரம்

முடிப்பு

எக்காலும் ஆர்வமாய் உண்பார் என்றெண்ணி
என்நாதன் மனம்மகிழ எழுந்தோடி நான்செய்த
சிக்கான நூல்போன்ற இடியப்பம் வீணாகச்
சில்லிட்டுப் போகுதே! நெஞ்சமும் நோகுதே!

—இந்நேரம்

வரும்வழியில் எவரேனும் வாய்கிளறி விட்டாரோ
வம்பெதற்கோ அரசாங்கப் பேச்சைத்தான் தொட்டாரோ?
தரும்சுவையில் மேலான தமிழென்றால் உயிராச்சே!
தாய்மொழியின் நிலையைத்தான் உரையாடி நின்றாரோ?
—இந்நேரம்

## 19. எந்தவிதம் மறந்தார்?
(நூல்:—காவியப் பாவை)

எடுப்பு

எந்தவிதம் மறந்தாரோ — என்னை
நொந்து மெலிந்திடவே பிரிந்தாரே
—எந்த

தொடுப்பு

வந்திடுவேன் மழைக் காலத்திலே என்றார்
வாராமலே இன்னும் வாட்டியே கொன்றார்
—எந்த

முடிப்பு

வாட்டமுகங் கண்டால் நெஞ்சம் நெகிழ்ந்திடக்கெஞ்சுவார்
வம்புகள் செய்துபின் வாரியணைத்தெனைக் கொஞ்சுவார்
சேட்டைமொழிபேசி முத்தங் கொடுத்தெனைக் கூடுவார்
செப்பமான தமிழ்ப்பாடல் மகிழ்ந்திடப் பாடுவார்

## 20. ஏனிந்த வம்பு?
(நூல்:—காவியப் பாவை)

எடுப்பு

என்ன குற்றம் செய்தேன்? — நிலவே
ஏனிந்த வம்பு? இனியிலை தெம்பு!
—என்ன

தொடுப்பு

அன்னவர் இல்லைஎன்ற ஆணவமோ? காதல்
மன்னவர் இங்குவரின் காணுவையோ?
—என்ன

முடிப்பு

நள்ளிராப் போதில் நஞ்சினை உமிழ்ந்தாய்
நலிவே தந்தாய் மெலிவால் நொந்தேன்
பள்ளியில் புழுவெனப் பதைத்திடச் செய்தாய்
பாழ்மதி யேஎனை வீழ்ந்திடச் செய்தாய்!
—என்ன

மேகத்தில் நுழைந்தாய் மீண்டுமேன் எழுந்தாய்?
மென்றுதின் னாமலே மேகமேன் உமிழ்ந்ததோ?
சாகத்தான் செய்வையோ? தீயைத்தான் பெய்வையோ
சஞ்சலப் படுகிறேன் பஞ்செனக் கெடுகிறேன்
—என்ன

## 21. வருவாரோ? வாராரோ?
(நூல்:—காவியப் பாவை)

எடுப்பு

வருவாரோ வாராரோ
மணவாளன் தைநாளில்

—வருவாரோ

தொடுப்பு

உறவாடி ஒருகன்னம் சிவப்பேறச் செய்தார்
ஒசிந்தோடி நாணினேன் மறுகன்னம் புதைத்தார்

—வருவாரோ

முடிப்பு

பொருள்சேரும் தமிழ்ப்பாடல் பாடுவேன்
புதிதான முறையாலே ஆடுவேன்
மருள்மாலை வருவார் நான் ஊடுவேன்
மகிழ்வாக்கித் தருவார்பின் கூடுவேன்

—வருவாரோ

சொன்னசொல் அத்தனையும் மறப்பாரோ
சுடுநிலவில் துயருண்டு கிடப்பேனோ
என்னினைவு இல்லாமல் இருப்பாரோ
எத்தனைநாள் இத்துயரம் பொறுப்பேனோ

—வருவாரோ

## 22. ஆவி கலந்த அழகி

**(நூல்:—காவியப் பாவை)**

எடுப்பு

அவளோர் அழகி — என்
ஆவி கலந்தனள் பலநாள் பழகி

—அவள்

தொடுப்பு

குவளை அவள்கண் குளிர்தேன் பார்வை
குடிக்கத் தவிக்கும் விழிக்குள் நிறைந்திடும்

—அவள்

முடிப்பு

குழலோ குரல்வாய் இசையால் பணியும்
குயிலோ பயில மெதுவா அணையும்
முழுவான் நிலவோ முகமோ தெரியேன்
முகிலோ குழலோ எனுமா றறியேன்

—அவள்

பிழியா நறவோ குறையா மதியோ
பிணையோ யாழில் பிறவா இசையோ
எழுதாக் கிழியோ பொளியாச் சிலையோ
எதுதான் இணையோ நிகர்தான் இலையோ

—அவள்

## 23. நடந்தது என்ன?

**(நூல்:—காவியப் பாவை)**

**செவிலி:**

அன்னம் தளர்ந்திட முன்னம் நடந்தவள்
ஆடி நடந்தனள் கண்ணம்மா — இதில்
என்ன நடந்தது பொன்னம்மா — கதை
எங்கு நிகழ்ந்தது சொல்லம்மா



**தோழி:**

கொண்டை முடித்திரு தண்டை ஒலித்தெழில்
கொஞ்ச நடந்தனள் சோலையே – காதல்
கொண்டு தொடர்ந்தொரு காளையே – இந்தக்
கோலம் விளைத்தனன் மாலையே 2

**செவிலி:**

கன்னம் சிவந்தது கண்ணும் சிவந்தது
கன்னி தளர்ந்தனள் கண்ணம்மா – எது
முன்னஞ் சிவந்தது செல்லம்மா – கதை
முற்றும் விளங்கிடச் சொல்லம்மா 3

**தோழி:**

கட்டி யணைத்தவன் முத்தங் கொடுத்திடக்
கன்னஞ் சிவந்தது முன்னமே – இடை
தொட்டுப் பயின்றவன் சின்னமே – விழி
செக்கச் சிவந்தனள் அன்னமே 4

**செவிலி:**

சூதறி யாதவள் வாதறி யாதவள்
சொக்கி நடந்தனள் மங்கையே – இதில்
யாது நடந்தது தங்கையே – முகம்
ஏக்கம் படர்ந்ததேன் நங்கையே 5

**தோழி:**

காதல் மலர்ந்தது நாணம் பிறந்தது
கண்டு தெளிந்தனள் யாவுமே – துயர்
மாது முகந்தனில் மேவுமே – அவன்
மாலை அணிந்தபின் போகுமே 6

## 24. ஆடினாள்

**(நூல்:–காவியப் பாவை)**

எடுப்பு

ஆடினாள் நடம் ஆடினாள்
அங்கும் இங்கும் எங்கும் ஓடி
–ஆடினாள்

முடிப்பு

சடையோடு மலராடச்
சதிராடும் அவளோடு
நடைபோட முடியாமல்
மடவன்னந் தடுமாற
–ஆடினாள்

முழவாளர் விரலாட
முன்கையில் வளையாட
இழைபோல்என் உயிராட
மழைகாணும் மயில்போல
–ஆடினாள்

அடதாளம் பிழையாமல்
அழகாகக் காலாட
உடனாடு கிண்கிணியும்
மேகலையும் ஊடாட
–ஆடினாள்

வடந்தாங்கும் குடமாடக்
குடந்தாங்கும் இடைஆடத்
தடந்தோளில் குழையாடத்
தணியாதென் மனமா
–ஆடினாள்

விரலாலே மலர்காட்டி
விழியாலே எனைவாட்டிக்
குரலாலே குழலோட்டிக்

குவிமுல்லை நகைகாட்டி

—ஆடினாள்

## 25. ஆட வாராய்!

**(நூல்:—காவியப் பாவை)**

எடுப்பு

ஆடவாராய் என்னோ டாடவாராய்
ஆடுமெழில் மாதரசே! — ஆடவாராய்

—ஆடவாராய்

தொடுப்பு

பாடும்முறை நானறிந்து பாடிடுவேன் பெண்மயிலே
பைந்தமிழே! என்னுயிரே! பாடியபின் தாமதமேன்

—ஆடவாராய்

முடிப்பு

கட்டுதுகிற் கச்சின்மிசை முத்துவடம் ஆடக்
கைத்தலங்கள் மொய்த்தவிரல் கற்றமுறை நாடப்
பட்டுடுத்தும் சிற்றிடையில் மேகலைகள் பாடப்
பற்றுகழற் கெச்சையொடு தெக்கணத்துக் கூத்து

—ஆடவாராய்

அஞ்சனமைக் கண்ணிரண்டும் கஞ்சமலர் விஞ்ச
அம்பொனடிச் செஞ்சிலம்பு தஞ்சமெனக் கெஞ்ச
மஞ்சள்ஒளி தங்குமெழில் கொஞ்சுமுக வஞ்சி
வந்தெனது நொந்துழலும் வேதனைதீர் நெஞ்சில்

—ஆடவாராய்

மெல்லியலே உள்ளமதை நல்விழிகள் சொல்ல
மெய்யுருகி என்மனமும் நின்மனமும் புல்லச்
சொல்லுதொறும் தாள்விரல்கள் தாளவழி செல்லத்
துள்ளிவரும் மான்பிணைபோல் சூழ்ந்துவரும் வல்லி!

—ஆடவாராய்

## 26. விளையும் பயிர்

**(நூல்:—காவியப் பாவை)**

**தலைவன்:**

கொடிதூவும் மலர்யாவும்
அணை யாகுமோ — தென்றல்
குளிர்பூசி மணம்வீசித்
துணை யாகுமோ — நமக்குப்
புணை யாகுமோ 1

**தலைவி:**

மயிலாடக் குயில்பாடும்
வனம் யாவுமே — காதல்
மகிழ்வோடு விளையாடும்
இட மாகுமே — நமக்குப்
பட காகுமே 2

**தலைவன்:**

நிலமீதில் உயர்வானின்
நலஞ் சேருமோ — காதற்
கலையாவும் நிலையாகி
நன வாகுமோ — அன்றிக்
கன வாகுமோ 3

**தலைவி:**

நனவாகும் நலமாகும்
நம தாவலே – காதல்
நினைவாலே உறவாடுங்
குயில் பாடுமே – இந்த
மயில் ஆடுமே 4

**இருவரும்:**

உளம்யாவும் உயிர்யாவும்
ஒன் றாகுமே – காதற்
களமேவும் நமதின்பம்
உயி ராகுமே – விளையும்
பயி ராகுமே 5

## 27. கூடித் திரிவோம்

(நூல்:–காவியப் பாவை)

நெற்றிப் பிறை தனிலே – புரளும்
நீள்சுருள் கூந்தலடி
முற்றத் துறந் தவரைக் – காதல்
மோகத்தில் ஆழ்த்துமடி 1

பேச்சுக் குறும் பதனால் – என்னைப்
பேதுறச் செய்துவிட்டாய்
வீச்சு விழி களினால் – எனக்கு
வேதனை தந்து விட்டாய் 2

கச்சுக் குடங் களினால் – எனக்குக்
கள்வெறி மூண்டதடி
நச்சுப் படம் விரித்தாய் – நெஞ்சம்
நைந்திட நீசிரித்தாய் 3

சின்ன குறு நகைதான் – உன்றன்
செவ்விதழ் ஓரத்திலே
மின்னப் பொழிந் திடுவாய் – என்னுயிர்
மீண்டும் தளிர்த்திடவே 4

வெண்கலத் தண் குரலோ – உனக்கு
வீணை நரம்பொலியோ
பண்கலந் தே இசைத்தால் – இன்பப்
பாற்கடல் மூழ்கிடுவேன் 5

பாடிக் களித் திடுவோம் – இன்பப்
பாலிற் குளித்திடுவோம்
கூடித் திரிந் திடுவோம் – வானக்
கோல வெளிதனிலே 6

## 28. வீணை மீட்டுவோம்

(நூல்:–காவியப் பாவை)

**தலைவன்:**

வானத்திலே கோட்டைகட்டித்
தோட்டம் படைத்தேன் – அங்கே
வாசமலர் பூத்திருக்க
வாழ்வு கொடுத்தேன் 1

தேன்குடிக்கும் நாளைஎண்ணிச்
சிந்தை மகிழ்ந்தேன் – அந்தத்
தெய்வமலர் வாடியதால்

தேய்ந்து சிதைந்தேன் 2

**தலைவி:**

காய்ந்தமலர் வீழ்ந்துவிட்டால்
காலம் மாறுமே – அந்தக்
காலத்திலே வேறுமலர்
பூத்துக் காணுமே 3

பூத்தமலர் வாழ்வுதனில்
புதுமை காட்டுமே – அந்தப்
புதுமைஎலாம் நாளுமின்பப்
போதை யூட்டுமே 4

**தலைவன்:**

வாடுமென்றன் வாழ்விலின்பம்
வந்து கூடுமோ? – காதல்
வாஞ்சையினால் மீண்டும் மன
வண்டு பாடுமோ? 5

**தலைவி:**

நாடிவரும் வீணையிலே
நாதம் இல்லையா? – அந்த
நாதந்தரும் பாடலிலே
நாட்ட மில்லையா? 6

**இருவரும்:**

வீணையினை நாமெடுத்தே
மீட்டி வருவோம் – காதல்
விந்தைஎலாம் கண்டுலகில்
மேன்மை பெறுவோம் 7

---

**பாடல் குறிப்பு:–** காதலில் தோல்வி கண்ட ஒருவனும் அவன்பாற் காதல் கொண்ட மற்றொருத்தியும் பாடுவது.

## 29. ஆற்றங்கரைக் காதலி

**(நூல்:–காவியப் பாவை)**

ஆற்றங் கரையினிலே – ஒரு நாள்
ஆடி அமர்ந்திருந்தேன்
நாற்ற மலர்வீச – நடந்து
நங்கை ஒருத்திவந்தாள்
கூற்று நிகர்கண்ணால் – என்னையே
கொல்வது போல்நடந்தாள்
காற்றெனப் பின்தொடர்ந்தேன் – மெல்லிய
கைம்மலர் பற்றிவிட்டேன் 1

சட்டென நின்றுவிட்டாள் – மார்பில்
சாய்த்துக்கொண் டங்குநின்றேன்
விட்டு விடும்என்றாள் – உயிரை
விட்டிட நான்விரும்பேன்
கட்டிய பெண்போல – என்பால்
காதல் மொழிசொன்னீர்
மட்டிலா அன்புகொண்டால் – மனத்தை
மாற்ற லரிதென்றாள் 2

மந்திர மில்லாமல் – ஓதும்
மறையவர் இல்லாமல்
சந்தன மில்லாமல் – தாலிச்
சரடுமே இல்லாமால்
அந்தஇடம் மணந்தோம் – சான்றும்
அகமன்றி வேறில்லை

தொந்திர வில்லாமல் – நாங்கள்
துணைவர்களாகி விட்டோம் 3

பஞ்சணை தூங்கிடுவேன் – தமிழால்
பாடி எழுப்பிடுவாள்
கொஞ்சு மொழிபேசி – வெந்நீர்
குளித்திட வாருமென்பாள்
நெஞ்சினில் அன்பொழுக – அப்பம்
நெய்யொழுகத் தருவாள்
வஞ்சி விடைதருவாய் – என்றால்
வாள்விழி காட்டிடுவாள் 4

சென்றிடு வேன்அலுவல் – மனையில்
செய்வன செய்திடுவேன்
ஒன்றும் மணியோசை – கேட்டால்
ஓடிடு வேன் அவள்பால்
முன்றினில் நின்றிருப்பாள் – வாயின்
முத்துக்கள் காட்டிடுவாள்
கன்றிடத் தந்திடுவாள் – முத்தம்
கணக்கில் அடங்காவே 5

உடைகளை மாற்றிவிட்டுக் – காற்றில்
உலவிடச் சென்றிடுவோம்
கடைகளும் சென்றிடுவோம் – நல்ல
கட்டுப்பூ வாங்கிடுவாள்
நடைஎழில் காட்டிஅவள் – அரும்பு
நகைத்திடப் பால்கொணர்வாள்
தடையொன்றும் இல்லாமல் – இன்பம்
தந்திடு வாளவளே 6

## 30. *பேசும் தெய்வம்

நூல்:–காவியப் பாவை)

சின்னஞ் சிறியதோர் வாய்திறந்து – மழலை
சிந்துகையில்மன நோய்பறந்து
பன்னரும் பேரின்பம் ஆகுதடா – சித்தர்
பகர்ந்த வெலாமெங்கோ போகுதடா 1

வாரி யணைத்ததைக் கொஞ்சுகையில் – முத்த
மாரி வழங்கிடக் கெஞ்சுகையில்
மீறி உதைத்திடு காலிரண்டும் – பத்தி
மேவி வணங்கிடும் தாளிரண்டாம் 2

வாகண்ணே என்றுகை நீட்டுகையில் – பொக்கை
வாய்திறந் தன்பு சிரிக்குதடா
சோகம் முதற்பகை மாய்ந்திடவே – அது
சுட்டுப் பொசுக்கும்புன் மூரலடா 3

நீராட்டிப் பொட்டிட்டு மேனியிலே – நல்ல
நீலப்பட் டாடையைச் சூட்டிச்சிறு
தேரோட்டம் ஓட்டிநான் காட்டுகையில் – அது
தெய்வத் திருநாளாய்த் தோன்றுதடா 4

மோனத் துயில்கொள்ளும் போதினிலே – இமை
மூடிக் கிடக்குங்கண் மீதினிலே
ஞானச் சுடரொளி வீசுதடா – தெய்வம்
நண்ணிவந் தென்னெஞ்சிற் பேசுதடா 5

கொண்டாடு வாரிடம் கூடிநிற்கும் – அன்பு
கூர்ந்தவர் பாற்குடம் நாடிநிற்கும்
சண்டாளர் நல்லவர் என்றறியா – நெஞ்சம்

சார்ந்திடும் பிள்ளைஎன் தெய்வமடா 6

---

**பாடற் குறிப்பு:–** *இத்தலைப்பில் உள்ள பாடல்கள் அனைத்தும் 'சாகித்திய அகாதெமி' யால் இந்திய மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## 31. செற்றம் தவிர்ந்தேன்

**நூல்:–காவியப் பாவை)**

அடஞ்செய்தாய் நீஎன் றடித்தேன் – பின்னர்
அழுகின்ற கண்கண்டு நெஞ்சந் துடித்தேன்
குடங்கையில் கன்னத்தைச் சேர்த்துத் – துயில்வாய்
குறுநெற்றி எழில்காட்டும் மேலாக வேர்த்து 1

கண்ணீர் வழிந்துலரும் கன்னம் – நெஞ்சைக்
கலக்குவதை யறியாய்நீ கண்ணயர்ந்த பின்னும்;
தண்ணீர் நிறைந்தகுளத் தோரம் – நின்று
தாவிக் குதித்துவிளை யாடினையிந் நேரம் 2

துள்ளித் திரிந்துவிளை யாடி – கெட்ட
துட்டத் தனம்புரியும் சிறுவரொடு கூடிப்
பள்ளிக்குப் போகாமல் நின்றாய் – கண்ட
பலகாரப் பொருளைநீ வாங்கியே தின்றாய் 3

பாடம் படிக்கின்ற வேளை – விட்டாற்
பயனுண்டோ ஆசானுக் கென்சொல்வாய் நாளை?
ஓடும் படிக்கான செல்வம் – அன்றாம்
ஓதித் தெளிந்துணரும் நிலையான கல்வி 4

சட்டையை அழுக்காக்கி விட்டாய் – நோய்க்குச்
சாருமிடம் நீதந்து மேனிநலம் கெட்டாய்
பட்டம்விட் டாடுகிறபோது – செய்தாய்
பக்கத்து வீட்டுக் குழந்தையொடு வாது 5

சினந்தேன்நீ உண்ணுகிற போது – சோற்றைச்
சிதறினாய் வீடெங்கும் என்றறிந்த போது
மனம்போன போக்கிலுனை வைதேன் – பிள்ளை
மனநிலையை அறியாதிக் குற்றங்கள் செய்தேன் 6

குற்றம் பொறுப்பாய்என் கண்ணே – எனநான்
கூறுவதை அறியாய்நீ புரியாய்என் கண்ணே
செற்றம் தவிர்ந்தேன்என் கண்ணே – நாளை
செல்வமே உனனோடு விளையாடு வேனே 7

## 32. பிள்ளைக் குறும்பு

**(நூல்:–காவியப் பாவை)**

எடுப்பு

சொன்னாலும் புரியாத பருவம் – என்றன்
துயரத்தைச் சற்றேனும் உணராத சிறுவன்
–சொன்னாலும்

முடிப்பு

காலைச் சுடர்தோன்றும் முன்னே – தூக்கம்
கலையாமல் கண்விழித் தழுவானென் கண்ணே
பாலைக் கொடுத்தான பின்னே – அந்தப்
பாலன் குறும்புக்கோர் அளவுண்டோ பெண்ணே

—சொன்னாலும்

வாயிலில் மாக்கோலம் போட்டுப் – பின்னர்
வந்தங்கு நோக்குவேன் அவன்கூச்சல் கேட்டுக்
கோயிலில் பிள்ளையார் போலே – அந்தக்
கோலப் பொடிக்குள்ளே மூழ்கித் தவிப்பான்
—சொன்னாலும்

சோறாக்க விடுவானோ பிள்ளை – அப்பப்ப
சொல்லமுடி யாதபடி தருவானே தொல்லை
கூறாக்கி வைப்பானே யாவும் – சமையற்
கூடமவன் பயில்கின்ற போர்க்கூட மாகும்
—சொன்னாலும்

தண்ணீர்க் குடங்களையும் பார்ப்பான் – மூடும்
தட்டங்கள் விட்டெறிந்து தாளங்கள் சேர்ப்பான்
கண்ணீரைக் கொட்டிஅவன் தீர்ப்பான் – தட்டுக்
காலிலே பட்டுத் தெறித்தவுடன் ஆர்ப்பான்
—சொன்னாலும்

தாலாட்டித் தொட்டிலிலே போட்டால் – மெல்லத்
தலைதூக்கிச் சிரிப்பானே என்பாட்டைக் கேட்டால்
வாலாட்டித் திரிகின்ற சேட்டை – சொன்னாலும்
வயிறெரியுங் கேளடிநான் படுகின்ற பாட்டை
—சொன்னாலும்

என்றேனும் நூலொன் றெடுப்பேன் – கண்டால்
என்னைப் பிடித்துத் துவைத்துக் கடிப்பான்
அன்றேஅந் நூலுக்கும் ஆயுள் – தீரும்
ஆனாலும் என்னைத்தான் அவர்நெஞ்சங் காயும்
—சொன்னாலும்

கதவைத் திறந்தாலே போதும் – கண்டு
கடிதோடி முன்வாயில் தெருவிலே வீழும்
பதறி நான் ஓடிவரும் முன்னே – அந்தப்
பவழச்செவ் வாய்நிறையும் பெருவாரி மண்ணே
—சொன்னாலும்

பஞ்சணையில் துயில்கொள்ளும் போது – சின்ன
பாலகனின் பால்வழியும் கண்ணிமையின் மீது
கொஞ்சிவிளை யாடுமெழில் காண்பேன் – செய்த
குறும்பெல்லாங் காணாத தாயுள்ளம் பூண்டேன்
—சொன்னாலும்

## 33. குறிஞ்சி

**(நூல்:—கவியரங்கில் முடியரசன்)**

கலிவெண்பா

பாண்டி எமக்களித்த பாரதி தாசனெனும்
பாண்டியனே! எங்கள் பரம்பரைக்கு நற்றலைவா!

சார்ந்து கவியரங்கில் தண்டமிழால் பாப்புனைவீர்!
ஆர்த்திங்கு வந்த அவையோரே! என் வணக்கம்;

**வள்ளல் மலை**

தூய மனத்தொண்டர் சுப்ரமண்யத் தோன்றல்தமை
மேய புகழ்போல மேலோங்கு நல்லமலை;

பொன்னாடை போர்த்துப் பொலியுமவர் தோற்றம்போல்
மின்னாடு மேகங்கள் மேற்போர்த்த பச்சைமலை;

பண்ணிசைக்கும் வண்டினஞ்சேர் பைம்பொழில்கள் சூழுமலை;
அண்ணலார் நெஞ்சம்போல் தண்ணென் றிருக்குமலை;

வண்ண மலர்தோய்ந்து வாசம் பரிமாற
நண்ணும் குளிர்தென்றல் நாடோறும் வீசுமலை;

வள்ளல் கரம்போல மாணிக்கம் முத்தெல்லாம்
அள்ளி இறைக்கின்ற வெள்ளருவி ஆர்க்குமலை;

வந்தார்க்குத் தந்து மனங்குளிரச் செய்வதற்கு
முந்துவார் போல முகில்குளிரச் செய்யுமலை;

**காட்சி**
அந்த மலைச்சாரல் ஆழச் சுனையாட
வந்தேன் ஒருநாள்; வடிவழகி ஆங்கொருத்தி

வேங்கைமரத் தின்கீழ் விளையாடும் தோழிகளை
நீங்கித் தனியிடத்தில் நின்றிருந்தாள்; அன்னவள்தான்

வார்த்தெடுத்த பொற்சிலையோ**?** வானத்து வெண்ணிலவைப்
பேர்த்தெடுத்துச் செய்தஒரு பெண்ணுருவோ**?** மின்கொடியோ**?**

தேனார்ந்த தாமரையும் செவ்வாம்பல் மென்மலரும்
கானார்ந்த நீலக் கருங்குவளைப் போதிரண்டும்

எள்ளின் மலரும் எழில்மகிழம் பூவுடனே
வெள்ளைநிற முல்லைஅர விந்தத்தின் மொட்டிரண்டும்

செங்காந்தட் பூவிரண்டும் சேர்ந்து மலர்ந்திருக்கும்
எங்கெங்கும் காணா இளவஞ்சிப் பூங்கொடியோ**?**

ஆடுமயிற் சாயலுடன் அன்னத்தின் மென்னடையும்
கூடும் கிளிமொழியின் கூட்டுப் படைப்பாவாள்;

சிற்பி மனத்தகத்துக் கற்பனையாற் காண்பதன்றிப்
பொற்பின் திருவுருவைப் பூரணமாச் சிற்றுளியால்

காட்ட இயலாதே**!** காவியமும் ஓவியமும்
போட்டியிட்டுத் தோற்பதன்றிப் பொற்பெழுதப் போகாத

கண்ணுக் கினியாளைக் கண்டேன் விழிவழியே
நண்ணிக் கலந்துளத்து நானானாள்; கட்டுண்டேன்;

**ஐயம்**
[1]மின்காட்டும் சிற்றிடையாள் [2]மேனாட்டின் ஆரணங்கோ**?**
தென்னாட்டுக் காரிகையோ**?** அன்றி வடநாட்டுப்

பேரணங்கோ**?** எந்நாட்டாள்**?** யாரென்று [3]பேதுற்றேன்
காரணங்கள் கண்டவுடன் என்னாட்டாள் என்றறிந்தேன்;

**தெளிவு**
சிற்றிடையில் காஞ்சிபுரச் சீலை உடுத்தியதால்,
சுற்றிமணி மேகலையும் சூழுவதால், மார்பகத்துச்

சிந்தா மணிஎன்னும் செம்மணியைப் பூணுவதால்,
செந்தா மரைபுரையும் சீறடியில் மாண்புமிகு

செஞ்சிலம்பு கொஞ்சுவதால், சேர்ந்தெனது நெஞ்சிலுறை
வஞ்சியவள் கையில் வளையா பதிகலிக்கக்

குண்டலமோ காதணியாய்க் கூடி விளங்குவதால்,
கண்டாள்மேல் ஐயம் கடிதகற்றி அம்மகள்தான்

தென்னாட்டுக் காரிகையே செய்ய தமிழணங்கே
என்பாட்டிற் கூடும் தலைமகளே என்றுணர்ந்தேன்;

**புனல்தரு புணர்ச்சி**
[4]வெற்பின் சுனைநீரால் வேட்கை தணிப்பதற்கு

முற்படுவாள் என்வேட்கை மூளுவதைத் தானறியாள்;

நீர்பருகுங் காலை நிலைதவறி உள்வீழ்ந்தாள்
'ஆர்வருவார் காப்பதற்கே ஐயகோ!' என்றரற்றத்

தாவிக் குதித்தேன் தடந்தோளிற் கொண்டுவந்து
நீவிக் கொடுத்தேன்; நிலையுணர்ந்தாள் நின்றாள்;

தலைநிமிர்ந்து நோக்கினாள்; தையல் விழிதாம்
கொலைநின்ற அம்போ? கொடுவாளோ? கூர்வேலோ?

நெஞ்சத்துத் தைக்க நிலைதளர்ந்தேன் நோக்கினேன்;
வஞ்சியவள் நாணத்தால் மண்கீறும் கால்விரலைப்

பார்த்தாள்; அவளைநான் பாராமல் நிற்குங்கால்
பார்த்து நகைசெய்தாள்; பாவையவள் *பொன்னகையைக்

காட்டாமல் கொவ்வைக் கனியிதழாம் நற்கதவால்
பூட்டி மறைத்துவைத்தாள்; பூவை யிமையசைவு

வாவாவென் றென்னை வரவேற்புச் செய்வதுபோல்
சாவாமல் என்னுயிரைத் தாங்க உதவியதே!

**தமிழ் மணம்**
'மறையோர் வருவாரோ? மந்திரங்கள் சொல்லி
முறையால் சடங்கெல்லாம் முற்ற முடிப்பாரோ?

வேண்டும் திருமணத்தில் வேள்வி நெருப்புண்டோ?
ஆண்டு நிகழும் அருவினைகள் சொல்க' எனச்,

சேயிழையே! நம்மணத்தில் செந்தமிழே பாட்டிசைக்கும்
காயெதற்கு நல்ல கனியிருக்க? நீயிருக்க

நானும் அருகிருக்க நம்[5]அண்ணல் முன்னிலையில்
தேனும் சுவைப்பாலும் சேர்ந்ததுபோல் வாழ்த்தொலிக்க

நண்பன் [6]அழகப்பன் நம்மைப் படம்பிடிக்கப்
பண்பால் மணமாலை பாவையுனைச் சூட்டிடுவேன்

வேற்று மணமுறைகள் வேண்டேன் நமதுதமிழ்
ஏற்ற செயலொன்றே ஏற்பேன் எனமொழிந்தேன்;

'ஆழச் சுனையகத்தே ஆருயிரைக் காத்தமையால்
வேழத் திறலுடையீர்! வென்றுகொண்டீர் என்னுளத்தை;

அன்றே உமக்காக ஆக்கிவிட்டேன் மெய்யுயிரை;
நன்றே மணம்பெறுவோம் நாயகரே!' என்றுரைத்தாள்

**ஒன்றானோம்**
ஓங்கு மலைக்குறிஞ்சி உண்டாக்கும் ஆறுவந்து
தேங்கி மருதத்தைச் சீராக்கிக் காட்டுதல்போல்

நற்குறிஞ்சி ஈன்றெடுத்த நங்காய் எனைக்கூடி
வற்புடைய வாழ்வை வளமாக்கி வீறளித்தாய்!

நன்செய் மருதநிலம் நம்குறிஞ்சிப் பார்வையின்றேல்
புன்செய் நிலமுமிலாப் புல்லென்ற பாலைநிலம்;

அவ்வண்ணம் நீயின்றேல் அன்பனென் வாழ்வெல்லாம்
பொய்வண்ண வாழ்வாகி வன்பாலை போலாகும்

என்றேன்; அவள்மறித்(து) 'அவ்வா றுரையாதீர்
ஒன்றானோம் நாமினிமேல் உற்றதுணை நீரானீர்

திங்கள் முடிசூடித் தேனருவி ஆர்க்கின்ற
எங்கள் குறிஞ்சி எழில்காண்போம்' என்றுரைத்தாள்;

**அச்சமில்லை**
கொல்லும் விலங்கெல்லாம் கூடித் திரிவதனால்
மெல்லியல்நீ அஞ்சுவையே என்னலும்அம் மேன்மகள்தான்

'யானை புலிகரடி யாழிசைத்தால் தாழ்ந்துநிற்கும்
[7]ஏனல்வனங்காப்பேன் ஏதச்சம்? என்றுரைத்தாள்;

**பாடினாள்**
பாடு குறமகளே! பண்ணொன்று பாடென்றேன்
ஓடும் [8]மறிபோல ஓடியொரு யாழ்கொணர்ந்தாள்;

மெல்விரலால் யாழ்நரம்பை மீட்டிக் குறிஞ்சிப்பண்
நல்லிசையால் பாடினாள் நான்கேட்டு மெய்ம்மறந்தேன்;

**நாட்டை நினைத்தேன்**
தேன்பிழியாய்த் தித்திக்கும் தென்னாட்டின் பண்ணெல்லாம்
ஏன்மறந்தார் இந்நாட்டார்? ஏதேதோ பாடுகின்றார்!

பண்மறந்து போனாலும் பாட்டுப் பொருள்விளங்கத்
தண்டமிழிற் பாடத் தயங்குவதேன்? என்றயர்ந்தேன்;

பாட்டை நிறுத்திப் பசுங்கிள்ளைச் சொல்லாலே
'நாட்டம் இலைபோலும் நான்பாடும் பாட்டி'லென;

நாட்டை நினைந்தேன் நலங்கெட்டுப் போனவர்தம்
கேட்டை நினைந்தேன் கிளிமொழியே! வேறில்லை

**தேனும் தினையும்**
என்றவுடன் என்னருகில் ஏந்திழையாள் வந்திருந்து
குன்றின் குறிஞ்சிக் கிளைவிளைத்த செந்தேனும்

கொல்லைப் புனத்துக் கொழுந்தினையின் மென்மாவும்
வள்ளிக் கிழங்கும் வகையாகத் தான்படைத்தாள்

**சோலைக் காட்சி**
அந்தச் சுவையை அருந்தியபின் ஆங்கிருந்த
சந்தனச் சோலைக்குள் சார்ந்தோம்; ஒருமரத்தில்

பற்றிப் படர்ந்த பசுங்கொடியைக் காட்டினேன்
முற்றச் சிவந்த முகஞ்சிவந்து நாணத்தால்

என்குறிப்பை மாற்ற 'எழிலருவி பாரு'மென்றாள்
தன்குறிப்பை நானுணர்ந்து தையால்உன் கண்போலும்

நீலக் கருங்குவளை நெஞ்சாற் பிணைந்தநமைக்
கோல இதழ்திறந்து கூர்ப்பாக நோக்குதல்பார்!

என்றுநான் காட்ட, 'இதழ்தந்த தாமரையை
நின்று தவிக்கவிட்டு நீள்சுனைக்குத் தாவிவரும்

வண்டொன் றருகிருந்து வாய்சூழல் பாரு'மென்றாள்;
கண்டனத்தைக் கண்டுகொண்டேன் கைதந்த நல்லாரை

வஞ்சித்துக் கைவிட்ட வண்டுச் செயலினைநான்
நெஞ்சத்துங் காணும் நினைப்பில்லேன் என்னுங்கால்

**பிரிவு**
குன்றத்தார் [9]தொண்டகம் கொட்டும் பறையொலியைக்
குன்றத்தாள் கேட்டுக் 'குலத்தலைவர் வந்துவிட்டார்

இன்றுபோய் நாளை இவண்வருவீர்' என்றுரைக்க
நன்றாம் எனப்பிரிந்தேன் நான். 154

---

**பாடற் குறிப்பு:–** 19.10.1958 அன்று, புதுக்கோட்டை அண்ணல் பு.அ.சுப்பிரமணியனார் மணி விழாக் கவியரங்கில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் பாடப்பெற்றது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. மின்காட்டும் – மின்னலைப் போன்ற. 2. மேனாட்டின் – வானுலகின். 3. பேதுற்றேன்–மயங்கினேன். 4. வெற்பு – மலை. *புன்னகை, பொன்னகை எனக் கூறப்பட்டதற்கேற்ப உதடுகள் கதவாக உருவகம் செய்யப்பட்டன. 5. அண்ணல் – அண்ணல் பு.அ. சுப்பிரமணியனார், புதுக்கோட்டை திருக்குறள் கழகத் தலைவர். 6. அழகப்பன் – புதுக்கோட்டை அழகப்பா நிழற்பட நிலைய உரிமையாளர், கவிஞரின் நண்பர். 7. ஏனல்வனம் – தினைப்புனம். 8. மறி – மான்குட்டி. 9. தொண்டகம் – குறிஞ்சி நிலப் பறை.

## 34. போது விரிந்தது

**(நூல்:–பாடுங் குயில்)**

**செவிலி:–**

துள்ளும் [1]பிணை யனையாள் – இன்று
புள்ளி மயில் நடையாள்! – மனம்
கள்ள மிலா தமகள் – இன்று
வெள்கும் முக முடையாள்! 1

ஆடை அணி வகையில் – மனம்
நாடுதல் இன் றியவள் – எங்கும்
ஆடி வரு பவள்தான் – முன்னர்
ஓடித் திரி பவள்தான் 2

ஏந்திழை தா னெடுத்தே – கருங்
கூந்தல் தனை முடித்தாள் – அதில்
பூந்துணர் சேர்த் தமைத்தாள் – புதுச்
சாந்துகள் மேற் படைத்தாள்! 3

கண்ணில்மை பூ சுகிறாள் – கடைக்
கண்களில் பேசுகிறாள் – இதழ்ப்
புன்னகை வீசுகிறாள் – மொழி
என்னென்ன பே சுகிறாள்! 4

செந்தளிர் போ லுடலில் – நறுஞ்
சந்தனம் நீ வுகிறாள் – தனம்
விந்தை தரும் வகையில் – இரு
பந்தென விம் முகிறாள்! 5

மின்னல் இடை தளரச் – சடைப்
பின்னல் கிடந் தசைய – மட
அன்ன நடை நடந்தாள் – கொடி
என்ன அவள் படர்ந்தாள்! 6

செப்புச் சிலை எனவே – இவள்
ஒப்பனை செய் தனளே! – இதை
எப்படிக் கற் றனளோ? – நீ
செப்படி பெண் மகளே 7

**தோழி:–**

மாது திரிந் ததனால் – ஒரு
ஏதம் நிகழ்ந் ததிலை – இளங்
காதல் மலர்ந் ததம்மா – மணப்
போது விரிந் ததம்மா. 8

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. பிணை – பெண்மான்.

## 35. கவிதைக் காதலி

(நூல்:—பாடுங் குயில்)

இன்பங்கள் சூழ்கின்ற போது – நெஞ்சை
எட்டிப் பிடித்துக் களிப்பிக்கும் மாது
துன்பங்கள் வந்துற்ற போதும் – என்னைத்
தொட்டுப் பிடித்துக் களிப்பா ளெப்போதும் 1

கலைமாதின் உள்ளமோ வெள்ளை – என்றன்
கலிதீர்க்க வந்தாடும் போதிலோர் பிள்ளை
அலைமோதும் துன்பத்தில் [1]தள்ளை – வஞ்சி
[2]ஆசிரியத் தருகின்ற இன்பமோ கொள்ளை 2

தனியாக நான்வைகும் வேளை – என்பால்
தாவிக் குதித்துச் சிரிப்பாள்அப் பாவை
இனிதாக வாய்த்துள்ள கோவை – வாயால்
ஈந்தாளே அவ்வின்பம் எந்நாளும் தேவை 3

கண்ணுக்குள் கண்ணாக நிற்பாள் – காதல்
காட்டாற்று வெள்ளைத்தைக் கண்டேத விப்பாள்
பெண்ணுக்குள் ஒன்றாகி நிற்பேன் – ஆ ஆ
பேரின்பம் பேரின்பம் விண்ணுக்கும் அப்பால் 4

கவிமாது முன்வந்த காலை – இன்பங்
காணாமல் கூடாமல் வேறென்ன வேலை?
அவளாகத் தான்வந்து மாலை – சூட்டி
அணைப்பாள் தொடுத்தே கொடுப்பேன்பா மாலை 5

கண்காட்டி விட்டங்குச் செல்வாள் – நானும்
கைகாட்ட என்பால்வந் தேதேதோ சொல்வாள்
பண்காட்டும் பாட்டொன்று சொல்வேன் – இன்னும்
பாடென்று பாடென்று நெஞ்சிற்பு கல்வாள் 6

நெஞ்சங்கள் ஒன்றாகும் போது – மற்ற
நினைவேதும் இல்லாமல் செல்வேன் விண்மீது
கொஞ்சுங்கள் கொஞ்சுங்கள் என்றே – வஞ்சி
கொண்டாடி மன்றாடிக் கெஞ்சுவாள் நின்றே 7

என்பாட்டில் இன்பங்கள் கண்டாள் – விஞ்சும்
எழில்கொண்ட பொற்பாவை நீள்காதல் கொண்டாள்
பின்பாட்டுப் பாடாமை கண்டாள் – என்னைப்
பித்தாக்கி நீங்காத சொத்தாக்கிக் கொண்டாள் 8

---

**பாடற் குறிப்பு:–** 22.9.1975 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–**
1. தள்ளை – தாய். 2.ஆசுஇரிய – குற்றம் நீங்க.

## 36. காதற் காவியம்

(நூல்:—பாடுங் குயில்)

இலக்கியம் ஒன்று படைப்போம் – காதல்
இலக்கணம் முழுமையும் அதனுள் அமைப்போம்
–இலக்கியம்...

மலர்த்தொடை அணிந்திடும் மாதே வருவாய்
மனத்தெழும் உணர்ச்சியை இதழ்வழி தருவாய்
–இலக்கியம்...

ஒவ்வொரு பக்கம் ஒவ்வொரு கதையாம்
ஒன்றினில் ஒன்று விஞ்சிய சுவையாம்

எவ்வகைத் தடையும் இடுபவர் இலையாம்
எடுத்ததை இரவெலாம் படித்திடும் கலையாம்

–

இலக்கியம்...
படித்திடப் படித்திடப் புதியன கிடைக்கும்
பலமுறை முடிப்பினும் விழைவினைக் கொடுக்கும்
படித்தபின் நினைப்பினில் இனிமையைப் படைக்கும்
பயனாய் இலக்கியப் பரிசிலும் கிடைக்கும்

–இலக்கியம்..

---

**பாடற் குறிப்பு:–** 10.9.1976 ஆம் நாள் பாடியது.

## 37. கவிதை உலகு

**(நூல்:–பாடுங் குயில்)**

என்னை மறந்தேன் உன்னுள் கலந்தேன்
எழுந்தது புதுவித உணர்வு – பின்னே
எத்தனை எத்தனை கனவு – கண்ணே
இதுதான் கவிதை உலகு 1

விண்ணில் மிதந்தேன் மண்ணை மறந்தேன்
விரிந்தது கற்பனைச் சிறகு – வான
வெள்ளிகள் தண்முகில் உறவு – தந்த
விளைவே கவிதை உலகு 2

நெஞ்சம் நெகிழ்ந்தேன் அன்பில் நனைந்தேன்
நிறைந்தது வளர்ந்தது கனவு – இன்பம்
நிகழ்த்திய நாடக நினைவு – தந்த
நிழலே கவிதை உலகு 3

சூழல் துறந்தேன் யாவும் மறந்தேன்
சுழன்றது பறந்தது கவலை – அடடா
சுரந்தது நெஞ்சினில் உவகை – அந்த
சுவடே கவிதை உலகு 4

---

**பாடற் குறிப்பு:–** 20.9.1976 ஆம் நாள் பாடியது.

## 38. இதுதான் அவர் வேலை

**(நூல்:–பாடுங் குயில்)**

இதுதான்டி அவர்வேலை – என்னை
ஏறிட்டும் பார்ப்பதில்லை அந்தக் காளை
–இதுதான்

பொதுவான உலகொன்று வேண்டுமாம் அங்குப்
பொருள்யாவும் சமமாக வேண்டுமாம் தோழி
–இதுதான்

அரங்கேறிப் பேசுங்கால் அயராத அருவி
அவர்பேச்சில் மயங்காத பேரில்லை உருகி
உறங்காத விழியோடு புரள்வேனை மருவி
ஒருபேச்சுப் பேசத்தான் பொழுதில்லை அறிநீ
–இதுதான்

வாழ்வுக்கு வழிகாட்டுங் கவிமாலை தொடுப்பார்
வறியோர்தம் துயரங்கள் கண்டுள்ளந் துடிப்பார்
தாழ்வுக்குப் பலியானோர் கண்ணீரைத் துடைப்பார்
தமியாளின் விழிநீரைக் காணாமல் நடப்பார்
–இதுதான்

---

**பாடற் குறிப்பு:–** 20.9.1976 ஆம் நாள் பாடியது.

## 39. ஓடக்காரன்
**(நூல்:–பாடுங் குயில்)**

ஓடத்தான் வந்தான் அன்று – விழி
ஓரத்தால் பார்த்தான் நின்று
–ஓடத்தான்

சூடத்தான் பூவைத் தந்தான் – பூவை
வாடத்தான் நோவைத் தந்தான்
–ஓடத்தான்

ஓடத்தைக் கைகள் தள்ளும் – கயல்
ஓடிப்போய் நீரில் துள்ளும்
நாடத்தாம் கண்கள் துள்ளும் – பெண்மை
நாணத்தால் பின்னே தள்ளும்
–ஓடத்தான்

வேகத்தால் ஓடஞ் செல்லும் – புனல்
வேகத்தைப் பாய்ந்தே வெல்லும்
வேகத்தான் வைத்தான் நெஞ்சம் – அந்த
வீரத்தான் வரவோ பஞ்சம்
–ஓடத்தான்

தீரத்தான் தந்தான் முல்லை – கலி
தீரத்தான் வந்தான் இல்லை
[1]ஓரத்தான் நேரம் இல்லை – ஆற்றின்
ஓரத்தான் வரவே இல்லை
–ஓடத்தான்

கூடத்தே கோலம் வைத்தேன் – எழிற்
கோலத்தை மேலில் வைத்தேன்
கூடத்தான் ஆசை வைத்தேன் – [2]பள்ளிக்
கூடத்தான் வரவே இல்லை
–ஓடத்தான்

தேடத்தான் யாரே செல்வார்! – துயர்
தேயத்தான் யாரே சொல்வார்?
பாடத்தான் நெஞ்சே சொல்லும் – காதற்
பாடத்தான் வரவே இல்லை
–ஓடத்தான்

ஆடத்தான் வைத்தான் என்னை – புனல்
ஆடத்தான் வைத்தான் கண்ணை
வேடத்தான் பொய்த்தான் சொல்லை – காதல்
வேகத்தான் வரவே இல்லை
–ஓடத்தான்

---

**பாடற் குறிப்பு:–** 28.9.1976 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–**
1 .ஓரத்தான் – ஓர்ந்து பார்க்கத்தான்.
2. பள்ளிக் கூடத்தான் – பள்ளியறைக்குரியவன்.

## 40. என் காதலி
**(நூல்:–பாடுங் குயில்)**

அவள்தான் எனக்குக் காதலி – என்
ஆவியில் மெய்யில் நடமிடும் மாதவி
–அவள்

எழுத்தென்னும் மலரெடுப்பாள்
எழிலாகத் தொடைமுடிப்பாள்

கழுத்தில்அசை படநடப்பாள்
காலடியில் சீர்படைப்பாள்
—அவள்

தலைமயங்கச் சுவைகொடுப்பாள்
தளையுண்டு தவங்கிடப்பாள்
கலைவிளங்க எனை அணைப்பாள்
கனவுலகை வரவழைப்பாள்
—அவள்

[1]பாவாடை அணிந்திருப்பாள்
பயிர்போல விளைந்திருப்பாள்
நாவாரக் கனிந்திருப்பாள்
நான்பாட மகிழ்ந்திருப்பாள்
—அவள்

---

**பாடற் குறிப்பு:–** 15–10–1976 ஆம் நாள் பாடியது.
**(பாவுக்குரிய எழுத்து, அசை முதலிய உறுப்புகள் இப்பாடலில் சுட்டப் பட்டுள்ளன)**

**அருஞ்சொற் பொருள்:– 1.** .பாவாடை– பா ஆடை.

## 41. அவளொரு காவியம்
**(நூல்:–பாடுங் குயில்)**

அவளொரு புதிய காவியம் – என்றும்
அவள்தான் எனக்குயி ரோவியம்
—அவள்

கவரும் படியொரு நடையழகு – நெஞ்சில்
கலந்தே சுவைதரும் மொழியழகு – கொண்ட
—அவள்

கைவளை சிலம்புடன் சந்தங்கள் காட்டும்
காதொடு தோள்கள் அணிநலங் கூட்டும்
மெய்யெழில் வாயிதழ் வண்ணங்கள் சேர்க்கும்
மெல்லிய அவள்குரல் இன்னிசை வார்க்கும்
—அவள்

கருவிழி ஓரங் காதலைக் கண்டேன்
கனியிதழ் ஓரம் **நகை**எழில் கண்டேன்
சுருள்குழல் மலரொடு தோள்களி ரண்டும்
சுமந்திடும் இடைதனில் **அவலமு**ங் கண்டேன்
—அவள்

பால்மொழி ஊடலில் **வெகுளி**யைக் கண்டேன்
பணிந்தபின் கூடலில் **மருட்கை**யைக் கண்டேன்
நால்வகைக் குணங்களுள் **அச்சமு**ங் கண்டேன்
**நாணு**ம் பொழுதொரு நாடகம் கண்டேன்
—அவள்

பயிலும் பொழுதோ நடுஇர வாகும்
பாலும் பழமும் சரிநிகராகும்
துயிலும் பொழுதோ ஒருசிறி தாகும்
தொடரும் சுவையோ மிகப்பெரி தாகும்
—அவள்

---

**பாடற் குறிப்பு:–** 18.11.1976 ஆம் நாள் பாடியது.
**(நகை, அவலம், வெகுளி, மருட்கை, அச்சம் முதலிய காப்பியச் சுவைகள் இப்பாடலில் சுட்டப் படுகின்றன)**

## 42. தானே வருவாள்
**(நூல்:–பாடுங் குயில்)**

எனக்கொரு காதலி இருக்கின்றாள் – அவள்
ஏனழைத் தால்வர மறுக்கின்றாள்?
மனத்துட னாஅவள் வெறுக்கின்றாள்? – இல்லை
மணந்திட வேஉளந் துடிக்கின்றாள்

சாற்றைத் தரவே கனியோடு
தானே வருவாள் கனிவோடு
காற்றில் மிதப்பேன் அவளோடு
கண்ணில் மூடும் இமையோடு 2

ஆடகப் பொன்னின் சிலம்போசை
அட்டா மேகலை தரும்ஓசை
நாடகம் ஆடும் வளையோசை
நாடொறும் கூடும் எனதாசை 3

[1]போதை என்பது விதையாகும்
புலமை என்பது மழையாகும்
காதல் என்பது வயலாகும்
கவிதை என்பது பயிராகும் 4

---

**பாடற் குறிப்பு:–** 25.11.1976 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. போதை – தன்னைமறந்த நிலை.

## 43. யாழெடுத்து வா

**(நூல்:–பாடுங் குயில்)**

யாழொன்றை எடுத்தோடி வாடி – இன்பம்
யாதென் றுணர்த்தாயோ பாடி?
–யாழ்

வாழ்வென்றும் உனக்கென்றே வாழ்கின்றேன் – வாட்டி
வருத்தாமல் மறுக்காமல் உறைநீக்கி நல்ல
–யாழ்

புதுமைக்கு வழிகாட்டு புலமைக்கோர் உணர்வூட்டு
பொருள்மிக்க பழம்பாட்டின் புகழுக்கு மெருகேற்று
மதுகைக்கும் படியாக மனத்துக்கு மகிழ்வூட்டு
நலமிக்க இசைமீட்ட நரம்புக்கு முறுக்கேற்று
–யாழ்

---

**பாடற் குறிப்பு:–** 5.2.1977 ஆம் நாள் பாடியது.

## 44. கவிதை எழுதிய காகிதம்

**(நூல்:–பாடுங் குயில்)**

கவிதை எழுதிய காகிதம் ஆனேன் – அவர்
கவிதையைச் சுவைத்ததும் காகிதம் ஆனேன்
–கவிதை

புவியோர் போற்றும் புலமையில் உயர்ந்தார்
போனவர் இன்னும் ஏன்வர அயர்ந்தார்
–கவிதை

கையில் எடுப்பார் கண்வழி படிப்பார்
காணும் மகிழ்வால் நெஞ்சது துடிப்பார்
செய்ய இதழ்கள் சிறிதுடன் மடிப்பார்
செந்தமிழ்ப் பாட்டின் செழுந்தேன் குடிப்பார்
–கவிதை

ஒவ்வொரு சொல்லிலும் உளத்தினைக் கொடுப்பார்
ஒளிவிடும் அணியின் உயர்வினை வியப்பார்
செவ்விய அடிதொடை சீர்எழில் தொடுப்பார்
செந்தமிழ்ப் பாட்டின் செழுந்தேன் குடிப்பார்
–கவிதை

---

**பாடற் குறிப்பு:–** 3.8.1978 ஆம் நாள் பாடியது.

## 45. காதல் இலக்கணம்
**(நூல்:—பாடுங் குயில்)**

இதுதான் காதல் இலக்கணமோ? — தோழி
இடர்தான் பயனாய் வெளிப்படுமோ?
—இதுதான்

எதுநான் செயினும் எனையே மறப்பேன்
ஏதும் புரியாமல் தனியே விழிப்பேன்
—இதுதான்

புனலாட மனமில்லை துயிலாட வழியில்லை
புலந்தாட அவரில்லை புகுந்தாட மகிழ்வில்லை
கனலாடும் நிலவுண்டு கனவாடும் இரவுண்டு
கடுகேனும் உணவுண்ணக் கருதாத வயிறுண்டு
—இதுதான்

பிரிவாலே துயருண்டு பிறழ்கின்ற உடலுண்டு
பேணாத குழலுண்டு சூடாத மலருண்டு
வருவாரோ எனஎண்ணி மயலாடும் மனமுண்டு
மணவாளன் தனைக்காணத் [1]தணவாத உயிருண்டு
—இதுதான்

---

**பாடற் குறிப்பு:—** 30.6.1979 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:—** 1. தணவாத — பிரியாத.

## 46. அழகிய மணவாளன்
**(நூல்:—பாடுங் குயில்)**

அவர்போல மணவாளன் யாரடி? — என்றன்
ஆரணங்கே உண்டென்றால் கூறடி
—அவர்

கவர்கின்ற மொழிபேசும் சொல்லழகன் — என்பால்
காலமெ லாம்பொழியும் அன்பழகன் — ஆணழகன்
—அவர்

உறவாடி மகிழ்வூட்டும் குணத்தழகன் — கொள்கை
உரமேறி நிற்கின்ற மனத்தழகன் (பொன்)
நிறமான உடலாலே வனப்பழகன் — என்றன்
நிழலான அவர்தானே எனக்கழகன் — அழகன்
—அவர்

பழியேதுங் காணாத நடையழகன் — நல்ல
பால்போலும் நிறமான உடையழகன்
மொழியாலே போராடும் படையழகன் — பகைவர்
முகம்நாண உரையாடும் விடையழகன்
—அவர்

---

**பாடற் குறிப்பு:—** 1.7.1979 ஆம் நாள் பாடியது.

## 47. பிரிவில் கண்ணகி
**(நூல்:—தமிழ் முழக்கம்)**

எண்சீர் விருத்தம்

காவிரியின் புகுமுகமாம் பட்டி னத்துள்
　　கார்தவழும் நெடுமாட வீதி ஒன்றில்
பூவிரிந்து கொடிபடர்ந்து கோலஞ் செய்யும்

புகுவாயில் மாளிகையின் சாள ரத்துத்
தாவுமெழிற் கொடியொன்று கொழுகொம் பின்றித்
தனியாக அசைந்தாடி நீர்பி லிற்றக்
கூவிழந்து குயிலங்கே தேம்பக் கண்டேன்
கோலமயில் ஆடாமல் நிற்கக் கண்டேன். 1

மலர்முழுதும் செடிகொடியில் வெதும்பக் கண்டேன்
மணம்பரப்பும் அம்மலரைக் கொய்வா ரில்லை;
புலர்பொழுதிற் புல்லென்ற முன்றில் கண்டேன்
பூங்கொடியார் இடுகின்ற கோலம் இல்லை;
பொலிவிழந்து நெடுங்கதவம் நிற்கக் கண்டேன்
புதியரென விருந்தயர வருவா ரில்லை;
பலவகைய புள்ளினமும் வாடக் கண்டேன்
பழந்தந்து பால்தந்து புரப்பா ரில்லை. 2

கடலாடை உடுத்தமகள் கதிரோன் என்ற
கணவனவற் பிரிந்தமையால் மலர்க்கண் மல்கித்
தடநீரைச் சிந்தமருண் மாலை கூடித்
தரையெல்லாம் மயக்குறுத்தத், திசைகள் சோர,
இடமேதும் இல்லைஎனச் சொல்லும் வண்ணம்
இரவெழுந்து படையெடுத்துச் சூழ்ந்து நிற்க,
உடுவாகக் கண்ணீரைத் துளித்துக் கொட்டி
உயர்வானில் நிலவணங்கு தனித்து நின்றாள். 3

புறமெல்லாம் அவலத்தின் குறிகள் காட்டப்
பொன்னிறத்த மனையகத்துப் புகுந்து சென்றேன்;
நிறமெல்லாம் ஒளிகுறைந்து, பிரிவுத் துன்பம்
நெஞ்சமெலாம் மிகநிறைந்து, புவியி லுள்ள
துறவெல்லாம் சேர்ந்ததுபோல் நலம்து றந்து,
துணைவிழிகள் நீர்துறந்து, துயில்து றந்து – அவ்
விரவெல்லாந் தவஞ்செய்யுங் கற்புத் தெய்வம்
இன்னலுக்கோர் வடிவுதந்து விளங்கக் கண்டேன். 4

அடிமலருங் கொடியிடையும் வறிதே யாக
அணிசிலம்பும் மேகலையும் பேழை வைகும்;
நெடிதுயிர்ப்ப மங்கலநாண் அணிந்த தன்றி
நேரிழைகள் அத்துணையுந் துறந்த மேனி
கொடியெழுத மறந்துவிட்ட தோளில் வண்ணக்
குங்குமத்தின் சுவடில்லை பொலிவும் இல்லை;
வடிபுனலால் விழிமுழுதும் சிவந்த தன்றி
வண்ணவிழி மையெழுதிக் கருக்க வில்லை. 5

கரும்புருவச் சிலைநுதலின் திலக மெங்கே?
காதமர்ந்து தோள்வருடும் குழைகள் எங்கே?
அரும்புமிள நகைஎங்கே? கொவ்வை தோற்கும்
அவ்விதழின் நிறமெங்கே? எழிலும் எங்கே?
சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் கொத்தும் எங்கே?
குழற்பூசும் நறுநெய்தான் எங்கே எங்கே?
இரும்புமனம் குழைவிக்கும் துயரந் தாங்கி
இருக்கின்ற மாமணியை அங்குக் கண்டேன். 6

சுடர்காலுஞ் செங்கதிரை வழிய னுப்பித்
தொடுவானில் வெண்மதியம் ஆட்சி செய்ய,
மடவார்கள் கொழுநரொடு மாட முன்றில்
மலர்தூவு பஞ்சணையிற் சார்ந்து, கொண்டான்
தடமார்பில் புதையுண்டும் புலந்தும் கூடித்
தண்ணிலவுப் பயன்கொண்டு, மலர்கள் சிந்தக்
கொடிபோல நுடங்கினராய்த் துயிலில் ஆழ்ந்தார்;
குலமகளாம் கண்ணகியோ துயரில் ஆழ்ந்தாள். 7

தற்கொண்ட காதலனைத் தணியா இன்பந்
தந்தவனைக் கோவலனைப் பிரிந்து நின்ற
விற்கொண்ட புருவத்தாள் நினைந்த ழுங்கி
வேதனையில் அழுதழுது சிந்தும் நீரால்

சொற்கொண்ட புகார்ப்பதியின் கடல்நீர் யாவும்
சுவைமாறி உவர்ப்பாகிப் போயிற் றந்தோ!
இற்கொண்ட அவளிருப்பு நெய்தல் ஆகும்
இரங்குதலே அவளுரிமைப் பொருளும் ஆகும். 8

கண்ணகியை ஏன்பிரிந்தான்? அவளி டத்துக்
கண்டகுறை ஒன்றுண்டா? இல்லை இல்லை;
எண்ணரிய செல்வத்தான் வான்நி கர்த்த
ஈகைவலான் மாநாய்கன் மகளாய் வந்தாள்;
வண்ணமுக மங்கையர்கள் தொழுது போற்ற
வயங்கியநற் பெருங்குணத்தாள்; வடிவு சொல்ல
மண்ணகத்து நிகரில்லை; காமன் தேவி,
மண்மகள்என் றிவர்தாமே ஒருசார் ஒப்பர். 9

பொற்கொடியோ பூங்கொம்போ என்ற யிர்க்கப்
பூத்திருக்கும் நலமுடையாள், கொண்டான் சொல்லும்
சொற்படியே நடக்கின்ற மென்கு ணத்தாள்,
சூதறியாள், அவள்வயதோ ஈரா றாண்டு,
பொற்புடைய தெய்வமகள், கற்பின் செல்வி,
புரையில்லாக் குலக்கொம்பர் இந்த மின்னை
[1]எற்கடியோ பிரிந்திருந்தான் துன்பந் தந்தான்?
ஈரமிலா நெஞ்சத்தான் செல்வக் கோமான். 10

“நெற்றிக்குப் பிறைநிகராம்; வேலி ரண்டு
நீள்விழிக்குச் சரிநிகராம்; விழியின் மேல்பால்
உற்றிருக்கும் கரும்புருவம் கரும்பு வில்லாம்;
ஒளிமல்கும் வச்சிரத்தின் நடுப்பா கந்தான்
சிற்றிடைக்கு நிகராகும்; இயல்பான் வந்த
சீரிளமைப் பேரழகை மாதர் கூடி
எற்றுக்குச் செயற்கையினாற் கோலஞ் செய்தார்?
எதைஎதையோ சுமையாகப் பூட்டு கின்றார்!” 11

“கானகத்தே தோகைமயில் சென்று புக்குக்
கரந்துறையக் காரணமென்? துள்ளும் புள்ளி
மானடுத்த விழியாளின் சாயல் வேண்டி
மனமுடைந்து படுதோல்வி கண்டே யன்றோ?
மீனடுத்த புனல்தொடுத்த வயல்வ ரப்பில்
மெலிந்தொதுங்கி அன்னங்கள் வாழ்வ தென்கொல்?
தேனடுத்த மொழியாளின் நடையைக் கற்கத்
திணறியதால் தவறியதால் வெட்கி யன்றோ?” 12

“மழலைமொழிக் கிள்ளைஎலாம் பிரியா தங்கு
மங்கையிவள் கையகத்தே நிற்ப தென்கொல்?
குழலிசையும் யாழிசையும் அமிழ்தப் பாகும்
குழைத்தெடுத்த இவள்குரலைக் கற்க அன்றோ?
அழகுவலம் புரிமுத்தே! கரும்பே! தேனே!
அருமருந்தே! கதிர்மணியே! பொன்னே! நின்னைச்
சுழல்அலையிற் பிறவாத அமிழ்தம் என்கோ?
சொல்யாழிற் பிறவாத இசைதான் என்கோ?” 13

என்றெல்லாம் கண்ணகியை நலம்பா ராட்டி
இசைத்தவன்தான் அவள்நலியப் பிரிந்து விட்டான்;
மன்றலன்று வாழ்த்துங்கால் மாதர் கூடி
மன்னவனைப் பிரியாமல் [2]கவவுக் கைகள்
ஒன்றுதலில் ஞெகிழாமல் அறுக தீதென்
றுரைமொழியை எதிர்மறையால் மொழிந்து நின்றார்;
அன்றவரே பிரிவுண்மை அறிந்த தாலே
அவ்வண்ணம் பகர்ந்தனரோ அந்தோ! அந்தோ! 14

காதலரைப் பிரிமாதர், பெற்றெ டுத்த
கனிமழலை மகவுமுகம் நோக்கி நின்று
நோதகவு தணிந்திருப்பர்; பிரிவில் வாடி
நுடங்குகின்ற கொடியிடையாள் கண்ண கித்தாய்
மேதகுநல் முதுபார்ப்பான் மறையு ணர்த்த

மேவுமழல் வலஞ்செய்து மணந்து கொண்டும்
காதலெனுங் கடல்மூழ்கி நின்றும் அந்தக்
கடல்தனிலே முத்தொன்றும் கண்டா ளல்லள். 15

ஆதலினால் பிரிவென்னுங் கொடிய பாவி
அவட்களித்த பெருந்துயரம் தணிக்கும் ஆற்றை
ஏதொன்றும் அறியாளாய் இரங்கி நெஞ்சை
இடருக்கே அளித்துவிட்டாள்; கோவ லற்கு
மாதவிபோல் எழுதவிலை முடங்க லொன்றும்
மனத்தகத்தே குமுறலெலாம் எழுதி வைத்தாள்;
தீதறியா அன்னையிவள் பிரிவுத் துன்பம்
செப்புதற்கு முயல்வமெனின் இயல்வ தொன்றோ? 16

காதலரைப் பிரிந்தமையால் வருந்தும் மாதர்
கண்சிவந்து வெகுண்டிருப்பார்; அதுத ணிக்கும்
சூதறிந்த ஆடவர்தாம் விருந்தாய் வந்தார்
துணையுடனே இற்புகுதச் சிவப்பு மாறி
மாதர்விழி கருங்குவளை நிறமே எய்தும்;
மனக்குறிப்பைக் கருப்புடனே சிவப்புக் காட்டும்;
கோதறியா இவள்விழியோ சிவக்க வில்லை
கொட்டுகிற புனலோடு கருமை காட்டும். 17

உயிரனைய தேவந்தி என்னுந் தோழி
உளமுருகிக் கண்ணகிபால் வந்து நின்று,
''செயிரறுநீர்க் குண்டங்கள் இரண்டுள் மூழ்கிச்
சிந்தையினால் காமனைநாம் வணங்கி நின்றால்
துயரொன்றும் அணுகாமல் இன்பம் மேவித்
துணையுடனே வாழ்வுவரும்'' என்றா ளாக,
''மயலுடையாய் துறைமூழ்கித் தெய்வம் போற்றல்
மரபன்றே; எங்கட்குக் கணவன் தெய்வம்''. 18

எனவுரைத்துத் தமிழகத்து மரபு காத்தும்
எழும்போதும் கொழுநனையே தொழுது வாழும்
நனவகத்து நிறைமாதர் மானங் காத்தும்
நாம்வணங்குந் தெய்வமென ஆற்றி நின்றாள்;
தினவகத்தான் மாதவியைப் பிரிந்து, மீண்டு,
''செல்வமெலாம் இழந்தமையால் நாணு கின்றேன்''
எனவுரைத்தான்; ''உளசிலம்பு கொள்க'' என்ற
இன்முகத்தாள் பண்புளத்தை யாண்டுக் காண்போம்? 19

பிரிவாலே துயரடைந்தும், மீண்டு வந்தான்
பின்சென்று படருழந்தும், கணவற் காக
இருள்வானின் நிலவாக வாழ்ந்து நின்றாய்!
இன்றுணைவன் கொடுங்கோன்மைக் கிரையாய் மாண்ட
உரையாலே நின்னுளத்துக் கொழுந்து விட்ட
ஒளிநெருப்பால் வென்றிகண்டாய்! கொடுங்கோல் சாய்க்க
எரிதானோர் வழியென்றால் என்னு ளத்தும்
எரிதழலை மூட்டிவிடு தாயே வாழி! 20

---

**பாடற் குறிப்பு:–** திருச்செங்கோடு கண்ணகி விழாக் கவியரங்கில் பாடியது – 24.5.1964.

**அருஞ்சொற் பொருள்:–**

1. எற்கடி – எற்கு+அடி =ஏனடி. 2. கவவுக்கைகள் – அணைத்த கைகள்.

## 48. காலம் வரும்–நேரம் வரும்

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

கலிவெண்பா

மேலைத் திசையெல்லாம் மேற்பரப்பில் செவ்வொளியை
மாலைக் கதிரோன் மனம்மயங்கப் பாய்ச்சியதால்
வானத்துக் கார்முகில்கள் வண்ணம் பலகாட்ட

நானந்தக் காட்சி நலங்கண்டு மெய்ம்மறந்தேன்;
என்னகத்தே ஆட்சிசெயும் இன்றமிழின் முன்பிறந்த
தென்னகத்தின் சொத்தான தென்றலெனும் மென்காற்று
வாவி புகுந்து வளர்தா மரைவருடி,
நீவி வரும்போழ்து நீள்மாட மாளிகையில்
தாவிப் படர்ந்துகொடி தள்ளாடும் முல்லைவிரி
பூவிற் படிந்து, புதுமணத்தை மொண்டுகொண்டு,
கொட்டுங் கழைக்கூத்தி கோல்நட்டு [1]வேழம்பர்
கட்டும் நெடுங்கயிற்றில் கால்வைக்கும் பாங்கெனவே
மெல்ல நடம்பயின்றென் மேனியினைத் தீண்டுதலால்
சொல்லரிய ஓரின்பச் சூழ்நிலையில் நானிருந்தேன்;
கொஞ்சுங் கனியிதழில் கொவ்வைச் சிவப்பேந்தி,
[2]மஞ்சின் கருமையெலாம் வார்கூந்தல் மேலேந்தி,
நீண்ட கயல்விழியில் நெஞ்சக் குறிப்பேந்திப்,
பூண்ட சிலம்பொலியைப் பூவடியில் தானேந்தி,
மாநிலத்துப் பூத்த மலரெல்லாந் தந்தஎழில்
மேனியகத் தேந்தியவள் மெல்லியநற் கைம்மலரில்;
ஆவின்பா லேந்தி அழகுச் சிலைபோலப்
பூவின் முகஞ்சுருங்கப் போந்தருகில் நின்றிருந்தாள்;
தென்றலுக்குப் பின்வந்தாள் தெள்ளமிழ்தம் கைக்கொடுத்து
நின்றிருக்கக் கண்டு நிமிர்ந்து முகம்பார்த்தேன்;
செந்தா மரைமுகத்தில் சேர்ந்த சிரிப்பெங்கே?
நந்தா ஒளியெங்கே நன்மலர்ச்சி தானெங்கே?
வந்த துயரத்தை மாற்றும் மருந்தாகும்
இந்த எழில்முகத்தில் ஏக்கம் படருவதோ!
என்று துடிதுடித்தேன் இன்ப நிலைமறந்தேன்
ஒன்றும் புரியாமல் உள்ளம் பதைபதைத்தேன்;
பால்தந்த பாவாய் பசுந்தமிழே என்னுயிரே
சேல்தந்த நின்விழிகள் செக்கச் சிவந்தனவே
நெஞ்சங் கடுக்க நிகழ்ந்த செயலென்ன?
வஞ்சியுன் வாண்முகத்தில் வாட்டம் அரும்புவதேன்?
செந்தமிழ்க்கும் உன்றனுக்குந் தீங்குவர நான்தரியேன்
வந்ததுயர் யாதென்று வாய்விட்டுச் சொல்கண்ணே
என்றுருகி நான்கேட்டேன்; என்றன் உயிரனையாள்
“நன்று நன்று நும்நடிப்பு! நாடகமோ ஆடுகின்றீர்?
நல்ல படமொன்று நாளும் பலர்கூடிச்
செல்லும் அதுகாணச் சேர்ந்துநாம் சென்றுவர
நாலாறு நாளாக நான்கெஞ்சிக் கேட்கின்றேன்
பாலாகத் தேனாகப் பேசிப் பகட்டுகின்றீர்
இன்றென்றும் நாளையென்றும் ஏய்த்து வருகின்றீர்!
ஒன்றென்ன நூறுண்டே உங்கள் விளையாடல்
அஞ்சாறு திங்களா ஆரணிப் பட்டொன்று
கெஞ்சாத நாளில்லை கேளாத நேரமில்லை
காஞ்சிபுரப் பட்டா கனத்தவிலை என்பதற்கு?
வாஞ்சை யிருக்குமெனில் வாங்கித் தருவீர்கள்;
இன்னும் புகல்வதெனில் எவ்வளவோ ஈங்குளவே!”
என்னும் மொழிகூறி ஏந்திழையாள் ஊடிநின்றாள்;
ஆடல் மயிலணங்கே ஆருயிரே தேன்மொழியே!
ஊடல் மிகுந்தமையால் உள்ளம் புலந்தனையோ?
ஆரணி ஒன்றென்ன ஐம்பதுடன் காஞ்சிபுரம்
நூறணியக் காலம்வரும் நேரம்வரும் நுண்ணிடையே
ஊடல் தவிர்ந்தெழுக உன்மகிழ்வே என்மகிழ்வு
பாடல் தருஞ்சுவையே பண்பின் உறைவிடமே
இன்றே படங்காண ஏகுவோம் நீசென்று
நன்றே உடைமாற்றி வாவென்று நானுரைத்தேன்;
சொல்லி முடிக்குமுனம் துள்ளிக் குதித்தெழுந்
தல்லிக் கொடிபோல் அசைந்தோடி உட்புகுந்து
செப்புச் சிலைபோல ஒப்பனைகள் செய்துவந்தாள்
அப்பப்பா என்னே அழகு!

---

**பாடற் குறிப்பு:–** திருப்புத்தூர்க் கவியரங்கில் பாடியது – 8.6.1965.

**அருஞ்சொற் பொருள்:–**

1. வேழம்பர் – கழைக்கூத்தர். 2. மஞ்சு – மேகம்.

## 49. அவள்தான் பாடவைத்தாள்
(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)

அவள்தான் என்னைப் பாட வைத்தாள்
அவனியிற் பெரும்புகழ் சூடவைத்தாள்
—அவள்தான்

பாலா கினும்சுவைத் தேனாகினும்
பாகா கினும்தரும் கேளாமலே
நாலா யிரங்கவி நூலாகவே
நான்பாடு வேன்அவை பாராமலே
—அவள்தான்

கொஞ்சம் வருவாய் எனநான் அழைப்பேன்
கொஞ்ச வருவாள் என்னுளம் அணைப்பாள்
வஞ்சி எனநான் வாய்விட் டழைத்தால்
வஞ்சியேன் வஞ்சியேன் என்றுளந் துடிப்பாள்
—அவள்தான்

கண்ணசை வாலொரு காப்பியம் படிப்பாள்
கையசை வாலெழில் ஓவியம் படைப்பாள்
பெண்ணியல் யாவையும் என்னிடங் கொடுப்பாள்
பெரும்பெருங் காப்பியம் தரும்படி உரைப்பாள்
—அவள்தான்

## 50. புதிய உலகம்
(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)

அழகொழுகுந் தாமரைப்பூ மலர்ந்து காட்ட
அதன்நடுவே இருகுவளை விரிந்தி ருக்க
எழில்தவழும் எள்ளின்பூ எடுப்பாய் நிற்க
இனியநிறத் தரக்காம்பால் அவிழ்ந்து தோன்ற
கொழுமுகைகள் செறிமுல்லை வரிசை காட்டக்
குவிகமல மொட்டிரண்டு நிமிர்ந்து நிற்கச்
செழுமையுறு செங்காந்தள் விரிந்து தோன்றச்
செப்பரிய மெல்லியநல் லனிச்சம் தாங்கி 1

ஒசிந்தாடி வருகின்ற கொடியைக் கண்டேன்
உள்ளமெலாம் நயந்தோடி உருகி நின்றேன்;
கசிந்தோடும் அன்புக்குக் கரைகள் கட்டிக்
காப்பமைத்தேன்; ஆயினுமவ் வன்பு பொங்கி
வசங்காணாக் காதலெனும் வடிவங் கொண்டு
வாட்டியதால் அக்கொடியின் மலர்கள் தம்மைக்
கசங்காமல் நுகரஎழும் ஆசை காட்டிக்
கண்ணிமைக்க மனமின்றி நோக்கி நின்றேன். 2

அவள்முகத்தில் மாங்கதுப்பில் அரும்பி நின்ற
அணிமிகுத்த இளஞ்சிவப்பை, மலையில் மண்ணில்
தவழ்நிறத்துப் பூவிலெலாங் கண்ட தில்லை!
தமிழச்சி நாணத்தின் வண்ணம் போலும்!
குவளைமலர்க் கருவிழியை ஓரம் போக்கிக்
குனிந்துநிலம் கால்விரலால் கிளறி நின்றாள்
தவளமலர் நகைமறைத்த இதழ்கள் மீது
தனித்துடிப்பை முறுவலொடு தவழ விட்டாள். 3

பூப்பொறித்த மேலாடை திருத்தி விட்டாள்
புறமுதுகில் தொங்குகிற சடையை மார்பின்
மேற்புறத்துப் படரவிட்டாள்; பார்த்த பின்னர்
மேலுமதைப் பின்புறத்தே புரள விட்டாள்;
யாப்புறுத்த என்மனத்தைத் துடிக்க வைத்தாள்;
எழிலெல்லாந் தன்னிடத்தே படைத்து வைத்துக்

காப்பளிப்பாள் செய்கின்ற செய்கை எல்லாம்
காதலுக்கோர் அறிவிப்பாம் என்று கண்டேன். 4

செம்புலத்துப் பெயல்நீர்போல் இருவர் நெஞ்சும்
சேர்ந்தமையால் இல்லறத்துப் பள்ளி புக்கோம்;
ஐம்புலத்தை ஒருபுலமே யாக்கி யங்கே
அளப்பரிய கலைபலவுங் கற்று வந்தோம்;
அம்புவிக்கு விளக்காக விளங்குந் திங்கள்,
அளவில்பல விண்மீன்கள், அகன்ற வானம்
எம்முளத்தில் புதியகதை பலவுஞ் சொல்ல
இணைகூற முடியாத உலகஞ் சென்றோம். 5

## 51. பனி பொழியும் நிலவில்...

(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)

துறைதோறுந் துறைதோறுந் தீமை செய்யும்
துணிவுடைய மாந்தர்நிலை எண்ணி எண்ணிக்
கறையேறித் துயரேறிக் கவலை யேறிக்
காதோரம் நரையொன்று நிமிர்ந்து நிற்க
முருகேறும் மலர்க்குழலாள் அதனைக் கண்டு,
'முதுமைவர அறிவிப்போ?' எனந கைத்தாள்;
முறைகேடு கண்டதனால் கவலை விஞ்சி
முதிர்ந்துளதை அறிவிக்குஞ் சின்ன மென்றேன். 1

'எதிர்வீட்டுப் பிள்ளைகளைப் பாரும் அத்தான்
எழுந்தவுடன் புத்தகத்தை எடுப்பார் மாலைக்
குதியாட்டம் முடிந்தவுடன் விளக்கை ஏற்றும்
குறிப்பறிந்து புத்தகத்தைப் படிப்பார் ஈது
மதியூட்டுஞ் செயலன்றோ? பெற்றோர் சொல்லை
மதித்தொழுகும் பாங்கினைத்தான் பாரும்' என்றாள்;
எதிர்காட்டுங் காலத்தில் முன்னேற் றங்கள்
இருத்தலைமுன் னுணர்த்துகிற செயலீ தென்றேன். 2

தெருக்கடைசி வீட்டிலுந்தான் பிள்ளை யுண்டு
திரிந்தலையும் போக்கினைத்தான் பார்க்கின் றோம்நாம்;
உருப்படுமா றொருசெயலுஞ் செய்வ துண்டா?
ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்வ துண்டா?
பொறுப்புடனே புத்தகத்தைத் தொடுவ துண்டா?
புத்திமதி சொன்னாலுங் கேட்ப துண்டா?
வெறுப்படைந்து பெற்றோரே நொந்த துண்டு
வீணாகப் போவதற்கீ தறிவிப் பென்றேன். 3

உலகியலின் பலகதைகள் பேசிப் பின்னர்
உணவுண்ணச் சுவையமுது படைத்த ழைத்தாள்
சிலமொழிகள் உரையாடி உண்ணும் போது
சிறுவிக்கல் ஒலிகேட்டு நீரைத் தந்தாள்;
விலகியது வருவிக்கல், உண்ட பின்னர்
வெளியிடத்தில் சாய்ந்திருந்தேன் அவளும் வந்தாள்
சிலபொழுதில் பேரேப்பம் ஒன்று விட்டேன்
'செரித்ததென அறிவிக்கும் அறிவிப்' பென்றாள். 4

கனிமொழியாள் கொட்டாவி விடுதல் கண்டேன்
கண்ணிமைகள் இணைவதற்கோ அறிவிப் பென்றேன்;
இனியவளும் அயர்விழியால் ஆமாம் என்றே
எழுவதன்முன் இருதும்மல் தும்மி விட்டேன்;
'பனிபொழியும் நிலவொளியில் நீண்ட நேரம்
படுத்திருந்தால் தும்மல்வரா தென்ன செய்யும்?
இனியெழுக உள்வருக' என்ற ழைத்தாள்;
என்மனையாள் குறிப்பறிந்தேன் எழுந்து சென்றேன். 5

## 52. அவர் வரவில்லை

(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)

கொய்தமலர் பஞ்சணையில் கொட்டி மகிழ்ந்தேன்
கூந்தலிலே பூமுடித்துப் பொட்டும் அணிந்தேன்
நெய்தளழில் மென்துகிலைக் கட்டி யிருந்தேன்
நெஞ்சமதில் ஆசையெனும் மொட்டும் அவிழ்ந்தேன் 1

காத்திருந்து காத்திருந்து கால்கள் தளர்ந்தேன்
காணவிலை நான்துடித்து நெஞ்ச முடைந்தேன்
பார்த்திருந்து பார்த்திருந்து கண்கள் சிவந்தேன்
பாதிஉயிர் தாங்கியுள மெய்யும் சுமந்தேன் 2

தென்றலது சாளரத்துள் பாய்ந்து வருமே
தேனிலவு வானிடையே காய்ந்து வருமே
கன்றியுடல் மெல்லணையில் சாய்ந்து விழுமே
கட்டுமலர் அத்தனையும் காய்ந்து விழுமே 3

வந்திடுவேன் நாளையெனச் சொல்லி யகன்றார்
வந்திலரே நாளுடனே என்னை மறந்தார்
அந்தஒரு நாள்பொறுக்க அன்பு பொழிந்தார்
அன்பரவர் தம்முளத்தில் என்ன நினைந்தார்? 4

---

**பாடற் குறிப்பு:—** 16.3.1982 ஆம் நாள் பாடியது.

## 53. இசை மாறிய வீணை

(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)

காதலெனும் வீணைதனைக் கையிலெடுத்தேன்
கல்யாணி கேட்குமென மீட்டிமுடித்தேன்
மோதியது மற்றஇசை காதுகொடுத்தேன்
முன்னையிசை மாறிடவோ ஆசைபடைத்தேன்! 1

ஓர்நரம்பில் கையமைத்து யாழைஇசைத்தேன்
வேறிடத்தில் மாறிடயார் கையைஅமைத்தார்?
சீர்விளங்கும் பாடலொன்று பாடநினைத்தேன்— இசை
சேரவில்லை ஆதலினால் நாடிதுடித்தேன்! 2

மீறிவரும் ஆசையினால் பாடல்படித்தேன்
மாறிவருந் தாளத்தினால் வாடிமுடித்தேன்
யாரிதற்குக் காரணமென் றாவிதுடித்தேன்
ஆறுதலைக் காணவில்லை கண்ணீர்வடித்தேன்! 3

வேதனையில் வீழ்வதற்கோ வீணையெடுத்தேன்
வீணாகிப் போவதற்கோ மாலைதொடுத்தேன்
சோதனையில் மாள்வதற்கோ ஆசைபடைத்தேன்
சோகஇசை பாடுதற்கோ பாடலமைத்தேன்? 4

## 54. காதலர் சொல்லாடல்

(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)

தலைவன்: பஞ்சணையில் மலர்க்கணைகள்
பார்வையிலே விழிக்கணைகள்
மஞ்சமெனும் போர்க்களத்தில்
மாதரசி வீழ்த்திவிட்டாய்!

தலைவி : பாய்ந்தாலும் விழிக்கணைகள்

பதியவில்லை நின்னுடலில்
காய்ந்தாலும் மாறவில்லை
காயங்கள் என்னுடலில்!

தலைவன்: உள்ளமதிற் காயங்கள்
உண்டாக்கி விட்டதம்மா
கள்ளவிழிப் பார்வையினால்
கலங்கிநிலை கெட்டதம்மா!

தலைவி : தஞ்சமென எனையடைந்தாய்
தலைவாஎன் மனமகிழ்ந்தேன்
நெஞ்சமெனுஞ் சிறையிலிட்டு
நேயத்தாற் கட்டிவிட்டேன்

தலைவன்: சிறைவைத்த பிறகெனக்குத்
திரையென்னும் மறைவெதற்கு?

தலைவி : குறைபட்டுப் போகாத
கூச்சமெனுங் குணமெனக்கு!

தலைவன்: விண்ணுலகக் கனவிருக்க
மண்ணுலக நினைவெதற்கு?

தலைவி : கண்ணெனவே தமிழ்மரபு
காப்பதுதான் பெண்மரபு!

## 55. பருவப் பேச்சு

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

அவன்: அம்புலிப் பருவம் வந்ததும் வருவேன்
அதுவரை காத்திரு என்றாளே
தண்பனிப் பருவம் தணலாய்க் கொதித்தது
தனிமையில் வாடிடச் செய்தாளே! 1

அவள்: வருகையின் பருவம் தருவது புரிந்தேன்
வாடிடும் அந்நிலை ஏன்இனியே?
அரிவைஎன் னுள்ளம் நின்வயமாக
அருகினில் இருப்பேன் நான்இனிமேல்! 2

அவன்: ஊசலின் பருவம் ஆகிய தென்மனம்
ஒருநிலை யின்றி அலைகிறதே
ஆசையின் பெருக்கில் முத்திடும் பருவம்
அளித்திட உன்னை அழைக்கிறது! 3

அவள்: [1]காப்பின் பருவம் படிப்பதன் முன்னே
கன்னியின் பருவம் நாடுகிறாய்
[2]யாப்பின் பருவம் கடப்பது முறையோ
அதற்குள் ஏனோ வாடுகிறாய்? 4

அவன்: பிள்ளைத் தமிழைப் பேசிடும் அமுதைப்
பெற்று மகிழ்ந்திட நான்விழைந்தேன்
அள்ளித் தந்திட நின்னை யழைத்தேன்
ஆகும் பருவம் எத்தனையோ? 5

அவள்: பத்துப் பருவமும் பாடிய பின்னே
பாலப் பருவம் நான்தருவேன்
பெற்றுக் கொண்டபின் தாலப் பருவம்
பிள்ளை மகிழ்ந்திடப் பாடுகநீ! 6

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. காப்பு – திருமணம். 2. யாப்பு – கட்டுப்பாடு.

## 56. காவிய மேடையில்
(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)

தலைவன்:

காவிய மேடையில் பாவலன் பாடிய
  காரிகை இவள்தானோ?
ஓவியம் வல்லவன் தூரிகை தீட்டிய
  ஒருயிர்க் கலைதானோ? 1

கற்பனை மன்னவன் முத்திரைப் புனைகதை
  கண்டிடும் மகள்தானோ?
சிற்பியில் தேர்ந்தவன் சிற்றுளி யாக்கிய
  மாதவிச் சிலைதானோ? 2

தலைவி :

பாரினை யாண்டவர் பாண்டிய மன்னரின்
  பரம்பரை இவர்தானோ?
தேரினை ஓர்கொடிக் கீந்திடும் பாரியைச்
  சேர்ந்தவர் இவர்தானோ? 3

கொடியெனப் பூங்கொடி கோட்டையில் கட்டிய
  கொற்றவன் இவர்தானோ?
கடலென வீரரின் காவியம் படைத்திடக்
  கற்றவர் இவர்தானோ? 4

---

**பாடற் குறிப்பு:—** 15.3.1982 ஆம் நாள் பாடியது

## 57. உவமையறியாக் கவிதை
(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)

ஒருநாள் இரவில் இதழில்
  உணர்வால் எழுதிய கவிதை
மறுநாள் மறுநாள் நினைவில்
  மழைபோற் பொழியும் இனிமை! 1

மங்கிய ஒளியில் அமர்ந்து
  மலரணை மீதிற் படிந்து
மங்கலப் பாடலை நினைந்து
  மனத்துட் சுவைத்தேன் மகிழ்ந்து! 2

ஒவ்வொரு சொல்லிலும் உணர்ச்சி
  உளத்தைக் கிளறுங் கிளர்ச்சி
அவ்விர வெல்லாம் மகிழ்ச்சி
  அடடா எத்தனை மலர்ச்சி! 3

கைம்மலர் மெல்லெனப் பிடித்துக்
  கண்ணொடு கருத்தைத் தொடுத்துச்
செய்ம்முறைப் பாடலை எடுத்துச்
  சிவந்தன விழிகள் படித்து! 4

ஆடவன் என்னுடன் பழகி
  அன்புடன் தந்தனன் எழுதி
பாடலை நெஞ்சொடு தழுவிப்
  பாரினை மறந்தேன் எளிதில்! 5

எழுத்துஞ் சொல்லும் பழமை
  எழுதும் பொருளோ புதுமை
பழத்தின் சுவைபோற் கவிதை

படைத்தவன் முன்நான் பதுமை! 6

புணர்ச்சி விதிகள் எளிமை
பொருளின் சுவையோ அருமை
உணர்ச்சி வடிப்பிற் புதுமை
உவமை யறியாக் கவிதை 7

---

**பாடற் குறிப்பு:–** 3.4.1982 ஆம் நாள் பாடியது.

## 58. அதுவா இதுவா?
**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

**தலைவி :**

உறவா பகையா கேட்டு வருவாய்–வரும்
உளமா இலையா பார்த்து வருவாய்
இரவா பகலா இந்தப் பொழுதே
இடரே மிகலால் கண்கள் அழுமே! 1

**தலைவன்:**

ஒளியா இருளா இந்த மனையில்
உருவா நிழலா என்றன் விழியில்
விழியா கணையா அந்த விழிகள்
வெயிலா நிழலா சொன்ன மொழிகள்! 2

**தலைவி :**

கனவோ நனவோ வந்து மறையும்
கணையோ மலரோ கட்டில் மருவும்
கனலோ புனலோ கண்ணில் வழியும்
கதிரோ மதியோ விண்ணில் தவழும்! 3

**தலைவன்:**

விருந்தா மருந்தா உண்ட உணவு
அரும்பா மலரா கொண்ட உறவு
இருந்தால் எழுந்தால் மங்கை நினைவு
இதுதான் அவளால் வந்த விளைவு! 4

**தலைவி :**

குழலோ முகிலோ என்று புனைந்தார்
குயிலோ குரலோ என்று மொழிந்தார்
அழகோ கலையோ என்ன நயந்தார்
அறமோ முறையோ இன்று பிரிந்தார்! 5

**தலைவன்:**

உயிராய் உடலாய் ஒன்றி யிருந்தோம்
உலகே அதுதான் என்று மகிழ்ந்தோம்
மயிலோ அனமோ என்னும் நடையாள்
மயலே துயரே தந்து நடந்தாள்! 6

## 59. இரண்டு குழந்தை
**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

ஐம்பதாண் டகவை யடைந்தனை யாகினும்
அம்புலி முகத்தின் அழகிலும் கொவ்வைப்
பழந்தூங் கிதழிற் படர்தரு நகையிலும்
குழந்தையின் பொலிவு குலவுதல் கண்டேன்;
தீதறி யுலகம் தெரியா திருந்தனை
சூதும் வாதும் யாதும் அறிந்திலை
யாதுநீ செய்யினும் பேதுறும் மகவே;
கடிந்துனை ஒருகாற் கழறினும் விழிநீர்

படிந்து சிற்றிளம் பாவை யாகுவை;
என்னுயிர்க் காதலி எவ்வகை நோக்கினும்
பொன்னுருக் குழந்தை போலுனைக் காண்குவென்
எனயான் மொழிந்தேன்; என்னுயிர்த் தெய்வம்
புன்னகை பூத்துப் "போதும் புகழ்ச்சி
என்னுளத் துறையும் இறைவ நீயும்
குழந்தை யுள்ளம் கொண்டனை யறிவேன்"
எனலும் நகைத்தேன் "இரண்டு போதும்
இனிமேல் வேண்டா" என்றனள்
கரும்பு மொழியில் குறும்பு கலந்தே!

---

**பாடற் குறிப்பு:–** 9.4.1983 ஆம் நாள் பாடியது.

## 60. *பள்ளிக்கு அழைத்தவள்

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

எடுப்பு

பள்ளிக்கு வாவென் றழைத்தவளே – முப்
பாலமு துண்ணென அளித்தவளே
–பள்ளிக்கு

தொடுப்பு

கள்ளைத்தான் பாலெனச் சாற்றினையோ? நின்
காதலிற் கள்வெறி ஏற்றினையோ?
–பள்ளிக்கு

முடிப்பு

காலடிப் பேரெழில் கண்டுமயங்கி – எழு
காலடிப் பாவையே உன்னைநெருங்க

நாலடிப் பாதையில் நீநடந்தாய் – உனை
நாடியே வாதையில் நான்கிடந்தேன்!
–பள்ளிக்கு

ஊட்டுவை காமமே என்றுநினைந்தேன் – நீ
'ஓம்புக மெய்ப்பொருள்' என்றுநடந்தாய்
மீட்டுமுன் அன்பினை நாடி வளைந்தேன்
மேவிய நல்லறம் பாடியணைந்தாய்!
–பள்ளிக்கு

கூடலில் மூப்பினைப் போக்கிவிட்டாய் – இளங்
குமரனென் றென்னையே ஆக்கிவிட்டாய்
ஊடலும் ஏனினி தேன்மொழியே – சொலும்
உன்மொழி யாவையும் தீஞ்சுளையே!
–பள்ளிக்கு

---

**பாடற் குறிப்பு:–** 24.2.1987 ஆம் நாள் பாடியது.

***இருபொருள் அமைந்த பாடலிது.**

1. தமிழ்: – பள்ளிக்கு–பள்ளிக்கூடத்திற்கு; முப்பால் அமுது–திருக்குறள்; கள்ளைத்தான்–கள்போல் இன்ப வெறியூட்டும் குறளைத்தான்; காதலில்–மொழிப்பற்றில்; காலடி–காற்பங்கான பாடல் வரி; எழுகாலடிப்பாவை–7 ஙீ 1/4 ஒன்றே முக்கால் அடியுடைய குறட்பாவை; நாலடிப்பாதை–நாலடியாரில்; காமமே–காமச்சுவை மட்டுமே (காமத்துப் பால்) மெய்ப்பொருள்–செம்பொருள் (பொருட் பால்) நல்லறம்–நன்னெறி (அறத்துப் பால்) கூடலில்–நான்மாடக் கூடலில்.

2. காதலி – பள்ளிக்கு–பள்ளிகொள்வதற்கு; பாலமுது–பாலுணவு; காலடிப் பேரெழில்–காலழகு; எழுகாலடிப்பாவை–நடைபயில எழும் கால்களையுடைய பெண்; நாலடிப்பாதையில்–(ஊடலால்) நான்கு அடித் தொலைவில்; காமம்–இன்பம்; ஓம்புக மெய்ப்பொருள்–உடலோம்புக; நல்லறம்–நல்லறமாகிய இல்லறம்; கூடலில்–உன்னைக் கூடுகையால்.

## 61. மையல் தீர

(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)

ஒளி விடும் மின்னல் கண்ணாலே
இன்ப வானில் உன்னை நானே கூடிடுவேன்
(ஜிலு ஜிலு)
என்னைக் காணும்போது உள்ளம் துள்ளும்
தன்னாலே துன்பம் செல்லும்
என் இன்பமே தேன் மதுவாம்
மயில் போல ஆடும் என்னைப் போலே
பாரில் இனிமேலே மங்கையில்லையே!
(என்னைக்)
எழில் மேவும் மாதர் இல்லையென்றால்
இன்பம் இல்லை இங்கே
இவ்வுலகே பேரிருளாம்
மையல் தீர வாரும் இந்த வேளை
மாறும் இது நாளை – என்பதில்லையே!
(எழில்மேவும்)

---

**பாடற் குறிப்பு:–**1962இல் வெளிவந்த 'கண்ணாடி மாளிகை' திரைப்படப் பாடல்.

## 62. பேதமேது
**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

ஆண்: நாணம் ஏனோ இந்த வேளையிலே – வண்டு
நாடி ஓடும் மலர்ச் சோலையிலே
நானும் நீயும் இந்த மாலையிலே
நல்ல நாதம் ஆவோம் காதல் வீணையிலே!

பெண்: காதல் வாழ்விலே கதிரென வந்தாய்
காணாத இன்பம் கண்டிடச் செய்தாய்!

ஆண்: கூடும் நமக்குள்ளே உருவம் வேறு–காதல்
கொண்ட நெஞ்சில் பேதமெது?

பெண்: பேதம் யாவுமே தீர்த்திட வந்தாய் – இந்தப்
பேதை நெஞ்சம் மலர்ந்திடச் செய்தாய்

ஆண்: நாணம் ஏனோ இந்த வேளையிலே–வண்டு
நாடி ஓடும் மலர்ச்சோலையிலே
நானும் நீயும் இந்த மாலையிலே

இருவரும்: நானும் நீயும் இந்த மாலையிலே
நல்ல நாதம் ஆவோம் காதல் வீணையிலே!

---

**பாடற் குறிப்பு:–**1962இல் வெளிவந்த 'கண்ணாடி மாளிகை' திரைப்படப் பாடல்.

## 63. சிரிப்பதேனடி?
**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

பார்த்துப் பார்த்துச் சிரிப்பதேனடி – பாங்கி
பக்கத்திலே அவள் வெட்குவதைக் காணடி –
(பார்த்துப்)

மேற்கில் செங்கதிர் சாயும் போதினிலே – மறைந்து
மெள்ள மெள்ள மெள்ள வந்து காதல் போதையிலே –
(பார்த்துப்)

கண்ணுங் கண்ணும் ஒன்றாய்ச் சேருதடி – அங்கே
காதலும் நாணமும் மீறுதடி

விண்ணும் மண்ணும் ஒன்றாய் ஆனதடி – அங்கே
வெண்மதி அல்லியை நண்ணிடவே முகத்தைப்
(பார்த்துப்)

---

**பாடற் குறிப்பு:–**1962இல் வெளிவந்த ‘கண்ணாடி மாளிகை’ திரைப்படப் பாடல்.

## 64. பொங்கல் விழா

**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

எண்சீர் விருத்தம்

கருநீலங் குழைத்தெடுத்துக் கரைத்து, ஞாலம்
கண்ணுக்குப் புலனாகா வண்ணம் பூசிப்
பொருள்யாவும் மறைத்ததுபோல் உலகில் யாண்டும்
புகுந்ததனை விழுங்கிவரும் இருளின் கூட்டம்
மருளோடு வெருண்டோடச் செய்து, கீழை
வான்வெளியைச் சிவப்பாக்கிப் புதிய ஆட்சி
உருவாக்கி, விழித்தெழுந்தோர் நெஞ்ச மெல்லாம்
உவப்பாக்கிச் செங்கதிரோன் தோன்றக் கண்டேன்.1

சிறைவிடுத்துச் சிறைவிரித்துச் செவ்வான் கண்டு
சிந்தைகளி கூர்ந்துபல விந்தை செய்தே
உறைவிடத்துக் கிளைகடொறும் ஓடிஆடி
ஒலிஎழுப்பும் புள்ளினைப்போல் என்றன் பிள்ளை
திரையுடுத்த துகில்விரித்த அணைவி டுத்துச்
சிறுவிழியின் இமைவிரித்துச் சிரித்தெ ழுந்து
குறைகுடத்துப் புனலொளிபோல் வாயால் நாவாற்
குரலெழுப்பித் தள்ளாடி திரியக் கண்டேன். 2

செங்கதிரின் முகங்கண்டு பொய்கை தன்னில்
செவ்விதழ்தா மரைமுகமும் மலர்தல் போலப்
பொங்கிவரும் மகிழ்ச்சியினால் என்னை நோக்கிப்
பூங்கொடியின் இடையுடையாள் துணைவி நல்லாள்
துங்கமுகம் மலர்ந்தொளிர முறுவல் பூத்தாள்;
துய்யபுனல் ஆடியதால் ஈரஞ் சொட்டத்
தொங்கிவரும் குழல்நுனியை முடித்துக் கட்டித்
தொடுத்தெடுத்த மலர்ச்சரத்தைச் செருகி வைத்தாள்.3

திங்கள்முகம் மிகப்பொலிய நெற்றி மீது
திலகமிட்டு, மலர்விழியில் மையும் இட்டுத்
தங்கமென மின்னுமிழை பின்னி நெய்த
தகதகக்கும் காஞ்சிபுரப் பட்டு டுத்துப்
பொங்கலுக்கு நல்வரவு நவில்வாள் போலப்
புதுவகைய மாக்கோலம் இட்டு முன்றில்
எங்கணுமே மங்கலஞ்செய் தொளிர வைத்தாள்
இடையிடையே செம்மண்ணிற் கோலஞ் செய்தாள்.4

வாயிலெலாம் மாவிலையால் தோர ணங்கள்
வகைசெய்து முறைசெய்து [1]நால விட்டாள்
சேயிழையாள் ஓடிவிளை யாடும் என்றன்
சிறுமகனைப் பிடித்திழுத்துக் கொஞ்சிக் கெஞ்சி
வேயிணையும் மென்தோளில் தாங்கிச் சென்று
வெந்நீரை இளஞ்சூட்டில் இறக்கி அந்தச்
சேயினையும் நீராட்டி அணிகள் பூட்டிச்
செந்நிறத்துப் பட்டுடுத்தி மகிழ்ந்து நின்றாள். 5

ஒப்பனைகள் மகவினுக்குச் செய்த பின்னர்
ஒண்டொடியாள் கடைக்கண்ணால் நோக்கி நின்றாள்;
அப்பொருளை யுணர்ந்தெழுந்து புனலும் ஆடி
அவள்தந்த புத்தாடை யுடுத்து நின்றேன்;
ஒப்பிலவள் முகமலரைத் தாளில் வைத்தே

ஒருகொடிபோல் இடைநுடங்க வணக்கஞ் செய்தாள்
இப்பழமை எதற்கென்றேன்; "உம்மை யன்றி
எனக்கெனவோர் தெய்வமிலை அத்தான்" என்றாள்.6

செந்தமிழிற் சுவைகூட்டும் மொழிகள் பேசும்
தீங்குயிலே நானுனக்குத் தெய்வ மென்றால்
சிந்தையினை ஆண்டுகொண்ட நீயே எற்குத்
தெய்வமெனச் சொல்வதலால் வேறு காணேன்;
இந்தவகை அன்பதனால் பிணைந்து நின்றால்
இல்லறந்தான் பேரின்பம் இதனை விட்டு
நொந்துழன்று திரிகின்றார் உலக மாந்தர்
நுண்மதியே! என்னுயிரே! வாழ்க என்றேன். 7

வணங்குமெனை வாழ்த்திவிட்டீர்; மற்றெ னக்கு
வரமெங்கே? பரிசிலெங்கே? எனந கைத்தாள்;
நுணங்கிடையே எனைவணங்கி நிற்கும் பாவாய்
நொடிப்பொழுதும் பரிசில்தரத் தயங்க கில்லேன்
மணங்கமழும் மலர்முகத்துச் சிறுவன் நின்றன்
மதிமுகத்தை மாறாமல் நோக்கு கின்றான்;
கணங்கணமாத் தரவிருப்பம் ஆனால் அந்தக்
கள்வன்நமை விடுவானோ கண்ணே என்றேன். 8

பொங்கலுக்குத் தரும்பரிசா? நன்று! நன்று!
போங்களத்தான் இப்பொழுது சொன்ன தெல்லாம்
எங்களுக்கு வேண்டாவென் றோடி விட்டாள்;
இருநிலத்தை மெழுகிஅதிற் கோல மிட்டு
மங்கலநாள் தொழுதங்கே அடுப்பு மூட்டி
மஞ்சளிலே தொடுத்தபுதுப் பானை ஏற்றிப்
பொங்கிவரப் பாலூற்றி முனைகள் தேயாப்
புத்தரிசி பச்சரிசி உலையி லிட்டு 9

முந்திரியின் பருப்பிட்டுக் கொடியில் காய்த்த
முதிர்கனியின் உணங்கலுடன் வெல்லங் கூட்டி
உந்திஅது பொங்கிவரப் பொங்க லிட்டாள்;
உளக்களிப்பால் பொங்கலோ பொங்க லென்று
செந்துவர்வாய்க் குரலெழுப்பிச் சங்கம் ஆர்த்துச்
செவ்வாழை யிலைவிரித்துப் படைத்த தன்மேல்
வெந்துருகும் நெய்யூற்றி உண்ண உண்ண
வேண்டும்வரை பரிமாறி மகிழ்ந்து நின்றாள். 10

மனைக்கினிய மங்கையவள் பொங்கி வைத்து
மனமுவந்து பரிமாற நான் சுவைத்துத்
தினற்கினிது தினற்கினிதென் றுண்டே னாகத்
தெரிவைமுகத் திதழ்சிறிது மலரக் கண்டேன்;
எனைத்திடர்கள் உற்றாலும் தனது மைப்பை
இனியதொரு தன்படைப்பைப் பிறர்பு கழ்ந்தால்
மனத்துயரம் மாறிவிடும் மகிழ்வு தோன்றும்
மாநிலத்தின் இயற்கையிது வெனவு ணர்ந்தேன். 11

உறவினர்க்கும் உழைக்கின்ற தொழில்வல் லார்க்கும்
உற்றவர்க்கும் மற்றவர்க்கும் பகிர்ந்து பொங்கல்
உறவளித்தோம் மகிழ்ந்தளித்தோம்; பின்னர் அந்த
ஒண்டொடியை அருகழைத்தேன்; யாழெ டுத்து
நறவெனக்கிங் கூட்டுதற்கு மீட்டு கென்றேன்;
நங்கையவள் யாழெடுத்தங் கமர்ந்தாள் என்முன்
நிறம்வெளுத்த தாமரையாள் உருவைச் சான்றோர்
நிகழ்த்தியநற் கற்பனையை நேரிற் கண்டேன். 12

இடப்புறத்தே யாழ்சாய்த்துத் தாங்குங் காட்சி
எழிலைத்தான் என்னென்பேன்; விரைந்து சென்று
இடக்கையின் விரல்நான்கும் நடனம் ஆடி
ஏழிசையின் வகைமிழற்றும் திறந்தான் என்னே!
படக்கிடந்த யாழ்நரம்பைத் தெறிப்ப தற்குப்
படரும்வலக் கைவிரலின் நளினம் என்னே!

தொடக்கிடுமவ் விசைக்கேற்ப அவள்மு கத்தில்
    தோன்றிவரும் மெய்ப்பாட்டின் வகைதான் என்னே! 13

மீட்டியநல் யாழிசையைக் கேட்டு மைந்தன்
    மெய்ம்மறந்தென் மடியமர்ந்து சிலைபோல் தோன்ற,
ஊட்டியநற் சுவைமறந்து செயல்ம றந்தே
    உலகினையும் மறந்திருந்தேன்; யாழின் ஓசை
காட்டியஓர் உலகினில்நான் மிதந்து வந்தேன்;
    கனவுலகம் நனவுலகம் அறிய கில்லேன்;
பாட்டிசைக்கு மயங்காத மாந்த ருண்டோ?
    படைத்தசெவிப் பொறிப்பயனைப் பெற்றேன் பெற்றேன்.14

விழிப்பொறிக்கு விருந்தளித்தாய் காட்சி தந்து;
    வீணையினால் விருந்தளித்தாய் செவிப் பொறிக்குக்,
குழைத்தெடுத்த பச்சரிசிப் பொங்கலிட்டுக்
    கூர்சுவையால் வாய்ப்பொறிக்கு விருந்த ளித்தாய்;
தெளிர்த்தநரம் பிசைவிடுத்துக் கொவ்வை வாயின்
    தேன்மொழியால் நின்குரலாற் பாடி யின்பம்
திளைத்திருக்கக் கருத்தினுக்கும் விருந்த ளிப்பாய்
    செங்கதிர்க்கு வாழ்த்திசைப்பாய் மாதே என்றேன். 15

குழைவித்த மென்னரம்பின் யாழ் விடுத்துக்
    குரலிசையால் இனிமையினைச் செவியில் வார்த்தாள்,
மழைநிகர்த்த குழலிதன்வாய் மலர்த்துச் செந்தேன்
    மாரியென இசைபொழிந்தாள்; முன்னர் மீட்டுக்
கழைபிழிந்த சாறெனுமா றிசைத்த யாழ்தான்
    கலக்கமுறத் தோல்விபெற வென்றி கொண்டாள்;
கழைகொடுத்த குழலிசையோ எனம யங்கக்
    களிகூர மிடற்றிசையால் நனையச் செய்தாள். 16

மனங்குளிர மேல்நடுகீழ் எனவு ரைக்கும்
    வழிமுறையால் இன்னிசையை இசைத்துப் பின்னர்
[2]அனங்கவிழும் நடையுடையாள் பொருள்வி ளங்கா
    அயன்மொழியின் இசைப்பாடல் ஒன்றெ டுத்துத்
தனந்தனந்தோம் தகிடவென முழங்கிக் கைகள்
    தாளமிடப் பாடினள்காண்; கேட்டு நெஞ்சம்
சினங்கெழும முகஞ்சிவந்து கைகள் கொண்டு
    செவியடைத்தேன் உளந்துடித்தேன் நிறுத்து கென்றேன். 17

நிறுத்தென்று நான்சொல்லி நிறுத்து முன்னே
    நின்றதவள் வாய்ப்பாட்டு; பேதைப் பெண்ணே
பொறுத்திருக்கும் பண்பினுக்குத் தமிழ னைப்போல்
    பூமிதனில் யாங்கணுமே கண்ட தில்லை;
சுறுக்கென்று சொல்வதெனில் மானம் விட்டோர்
    சூடுகெட்டோர் நமைப்போல யாண்டும் இல்லை;
கிறுக்கரெனத் தொழும்பரென அறிவு கெட்டுக்
    கீழாகிப் பாழாகித் திரிகின் றோமே! 18

பாடுகின்ற நீதமிழ்ப்பெண் பாடல் கேட்கும்
    பாவியும்நான் தமிழ்மகனே; ஆனால் இங்குப்
பாடுகின்ற பாமட்டும் தமிழே யில்லை;
    பாரெங்கும் இக்கொடுமை கண்ட தில்லை;
நாடுகின்ற இசையரங்கில் பிறவ ரங்கில்
    நன்மைமிகும் வானொலியில் கொடுமை செய்யும்
வேடுவர்கள் தமிழுக்குத் தீங்கு செய்யும்
    வினைகாணும் பொழுதெல்லாம் நெஞ்சம் வேகும். 19

நல்லவரும் சான்றோரும் சொல்லிச் சொல்லி
    நாடோறுங் கதறினுமே கேட்பா ரில்லை;
புல்லடிமைத் தொழில்செய்தே பழகி விட்டோம்;
    புரியாத மொழிகேட்டு மழுங்கி விட்டோம்;
கொல்லரவு நச்சுமிழ்தல் போல நீயும்
    கொடுமொழியால் இசைபாடி எனைவ தைத்தாய்
அல்லலுறச் செய்துவிட்டாய் பொங்கல் நன்னாள்

அகமகிழ்வைக் கெடுத்துவிட்டாய் எவரை நோவேன்?20

பழுத்தெழுந்த சினத்தைஎலாம் கொட்டி விட்டேன்;
பாவையவள் துடிதுடித்தே 'உங்கட் கென்ன?
புழுக்கலிலாப் பச்சரிசி வேண்டு மென்றேன்
புழுக்களுள பச்சைநிற அரிசி தந்து
முழக்குகிறீர்; உலையிட்டுப் பொங்க வைத்தால்
மும்மடங்கு பொங்கிவரும் சீற்றம்' என்றாள்
முழங்கையில் தலைவைத்துத் துயிலும் என்னை
முழக்கிற்றுப் பாவைகுரல் விழித்தெ ழுந்தேன். 21

கனவகத்தும் பெருங்கவலை; நனவ கத்தும்
கரைகாணாக் கவலைகளே சூழும் வண்ணம்
வினைவிளைக்கும் கொடியவரைக், கொள்ளை கொள்ள
வேளைதொறும் வஞ்சகங்கள் செய்து கொண்டு
தினவெடுத்துத் திரிபவரை ஒழிக்கும் நாள்தான்
திருநாளாம் எனவுரைத்தேன் அவள்ந கைத்து,
முனமெழுந்து நீராடி வருக'' என்றாள்;
மொய்குழலின் ஆணைதனை ஏற்றுக் கொண்டேன்.22

---

**பாடற் குறிப்பு:–** புதுக்கோட்டை அரசினர் பயிற்சிக் கல்லூரிக் கவியரங்கில் பாடியது–21.1.1967.
**அருஞ்சொற் பொருள்:–**
1.நாலவிட்டாள் – தொங்கவிட்டாள். 2.அனங்கவிழும் –அன்னங்கவிழும்.

## 65. 'வீரகாவியம்' காப்பியத்திலிருந்து சில பாடல்கள்:–

போதலர் நறுமணப் பொய்கைக் கரையில்
காதலர் நெஞ்சம் கலந்து மகிழ்ந்தன.

நாணத்தால் மிகச்சிவந்து தோன்றும் கன்னம்;
நகைதவழ்ந்து விளையாடி இதழ்கள் மின்னும்;
காணத்தான் மீனெனக்கண் பிறழ்ந்து பாயும்;
காளையவன் நோக்குவதால் மருண்டு சாயும்;
[1]காணத்தால் இயல்வளைகள் விளங்கும் செங்கை;
கச்சுக்குள் அடங்காமல் அழுங்கும் கொங்கை;
பாணத்தால் வடித்தெடுத்த விழியின் ஓரம்
பாய்ந்துழல்வோன் இவ்வனைத்துங் கண்டான் வீரன்.1

'நாளொன்றில் சிலைவடிக்கும் ஆற்றல் மிக்கோன்
நனிவிழைந்து திங்கள்பல சிந்தித் தாய்ந்து,
தாளென்றும் இடையென்றும் மார்பம் என்றும்
தன்னைநிகர் முகமென்றும் விழிகள் என்றும்
தோளென்றும் ஒவ்வொன்றும் பலநா ளாகத்
தொன்முறையில் வழுவாமல் படைத்துத் தந்த
வாள்வென்ற விழியழகுச் சிலையே! நின்றன்
வாய்மலர ஏன்சிரித்தாய்?' என்றான் வேழன். 2

'ஏன்சிரித்தாய் எழிற்சிலையே என்னை நோக்கி'
எனவினவும் வீரனுக்கு நின்ற பாவை
தேன்வடித்த மொழியொன்றும் புகன்றா ளல்லள்;
திருந்தடியால் ஈரடிகள் பெயர்ந்து சென்றாள்;
'நான்விடுத்த சொல்லுக்கு விடையே யில்லை
நங்கையுனைச் சிலையென்று விளித்த தாலோ?
மான்கொடுத்த மருட்பார்வை பெற்ற வட்கு
மனமிலையோ மொழியிலையோ வாய்ம லர்த்த?' 3

*என்றுரைத்துப் பின்தொடர்வோன் அவள்செங் கையில்
இலங்குமலர்த் தாமரையை நோக்கு வான்போல்

‘ஒன்றிநிற்கும் அவ்விரண்டு மொட்டும் வேண்டி
உனையிரப்பன் மகிழ்ந்தளிக்க வல்லாய் கொல்லோ’
என்றவற்கு மொட்டிரண்டும் ஈய வந்தாள்;
‘ஈதன்றே என்னுளத்து வேட்கை! என்னுள்
நின்றிருக்கும் மலரேனும் தருவாய்’ என்றான்;
நேரிழையாள் மலரொன்று கொடுக்க வந்தாள். 4

*‘சேயிழையுன் கைம்மலரை விழைந்தே னல்லேன்
செங்கயல்கள் பிறழ்மலரே வேண்டு கின்றேன்;
ஈயிதனை இல்லைஎனின் செம்மை தோயும்
இதழிரண்டு தந்தாலும் போதும்’ என்றான்;
[2]வேயிணையும் தோளியிதழ் கொய்தா ளாக
‘விடுவிடுஅவ் விதழ்தன்னைக் கொய்ய வேண்டா
[3]சேயிதழில் வழிதேனே வேண்டும்’ மென்றான்;
சிற்றிடையாள் மொழிக்குறிப்பைப் புரிந்து கெண்டாள்.5

‘பித்தரெனக் கலங்கிமனம் மாறி மாறிப்
பேசுவதேன்? நகைமொழியோ? குறும்புச் சொல்லோ?
[4]நத்துவதை உரைக்காமல் தடுமாற் றத்தால்
நடுங்குவதேன்? பேதையர்பால் வீரர் காட்டும்
வித்தையிதோ? வேண்டுவதை உறுதி செய்து
விளம்புதியேல் தடையில்லை தருதற்’ கென்றாள்;
புத்தமுத மொழியிதனைச் செவியிற் கேட்டுப்
பூரித்தான் அம்மொழியால் மயங்கி விட்டான். 6

‘பித்தத்தின் வேகந்தான் பேசு கின்றேன்;
பேதையுன தெழிலுருவைக் கண்ட பின்பே
சித்தத்தின் நிலைகலங்கிச் செயல்க லங்கித்
தெரிவையுனை நினைந்திரங்கி மயங்கி நின்றேன்;
முத்தமிழின் சுவையனைத்தும் நின்வாய்ச் சொல்லில்
முகிழ்த்துவரக் காணுவதால் தெளிவுங் கொண்டேன்.
நத்துவதிப் பூங்கொடியே வேறொன் றில்லை
நல்குதியேல் வானுலகும் வேண்டேன்’ என்றான். 7

‘ஈவாருங் கொள்வாரும் இங்கே யில்லை
உரிமைதனைக் கொள்வற்கோர் தடையு மில்லை;
[5]பூவாருங் கொடிக்குரியை நீயே என்று
பூண்டுள்ளேன் ஒருறுதி; கண்ட [6]ஞான்றே
நீவேறு நான்வேறென் றெண்ண வில்லை
நீங்கியது நானெனதென் றெண்ண மன்றே!
கூவாத குயிலொன்று கூவக் கண்டேன்
குழைவாக மனமின்று குளிரக் கண்டேன். 8

நாளுக்கு நாளுன்னை நினைந்தி ரங்கி
நான்மெலிந்து வாழ்ந்திருந்தேன்; வாடும் என்றன்
தோளுக்குத் தோள்கொடுக்க வந்து நின்றாய்!
துணைவிஎன உரியமணங் கொள்க’ என்றாள்;
‘வாளுக்கும் வேலுக்கும் தோற்ற தில்லை
[7]வட்கார்தம் வில்லுக்குந் தோற்ற தில்லை
நீளக்கண் வேலுக்குத் தோற்று விட்டேன்
நீயுரைத்த சொல்லுக்குந் தோற்றேன்’ என்றான். 9

‘வேல்விழியென் றுனக்கிட்ட பெயர்பொ ருந்தும்
வெலற்கரிய எனைவென்ற கார ணத்தால்;
சேல்விழிநின் துணையின்றி உலக மில்லை
செந்தமிழே நீயின்றி வாழ்வே யில்லை;
நூல்புரைமெல் லிடையணங்கே எனக்கு நின்னை
நுந்தைதர உடன்படுமோ? விழையும் எற்குப்
பால்வழியும் மொழிபுகழும் நின்னை என்பால்
பரிந்தளித்தால் அவனைஎன்வாய் வாழ்த்தி நிற்கும்.10

மாவேழன் எவர்பாலும் கெஞ்சி நின்று

மனம்விட்டுப் பொருளொன்று கேட்ட தில்லை;
பூவேறும் தாழ்குழலி; நின்ம ணத்தின்
பொருட்டாக நுந்தையின்பால் இரந்து நிற்பேன்;
கோவேலன் மறுத்துரைப்பின் போரே மூளும்;
குமுறிஎழும் வீரத்தால் மணமே சூழும்;
நாவீறு வஞ்சினத்து மொழியாக் கொள்க!
நாளைக்கு முடிவொன்று காண்பேன்' என்றான். 11

* * * * * * *

தந்தையிடம் இசைவுபெற முடிவு செய்து
தணியாத காதலொடு பிரிந்து சென்றார்.

'புலரட்டும் முடிவொன்று காண்பேன்' என்று
புலியனையான் புகன்றமொழி கேட்டுப் பூவை
'மலரட்டும் மணமுரசம் என்ப தல்லால்
மருவட்டும் போர்முரசென் றுரைத்தல் நன்றோ?
பல[8]ரட்டுக் குவிப்பதிலா மணநாள் வேண்டும்?
பற்றிருக்க உறவிருக்கப் பரிவி ருக்க
மலரொட்டும் மணமாலை சூடி நிற்க
வழியிருக்க அதைவிடுத்துப் பகையா வேண்டும்?12

* * * * * * *

'உனையடைய வேண்டுமெனும் நோக்கம் ஒன்றே
உந்துவதால் என்னியல்பால் உரைத்து விட்டேன்;
எனையடைய உனக்கிசைவு தந்தை தந்தால்
எனக்கதன்மேல் பேறுண்டோ வெல்க' என்றான்;
மனையடையும் நேரம்மிக ஆயிற் றென்று
மதிவந்து முகங்காட்டப் பிரிந்து செல்லத்
தினையளவும் மனமிலராய் விலகிச் சென்றார்;
திருமணத்து நினைவுடனே துயிலச் சென்றார். 13

நஞ்சுமிழும் முழுமதியை வானிற் கண்டார்;
நலிவுதரும் தென்றலெனும் காற்றைக் கண்டார்;
பஞ்சணையின் பெயராலே விரித்து வைத்த
பாழ்நெருஞ்சிப் பரப்பினையே அங்குக் கண்டார்;
விஞ்சுமணப் புகைபரவ, வெய்து யிர்த்து
விடும்புகையாய் அதுபரவிச் சூழக் கண்டார்;
வெஞ்[9]சரமாய்ப் பூச்சரங்கள் தெரியக் கண்டார்;
விழிகுவியாக் கனவுலகில் மிதந்து சென்றார். 14

* * * * * * *

பழகிய காதலர் படுதுயர் நீங்கிடப்
பொழுது புலர்ந்தது புள்ளினம் ஆர்த்தன.

துயிலுக்கும் காதலுக்கும் தொடர்பொன் றுண்டோ?
துணைவனைத்தான் பெறும்வழியை [10]உன்னி யுன்னி
மயலுக்குள் விழுந்துழல்வோள் உறக்க மின்றி
மலர்ப்பாயல் துவண்டுவிழப் புரண்டி ருந்தாள்;
மயிலுக்கு மணமாலை சூட்டு தற்கு
மன்னவன்றன் விடைகாணத் தவிக்கும் வீரன்
வெயிலுக்கு மன்னவன்றன் வரவு நோக்கி
விழித்திமையான் காத்திருந்தான் விடியு மட்டும். 15

இருளுக்குள் துயில்மடியில் அயர்ந்தி ருக்கும்
இருநிலத்தின் சோர்வகற்ற எழுந்த வெய்யோன்
கருநிறத்துக் கடலகத்துக் கதிர்க்கை நீட்டிக்
கண்கவரும் எழிலோடு கீழை வானில்
[11]குருநிறத்துச் செவ்வொளியாற் கோலஞ் செய்தான்;
குரல்வகைய புள்ளினங்கள் [12]இயம்போ லார்த்துச்
சிறகடித்துப் பறந்தனவான்; மலர்க ளெல்லாம்
சிந்துபனி யாற்குளிர்ந்து [13]பொலிந்த யாண்டும். 16

* * * * * * *

தந்தையின்பால் தூதுரைத்து மீள்க என்று

தலைத்தோழி தனையனுப்பி நின்றாள் மங்கை.

[14]படியினுக்குள் புதுமலர்ச்சி பரவக் கண்டு
பாவைமனம் புத்துணர்ச்சி நிரம்பக் கொண்டாள்;
கொடியிருக்கும் மலரனைத்தும் கூந்த லுக்குள்
குடியிருக்கும் படிவைத்தாள்; தோழி தன்னைக்
கடிதழைத்தங் கருகமர்த்தி [15]நெருநல் மாலை
கரைகாணாக் கனவுலகில் வீர னோடு
கொடிபிடித்துக் கற்பனைத்தேர் ஊர்ந்த வெல்லாம்
குறையாமல் சிதையாமல் உரையா நின்றாள். 17

*'எனையளித்த தந்தைக்குச் செய்தி சொல்லி
எதிர்மறையால் விடையின்றி உடன்பா டாக்க
முனைவதுநின் கடனாகும்; நீநி னைத்தே
முயலுவையேல் முற்றாகும் எச்ச மில்லை;
நினைவிடுத்தால் எனக்குதவ யாரே உள்ளார்?
நேரிழையே நின்பெயரை வாழ்த்தி நிற்பேன்;
வினைமுடித்துத் திரும்'பெனவேல் விழியு ரைத்தாள்;
வேண்டுதியோ [16]உடன்படுமெய்' என்றாள் தோழி. 18

'கலக்கத்தாற் குழம்புமெனை விளங்கக் கூறி
கனிமொழியால் தெளிவுறுத்த முனைத லின்றி,
இலக்கணத்தாற் குழப்புகின்றாய்! புரிந்து கொள்ள
இந்நிலையில் இயலுவதோ?' என்றாள் செல்வி;
'குலக்கொழுந்தே! உயிரிரண்டு கூடுங் காலைக்
கூட்டுவிக்கும் உடன்படுமெய் போல உங்கள்
இலக்குடைய உயிரிரண்டைக் கூட்டு விக்கும்
எழில்மணத்தை அப்பெயராற் குறித்தேன்' என்றாள். 19

[17]'புணர்ச்சிக்கு விதிசொல்ல வல்லாய்! எங்கள்
[18]புணரியற்கும் விதிசெய்ய வேண்டும்; தந்தை
உணர்ச்சிக்கு வயமாகி மறுக்கா வண்ணம்,
உரைக்குமுறை யாலுரைத்து, வீரனுக்கே
[19]இணர்த்தொடையல் நான்சூட்டி மணமே கொள்ள,
இசைவிப்பாய்; என்னுயிர்நின் கையிற் றந்தேன்;
[20]துணர்க்கொடியின் இடையுடையாய்! தூதுசென்று
துணைதருமோர் மங்கலச்சொற் கொணர்க' என்றாள்.20

* * * * * * * *

வேந்தன்பால் தூதுரைக்கச் சென்ற தோழி
வேல்விழிக்கு மணமுடிக்க வேண்டி நின்றாள்

* * * * * * * *

தோழியுரை கேட்டரசன் நகைத்து நின்று
'துடியிடையாள் மணமுடிக்க முயன்ற உன்னை
வாழியென வாழ்த்துகின்றேன்; நாளை யந்த
மாவேழன் தனைக்கூடி அளவ ளாவி,
ஏழிசையின் இயமுழங்கச் சான்றோர் வாழ்த்த
இளவரசி மணமாலை சூடும் நல்ல
நாழிகையும் மங்கலநன் னாளும் ஆய்ந்து
நகருக்கு முரசறைந்து சொல்வோம்' என்றான். 21

* * * * * * * *

முரசம் ஆர்த்தது முழவொலி கேட்டது
அரசன் மகளை அடைந்தனன் வேழன்.

குறித்தமண நாள்வரலும் கொற்ற வன்றன்
கோயிலெலாம் தெருவெல்லாம் மக்கள் கூடிச்
சிரித்தமுகங் கொண்டங்கு நிறைந்து நின்றார்;
சேர்ந்தவருள் மன்னரென்றும் மக்கள் என்றும்
பிரித்தறிய முடியாமற் கலந்து நின்றார்;

பெரும்புலவர் தம்வாயால் வாழ்த்தி நின்றார்;
விரித்தஇதழ் மலர்மாலை சூட்டி வேழன்
வேல்விழியைக் கைப்பிடித்தான் துணையாக் கொண்டான் 22

மாமலையிற் பிறந்தஒரு மணியும், பூமி
மண்ணுக்குள் புதைந்திருந்த பொன்னும் ஒன்றாய்த்
தாமருவி அணிகலனாய் விளங்கல் போலத்
தனிமகளாம் வேல்விழியும் வேழன் றானும்
பூமருவு மணமாலை பூண்டு நெஞ்சுட்
புகுந்திருவர் ஒருவரென ஆகி நின்றார்;
தாமரையும் மணமுமென இல்ல றத்தில்
தாமிணைந்தோர் அணிகலனாய் விளங்கி நின்றா 23

* * * * * * *

திருமண மாகிய இருவரும் நிலவிற்
பெறுபயன் துய்த்துப் பெருமகிழ் வெய்தினர்.

வந்தயர்ந்த விருந்தினரும் பகலும் ஓய
மணங்கண்டு மேற்றிசையில் கதிரோன் சாயச்
சந்தனத்துப் பொதியமலைப் பிறந்த தென்றல்
தண்மலர்கள் பலநீவி உலவி நிற்கப்
பந்துருண்டு வந்ததென மதியம் வானில்
படர்ந்துவரும் முகிலுக்குள் தவழ்ந்து செல்ல
முந்துமிகு நெஞ்சங்கள் துடித்து நிற்க
முதலிரவு வந்ததுவே இன்பம் நல்க! 25

பூமணமும் புகைமணமும் [21]துதைந்து சுற்றும்
புகுமிடங்கள் ஒப்பனையாற் பொலிந்து முற்றும்;
தூமலரின் சரங்களெலாம் அசைந்தி ருக்கும்;
[22]தூவியுடன் பூவிதழும் கலந்தி ருக்கும்
காமமுறு பஞ்சணையும் விரித்தி ருக்கும்;
கட்டிலொடு கண்ணாடி இணைந்தி ருக்கும்;
தாமரைபோல் அமைந்தஒளி விளக்கி ருக்கும்;
தண்ணியமென் தென்றல்வர வழியி ருக்கும். 26

பாலிருக்கும், வகைவகையாய்ச் சுவைகள் நல்கும்
பழமிருக்கும், பக்கமெலாம் எழிலி ருக்கும்;
மேலிருக்கும் கூரையெலாம் வரைந்தி ருக்கும்
மேன்மைபெறும் ஓவியங்கள் நிறைந்தி ருக்கும்;
[23]சேலிருக்கும் புனலலைகள் நெளிதல் போலத்
தென்றலிலே திரைச்சீலை அசைந்தி ருக்கும்;
வேலிருக்கும் விழியாளும் வேழன் றானும்
விரித்திருக்கும் மாளிகையுட் புகுந்தி ருந்தார். 27

புகுந்தவர்தாம் புதுமைமிகும் உலகிற் சென்று
புக்கவர்போல் அமர்ந்திருந்தார்; இருவர் நெஞ்சும்
தகுந்தகுமென் றாசையினால் படப டத்துத்
தாளமிட உணர்ச்சிகொண்டார்; [24]வடுவின் காயை
[25]வகுந்ததெனும் விழியாலே அவன்ந லத்தை
வாரியுண்டாள்; அவனுந்தன் விழிம லர்த்தி
நகுங்கமல முகத்தாளின் அழகை எல்லாம்
நனியுண்டு மயங்கிமனங் களித்தி ருந்தான். 28

கையொன்றால் சேயிழையின் மென்தோள் பற்றிக்
கன்னத்தை மற்றொன்றால் தொட்டான்; அந்தக்
கையொன்றா முன்னமவள் நாணங் கொண்டு
காளையவன் தடந்தோளில் முகம்பு தைத்தாள்;
மெய்யொன்றும் பொழுதத்தில் இருவர் தாமும்
மேனாளிற் கண்டறியா இன்பங் கண்டார்;
பொய்யென்றார் இவ்வாழ்வை அறியா மாந்தர்;
புதுமையிது புதுமையிது என்று வந்தார். 29

காணாத இன்பத்தான் அவள்பாற் கொய்யாக்
கனிகொய்தான்; முகஞ்சிவந்து பெண்மை நாணம்
பூணாகக் கொண்டவளும் கொழுநன் றன்னைப்
பூங்கொடிபோல் தன்னுடலால் தழுவிக் கொண்டாள்;
[26]‘பாணாக வண்டார்க்கும் பொய்கைப் பக்கம்
பார்த்தென்பாற் பூங்கொடியை வேண்டி நின்றீர்!
[27]நாணாளும் நுமைப்பற்றிப் படர்ந்து வாழும்
நல்லகொடி யாகிவிட்டேன் கொள்க’ என்றாள். 30

பாலறியார் பழமறியார் ஆனால் அந்தப்
பாற்சுவையும் பழச்சுவையும் நன்கு ணர்ந்தார்;
நூலறியார் கவிநுகரப் புகுதல் போல
நுழையினும்பின் சொலற்கரிய இன்பங் கண்டார்;
வேலறிவான் வாளறிவான் எனினும் இன்று
வேலறியாக் களங்கண்டான்; வெற்றி கண்டான்;
[28]மாலவள்தன் விழிவேலால் தோற்புங் கண்டான்;
வளர்நிலவுப் பயன்முழுதும் வாரி யுண்டான். 31

* * * * * * *

புணர்ந்து திகழ்ந்தோன் பூவையின் நலத்தை
உணர்ந்து புகழ்ந்தான் ஒண்டொடி மகிழ்ந்தாள்.

‘புலனைந்தாற் பெறுமின்பம் அனைத்தும் என்றன்
பூங்கொடிபால் நுகர்ந்ததனுள் திளைத்தேன்; நல்ல
குலனுவந்த நினைக்கண்டு கொண்ட காதற்
கொடுநோய்க்கு நீயேநன் மருந்தாய் நின்றாய்!
[29].கலன்சுமந்த மென்தோளில் துயிலும் இன்பம்
கண்காணாத் [30]துறக்கத்தை விஞ்சக் கண்டேன்!
நலனுகர்ந்து விலகுங்கால் சுடுதல் கண்டேன்
நண்ணுங்கால் தண்ணென்னும் விந்தை கண்டேன்! 32

நின்னலனை அறிதோறும் முன்னர் என்பால்
நின்றிருந்த அறியாமை கண்டேன்’ என்று
பொன்னனையாள் புணர்ச்சியினால் மகிழ்ந்து ரைத்தான்;
புரிநகையில் முல்லையுடன் கொவ்வை கண்டேன்
மின்னுமொளி மேனியினில் தளிரைக் கண்டேன்
மீன்விழியில் குவளைமலர் மிளிரக் கண்டேன்
சின்னஒரு மின்னலிடை துவளக் கண்டேன்
[31]செய்யமலர் நின்முகத்தில் மலரக் கண்டேன். 33

[32]முகிலிடையே மலர்முல்லை கண்ட தில்லை
மொய்குழலில் அம்முல்லை மலரக் கண்டேன்;
[33]துகிலுடைய மாங்கனியைக் கண்ட தில்லை
தோள்தொட்ட பின்னரதைக் கண்டு கொண்டேன்;
[34]நகையுடைய முல்லைக்கு வரிசை யில்லை
நானின்றவ் வரிசைதனை நின்வாய்க் கண்டேன்
புகலரிய இனிமைக்கு வடிவ மில்லை
பூமகளே நின்னுருவில் அதனைக் கண்டேன். 34

வானத்து முழுமதிதான் நின்மு கத்து
வடிவழகுக் கொப்பாகத் தவங்கி டக்கும்;
[35]மீனத்து நடுவிலது மேன்மை பெற்றும்
மேற்பொருந்தும் களங்கத்தால் உவமை யாகா
மானத்து நல்லுணர்வால் வெட்கி யங்கு
மாமுகிலுட் புகுத்தொழிந்து போதல் காண்பாய்!
[36]நானத்தும் எழிலுருவப் பாவாய்! நின்றன்
நலத்தைஎலாம் எவ்வண்ணம் புகழ்வேன்’ என்றான்.35

உணர்ச்சியினால் மெய்தழுவி என்றுங் காணா
உலகினுக்கு மாவேழன் அழைத்துச் சென்று
புணர்ச்சியினால் அவன்திளைத்து மகிழ்ந்து ரைத்த

புகழ்மொழிகள் அத்தனையும் மயங்கிக் கேட்டாள்;
உணற்குரிய நலமெல்லாம் உண்ட பின்னர்
உவந்துதலம் பாராட்டி உரைத்த சொல்லால்
துணர்க்கொடியின் மெல்லிடையாள் துவண்டி ருந்தாள்
தொல்லுலகைத் தன்னிலையை மறந்தி ருந்தாள். 36

புகழ்மொழிகள் தரும்மயக்கம் வேழன் தந்த
புணர்ச்சியினால் வரும்மயக்கை விஞ்சி நிற்கும்;
புகழ்மொழிகள் தந்நலத்தை வெறுத்து விட்ட
பொதுநலத்துத் தொண்டரையும் மயக்கு மென்றால்
வகிர்வடுவின் விழிமகளிர் நெஞ்சை மட்டும்
வாட்டாமல் வளைக்காமல் விட்டா போகும்?
திகழ்மலர்கள் உதிர்ந்திருக்கும் அணையின் மீது
திருமகளும் சொக்கியிமை குவித்தி ருந்தாள். 37

ஆண்மைக்கோர் உவமைசொலும் உலக வீரன்
ஆணழகன் மாவேழன் என்னும் நம்பி
[37]வாண்மைக்கண் மாதரசி பாரில் இல்லா
வடிவழகி வேல்விழியாம் நங்கை, அன்புக்
கேண்மைக்கோர் இலக்கியமாய் இல்ல றத்துக்
கிழமைக்கோர் இலக்கணமாய் வாழ்ந்து வந்தார்;
[38]வேண்மைக்கோர் உறுபயனைக் காதல் வாழ்வின்
விளைவுதனைக் கண்டுவக்கும் வாய்ப்பும் பெற்றார். 38

* * * * * * *

மயங்கினள் ஒருநாள் மாது
வாடினன் வேழன்அப் போது.

மாடத்து நிலவரங்கில் ஒருநாள், காதல்
மணிப்புறவாய் அவ்விருவர் மகிழும் போது
கூடத்துச் சென்றவள்வாய் குமட்டி நின்றாள்;
கொடுவேலான் பதைத்தோடித் தோள்கள் பற்றிப்
பீடத்தின் பஞ்சணையின் சேக்கை சேர்த்தான்;
பேதையதன் மிசைமயங்கிக் கொடிபோற் சாய்ந்தாள்;
வாடத்தன் காதலிக்கு வந்த தென்கொல்?
வாய்குமட்டி நின்றதென்கொல்? எனத் துடித்தான்.39

மெல்லியகால் சுரந்துசிறி ததைத்தி ருக்க,
மேனியெலாம் பசந்ததுபோல் தளர்ந்தி ருக்க,
வல்லியவள் முகஞ்சிறிது செம்மை மாறி
வாட்டமுடன் விளர்த்திருக்கக் கண்டான்; போரிற்
கொல்லியலின் திறங்கண்டும் இளகா நெஞ்சன்
கோதையிவள் நிலைகண்டே இளகி விட்டான்;
வல்லினமும் மெல்லினத்தைக் கூடுங் காலை
வலிகுறைந்து மென்மைபெறல் உண்மை யன்றோ!40

குளிர்புனலை மலர்முகத்தில் தெளித்தான்; சற்றே
குறைவுபட மயக்கொழிந்து தெளிந்தாள்; 'நின்றன்
தளர்நிலையைக் கண்டுள்ளம் நடுங்கி விட்டேன்
தளிர்மேனிக் கிந்தநிலை வந்த தென்கொல்?
விளரியதுன் முகமென்கொல்?' எனப்ப தைத்து
வினவியவற் 'கொன்றுமிலை' என்று சொல்லி
[39]முளரிமுகம் ஒருசிறிது கவிழ்த்து, நாணி,
முறுவலித்து, வேல்விழியாள் அகன்றாள் ஆங்கே. 41

காய்ச்சிநல் லாவின்பால் கொண்டு வந்து
கைக்கொடுத்தாள் உயிர்த்தோழி; பாலை வாங்கி
வாய்ச்சிறிது வார்த்தவுடன் கடிந்து கொண்டாள்;
வாழ்கின்றார் காதலர்தாம் எனது நெஞ்சுள்,
போய்ச்சுடுமென் றறியாயோ? விஞ்சும் சூடு
போகாமல் கொணர்ந்தனையே! போபோ என்று வேய்ச்சிறுமென்தோளுடையாள் சினந்தாள்
ஓர்நாள்;வேறறியவொண்ணாமல் ஒன்றி நின்றாள். 42

* * * * * * *

போதவிழும் மலர்முகத்தாள் தாய்மை கொண்டாள்;
பூங்கொடியில் அரும்பொன்று பூக்கக் கண்டாள்.

மற்றொருநாள் மாடத்துத் தனித்தி ருந்து
மாவின்காய் ஒன்றெடுத்துப் பாவை தின்றாள்;
பற்றுடனே வேல்விழிபால் வந்த வேழன்
பார்த்ததனை நகைக்கஅவள் மறைத்துக் கொண்டாள்;
'முற்றியநற் கனியிருக்கக் காயை வேண்டும்
[40]முழுமதியை என்னென்பேன்'! என்றா னாக,
நெற்றியிலே பாதிமதி யுடையாள் 'இந்த
நேரத்தில் காயொன்றே இனிக்கும்' என்றாள். 43

'கனியாத காயினிக்கும் நேர மொன்று
கண்டதிலை விந்தையிது' வெனந கைத்தான்;
'இனிதாக மண்ணுடனே சாம்பர் தின்னும்
இந்நேரம் புளிப்பென்ன கைத்தா போகும்?
தனியான இன்புலகில் இருவேம் மட்டும்
தனித்திருந்தோம் மகிழ்ந்திருந்தோம்; நமது காதற்
கனியாக அன்புக்கோர் சின்ன மாகக்
காணுகின்றேன் என்வயிற்றில் மற்றோர் ஆவி. 44

தாயாகும் நிலையெனக்கு வாய்க்கும் பேறு
தந்தவற்கே சொல்லாமல் மறைத்து வைத்தேன்
[41]காயாமல் பொறுத்தருள்க' என்றாள் மங்கை;
களிப்பதனாற் பெருமுழக்கம் செய்தான் வேழன்;
'சேயாக ஒருமகனை எனக்க ளித்தாய்!
சிந்தைஎலாம் இனிக்கின்ற செய்தி சொன்னாய்!
ஓயாத பெருவலியன் மற்றோர் வீரன்
உலகத்தில் தோன்றுகின்றான்! வீரங் காப்பான். 45

* * * * * * *

---

**அருஞ்சொற் பொருள்:—**

1.காணம்—பொன். 2.வேய்—மூங்கில். 3.சேயிதழ்—சிவந்தஇதழ்.

4, 5—இருபாடல்களும் காதற் குறிப்பை நயம்பட உரைக்கின்றன.

4.நத்துவது—விரும்புவது. 5.பூஆரும்—பூநிறைந்த. 6.ஞான்று—பொழுது. 7.வட்கார்—பகைவர். 8.அட்டு—கொன்று. 9.சரம்—அம்பு. 10.உன்னி—நினைத்து. 11.குரு—(அழகிய)நிறம். 12.இயம்—வாத்தியம். 13.பொலிந்த—பொலிந்தன. 14.படி—பூமி. 15.நெருநல்—நேற்று.

*18ஆம் பாடலில் இலக்கணச் சொற்கள் நயம்பட வந்துள்ளன.

16.உடன்படுமெய்—இரண்டு உயிரைச் சேர்த்துவைக்கும் மெய்யெழுத்து. 17.புணர்ச்சி—இலக்கணப்புணர்ச்சி. 18.புணரியல்—தலைவன் தலைவியர் கூட்டம். 19.இணர்த்தொடையல்—பூங்கொத்து மாலை. 20.துணர்—பூங்கொத்து. 21.துதைந்து—நெருங்கி. 22.தூவி—அன்னத்தின் மெல்லிறகு. 23.சேல்—கயல். 24.வடு—மாவடு. 25.வகுந்தது—பிளந்தது. 26.பாண்—பாடல். 27.நாணாளும்—நாளெல்லாம்.28.மாலவள்—இன்பமயக்கமுடையவள். 29.கலன்—அணிகலன். 30.துறக்கம்—சுவர்க்கம். 31.செய்யமலர்—செந்தாமரை. 32.முகில்—மேகம். 33.துகில்—ஆடை. 34.நகை—ஒளி. 35.மீனம்—விண்மீன்கள். 36.நானத்தும்—நான் நத்தும். 37.வாண்மைக்கண்—வாள்போன்ற மைபூசிய கண்கள். 38.வேண்மை—விரும்புத்தன்மை. 9.முளரி—தாமரை. 40.முழுமதி—பேரறிவு (நகைக்குறிப்பு). 41.காயாமல்—கோபிக்காமல்.